அறிவு விளக்கக் கதைகள்.

(முதலாம் பகுதி)

மதுரை ஜில்லா, செம்பூர்

வித்துவான்,

V. ஆறுமுகம் சேர்வையவர்கள்

தொகுத்தது.

THE MADURAI TAMIL SANGAM

பிரசுர கர்த்தர்:

இ. மா. கோபால கிருஷ்ணக் கோன்,

புத்தக வர்த்தகர், மதுரை.

1932.

பதிப்புரிமை] [விலை அணா, 8.

பொருள் அடக்கம்.

எண்	விஷயம்	பக்கம்
	I. நட்புப் பிரித்தல்.	
1.	'தீயோர் சொல் கேட்பதுவுந் தீதே.'	1
2.	தீமக்குத் தகாத காரியத்தைச் செய்வோரடையும் பயன்	18
3.	தொனியைக் கேட்ட மாத்திரத்திலேயே பயப்படலாகாது	19
4.	மனிதர்களுக்கு அவர்கள் செய்யும் குற்றத்தினுலேயே இடர் வரும்	21
5.	அற்ப சுகங் கருதித் தீங்கு வருமிடத்திற் சார்வார்க்கு அபாயம் வரும்.	25
6.	இடர் செய்யும் வலியாரை உபாயத்தால் வெல்லலாம்	27
7.	புத்தியள்ளார் தம்மைக்காட்டிலும் வலிய பகைவரையும் எளிதில் வெல்வர்.	29
8.	புத்திமானே பலவான்.	34
9.	துடுக்குள்ளவர் நேசமாகாது.	38
10.	சிறியர் உறவால் தீங்கு வரும்.	41
11.	சிறியாரோடும் அவர் வல்லமை யுணராமல் பகைத்தால், அவமானம் வரும்.	47

12. மித்திரர் சொல்லைக் கேளாதவர்க்குத் துன்பம் வரும். 50
13. துன்பம் வருமுன்னே ஜாக்கிரதையாக இருத்தல் வேண்டும். 52
14. மூடர்க்குப் புத்தி கூறினால் அபாயம் வரும். 55
15. நேயத்தில் வஞ்சனை செய்வோர் அழிவர். 56
16. சுகம் வருமென்றெண்ணிப் பொல்லாங்கான காரியம் செய்யலாகாது. 65
17. மித்திரர்க்கு மோசம் செய்வாரைத் தந்திரத்தால் வெல்ல வேண்டும். 68

II. நட்பின் பயன்:

1. புத்திசாலிகள் ஒருவர்க்கொருவர் உதவி செய்வார்கள். 73
2. பேராசைப்படுதல் பெருந் தீங்கு பயக்கும். 95
3. வஞ்சகரோடு உறவு கொண்டால், தீங்கு வரும். 100
4. புதியவனாக வந்தவனுடைய தன்மையை உணராமல், அவனோடு சிநேகங் கொள்ளலாகாது. 108
5. செல்வத்தின் பெருமை. 113
6. பேதமை யுடையார் பெருநஷ்ட மடைவர். 118

உ

முருகன் துணை.

அறிவு விளக்கக் கதைகள்

பகுதி - I

காப்பு

திருவுண்டாம் நல்லிசையாம் செல்வமுண்டாம் செம்மை
வருமா மதியுண்டாம் மன்னும் — பெருமையுண்டாம்
தந்திமுகத் தெந்தையிரு சந்தமலர்த் தாளைச்
சந்ததஞ்சே விப்பார் தமக்கு.

MADURAI TAMIL SANGAM

I. நட்புப் பிரிதல்

1. 'தீயார் சொல் கேட்பதுவுந் தீதே.

மதிமிகு பெரியோர் வார்த்தை
மதிப்பவர்க் குயர்வுண் டாகும்;
துதியிலாக் கீழோர் தீய
சொல்வழி நடப்போர் என்றும்
சதிசெயும் நரிசொல் கேட்டுச்
சார்ந்தநண் பிழந்து கெட்ட
பொதிகொளும் எருது சிங்கம்
போன்றுமாழ் கிடுவர் மாதோ.

(இதன் பொருள்) *உலகத்தில் அறிவு மிகுந்த பெரியோர்களுடைய வார்த்தைகளை மதித்துக் கேட்டு, அவற்றின் வழி நடப்பவர்க்கு மேன்மை யனைத்துங் கைகூடும்; துதிக்கப்படுத லில்லாத அற்பர்களுடைய துர்ப்போதனையான வார்த்தைகளைக் கேட்டுப் பின்வருவதை யுணராமல், அவற்றின்படி நடப்பவர், எப்*

பொழுதும் வஞ்சனையே செய்கின்ற ஒரு நரியின் மித்திர பேத வார்த்தைகளைக்கேட்டு, முன்னே தங்களுக்குட்பொருந்தியிருந்த இநேகத்தைக் கை விட்டு, ஒன்றோடொன்று பகை கொண் டெதிர்த்துக் கெட்ட பொதி சுமக்கும் ஓர் எருதையும் சிங்கத்தை யும் போன்று வருத்த மடைவார்கள்.

நரியின் சொல்லால் எருதும் சிங்கமும் கெட்ட கதை.

தென்னாட்டிலே யுள்ள மகிழாருப்பியம் என்னும் பட் டணத்தில்; வர்த்தமானன் என்னும் பெயரையுடைய ஒரு வர்த்தகனிருந்தான். அவனுக்கு மிக்க செல்வமிருந்தும், மேலும் பணஞ் சம்பாதிக்க வேண்டுமென்னும் விருப்பத் தால், வேற்றூர் சென்று, வியாபாரஞ் செய்தற் பொருட் டுத் தன்னிட மிருந்த சரக்குகளை வண்டியிலேற்றி, அதில் சஞ்சீவகன் நந்தகன் என்னும் பெயருடைய இரண்டு எருது களைப் பூட்டி, அவ்வண்டியைச் செலுத்திக்கொண்டு, தான் கருதிய விடத்தை நோக்கிப் போனான். போகும்போது, மரங்க ளடர்ந்த ஒரு காட்டின் நடுவே, சஞ்சீவகன் என் னும் எருது, வண்டியில் மிகுந்திருந்த பாரத்தைச் சுமக்க முடியாமல், காலிடறிக் கீழே விழுந்து, ஒரு கால் முறிந்து, நொண்டியாயிற்று. அப்போது வர்த்தமானன், வேறோர் எருதை வண்டியிற் பூட்டிக்கொண்டு, சஞ்சீவகன் என்னும் எருதை அவ்விடத்திலேயே விட்டு, அதனைக் காப்பாற்றும் படி ஒரு மனிதனை அதற்குக்காவலாக வைத்துச் சென்றான். பிறகு அந்தச் சேவகன், அவ்வெருதைக் காத்திருப்பது தனக்குக் கஷ்டமாயிருந்தபடியால், இரண்டு மூன்று தினங் கள் கழித்து, அதனை உயிருடன் அவ்விடத்தில் விட்டு, வர்த்தமானனிடத்திற்சென்று, "சஞ்சீவகன் கால் வேதனை யால் இறந்து போயிற்று," என்று பொய் கூறித் தன் கஷ்டத்தை நீக்கிக்கொண்டான்.

காட்டில் விடப்பட்ட சஞ்சீவகன் என்னும் எருது, ஆயுள் பலத்தினாற் பிழைத்து, புல் பூண்டு முதலிய வற்றை வயிறாரத் தின்று, பருத்துக் கொழுத்து, முறிந்த காலுங் கூடி, மிக்கமகிழ்ச்சியோடு அங்கே சுயேச்சையாகத்திரிந்து கொண்டு இருந்தது. அப்பொழுது அக்காட்டில் வசிக்கும் பிராணிகளுக்கு எல்லாம் அரசாய், வேறொன்றும் தனக்கு இணையில்லாமல் அவ்விடத்திற் றங்கியிருந்த பிங்களன் என்னும் ஒரு சிங்கம், ஒரு நாள் தாகங் கொண்டு, அக்காட்டைச் சார்ந்திருந்த யமுனை யாற்றங்கரைக்குச் சென்று, தண்ணீர் பருகும் பொருட்டு, தலையைக் கவிழ்த்துக் குனிந்தது. அத்தருணத்தில் சஞ்சீவகன், பக்கத்தில் மறைவாக நின்று, அந்தச் சிங்கம் என்றைக்கும் கேட்டறியாத விதமாகத்திடீரென்று பேரிடிமுழக்கம்போல் முக்காரம் * இட்டது. அதைக் கேட்டவுடனே சிங்கம் திடுக்கிட்டு, "அடா அப்பா! இஃது என்ன? பேரிடிபோன்ற முழக்கமா யிருக்கின்றதே! நாம்என்றைக்கும் இவ்வித பயங்கரமானதொனியைக் கேட்டதில்லையே! நமக்கு இக்காட்டில் எதிரி இல்லையென்று நாம் நினைத்திருந்தோம்; இன்றைக்கு எவனோ ஒரு பெரிய பகைவன் தோன்றியிருக்கின்றான்; தொனியைக் கேட்கும்போது, அவன் நம்மினும் எத்தனையோ மடங்கு அதிகம் வலிமை உள்ளவனாகத் தோன்றுகின்றான். இது விபரீத காலமா யிருக்கிறது; இதற்கு நாம் என்ன செய்யலாம்?" என்று பல் விதமாக ஆலோசித்து, நீர் பருகாமல், அப்படியே தலையை மேலே தூக்கிக்கொண்டு, மிகவுந் தூக்கித்து, அசைவற்று நின்றது.

---

* முக்காரம்—எருது, எதிரியைப் போர்க்கழைக்கும் குறியாக இடுந் தொனி.

அப்போது அந்தச் சிங்கத்தினுடைய மந்திரியாகிய ஒரு நரியின் குட்டிகளாகிய கரடகன் தமனகன் என்னும் நரிகளிரண்டும், அங்கே வந்து, ஒரு பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு, சஞ்சீவகனுடைய தொனியைக்கேட்டுப் பயந்து சந்தேகங்கொண்டு சிங்கம் நீர் பருகாமல் நிற்பதைக்கண்டு, அந்தச் சிங்கத்தினுடைய மதியீனத்தைப்பற்றி ஆச்சரிய மடைந்தன. அவ்வாறு ஆச்சரிய மடைந்து, அவ்விரண்டும் வார்த்தையாடத் தொடங்கின. அவற்றுள் தமனகன், கரடகனைப் பார்த்து, "நம்முடைய அரசன் தண்ணீர் பருகாமல் நிற்கும் விநோதத்தைப் பார்த்தாயா?" என்று கேட்டது. கரடகன், "அதைப்பற்றி நீ ஏன் கவனிக்கிறாய்? அதற்கும்நமக்கும் வெகுதூரம்," என்றது. அதைக்கேட்டவுடன் தமனகன், "நீ இவ்வாறு கூறுவது சரியன்று; நாம் மந்திரி குமாரர்களாயிருந்தும் அரசன் காரியத்தைக் கருதாதிருப்பது தகாது; நீ சுயநலத்தைக் கருதுகிறாய்; இப்போது நம்முடைய அரசன் ஒருவன் தொனியைக் கேட்டு யாதோ என்று சந்தேகித்து, நீர் பருகாதிருக்கின்றான்; ஆதலால், அவனிடத்திற் சென்று, அவனுடைய சந்தேகத்தை நீக்கி, அவனுக்கு இதத்தைச் செய்து வருகின்றேன்," என்று சொல்லிக் கரடகனுடைய சம்மதத்தைப் பெற்றுக் கொண்டு, சிங்கத்தினிடம் சென்று, அதனை வணங்கிற்று.

அப்போது சிங்கம், உட்காரும்படி அதற்குக் கட்டளையிட்டுப் பின் அதனை நோக்கி, "நீ ஏன் நெடுநாளாக நம்மிடம் வரவில்லை?" என்று வினவ, தமனகன், "சுவாமி, எனக்குத் தங்களிடம் வரத்தக்க காரியமொன்றும் ஏற்படாததனால், சில நாட்களாக நான் இங்கு வரவில்லை; இப்போது தேவரீரிடத்திற்கு வருதற்கு அவசியமான காரியம் நேர்ந்தது; அதனால், வந்தேன்: அரசர்களாயிருப்ப

வர்கள் பலரையு மாராய்ந்து தமக்குப் பிரயோஜனமானவர்களைத் தம்முடைய காரியக்காரர்களாக்கிக்கொள்ள வேண்டும். என்றால் உமக்குப் பிரயோஜனம் உண்டு; என்னைச் சிறியவனென்று அசட்டை பண்ணலாகாது. சிறு துரும்பும் பல்லுக் குத்த உதவும்; ஒருவனுடைய உருவத்தைக் கவனியாமல் குணத்தையே கவனிக்க வேண்டும். நான் சமயத்துக்குத் தகுந்தபடி காரியம் நடத்த வல்லவன்; என்னைப்போன்ற சமர்த்தன் அண்டையிலிருக்கப் பெறாத அரசனுக்கு அபகீர்த்தியுண்டாகும்; ஆதலால், நீர் என்னை உம்முடைய காரியக்காரனாக்கிக்கொள்ள வேண்டும்," என்று கூறிற்று.

இந்தவார்த்தைகளைக்கேட்டவுடனே சிங்கம், அதனை நோக்கி, "தமனகா, நீ என் பிரதானி புத்திரன்; ஆதலின், என்னுடைய காரியங்களைப் பார்க்கும்படி உனக்கு நான் கட்டளையிட வேண்டுவதில்லை; நீயே அவற்றைச் செய்யக் கடமைப்பட்டிருக்கின்றாய்; இப்போது என்னிடம் பேச வேண்டிய காரியம் இருந்தால் பேசு," என்று சொல்ல, தமனகன், சுவாமி, தேவரீர் இப்போது தண்ணீர் பருக வந்தும், அதனைக் குடியாமல், ஏதோ ஒன்றால் பயந்தவர் போல மெய்ம்மறந்து நிற்கின்றீரே; இதற்குக் காரணமென்ன?" என்று வினவிற்று. சிங்கம், "நீ சொல்லுகிறபடி நான் மெய்ம்மறந்து நிற்பது உண்மைதான்; நான் நெடுங்காலமாக இக்காட்டில் சுகமுற்று வாழ்ந்தேன்; ஆயினும், இப்போது இவ்விடத்தை விட்டுவிடத் தக்க சங்கடம் நேர்ந்திருக்கின்றது: இங்கே மேக முழக்கம் போல் திடீரென்று ஒரு தொனியுண்டாயிற்று; அப்படிப்பட்ட தொனியை நான் என்றுங் கேட்டதேயில்லை; அந்தத் தொனியைக் கேட்டவுடன் என் நெஞ்சந் திடுக்கிட்டு

விட்டது; 'தொனியே இப்படி இருக்கின்றதே! இதை யுடையவன் எப்படிப் பட்டவனோ!' என நான் மிகவும் நடுங்கிப் போய்விட்டேன்; அதனாலேதான் தண்ணீர் பருகாமல் நான் பல வித யோசனையோடு இவ்வாறு நிற்கின்றேன். ஒருவன் காலிடறிக் கீழே விழும் சமயத்தில் அவனுக்கு ஊன்றுகோல் கிடைத்ததுபோல நீ என்னிடம் வந்து சேர்ந்தாய்; இப்போது நிகழ்ந்திருக்கும் இக்காரியத்திற்கு என்ன செய்யலாம்? உன்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்," என்றது. உடனே, தமனகன், "சுவாமி, ஒருதொனியைக் கேட்ட மாத்திரத்திரத்திலேயே பயங் கொள்ள லாகாது; அஃது எதனா லுண்டானது என ஆராய்ந்தறிந்த பின்னரே ஒரு காரியத்தைச் செய்யத் துணிய வேண்டும்; நெருங்கிப் பார்த்தால், அங்கே நாம் பயங் கொள்ளத் தக்க விஷயம் ஒன்றுமில்லாமற் போனாலும், போகும். ஆதலால், எனக்கு நீர் உத்தரவு கொடுத்தால், உடனே போய், அந்தத் தொனியின் மூலத்தை அறிந்து வருவேன்." என்று சொல்ல, அச்சிங்கம் அவ்வாறே போய் வரும்படி உத்தரவு கொடுத்தது.

உடனே தமனகன், சஞ்சீவக னென்னும் எருதினிடம்போய், இதமான வார்த்தைகளைப் பேசி, முதலில் அதனைச் சிநேகம் பண்ணிக்கொண்டு, பின்பு சிங்கத்தினுடைய குணங்களைப்பற்றிப் புகழ்ந்து கூறி, அதனோடு உறவு கொள்ளுதற்கு இணங்கும்படி செய்துவிட்டுத் திரும்பி வந்து, சிங்கத்தினிடம், "சுவாமி, தங்கள் கட்டளைப்படியே, தொனியுண்டான விடத்தைப் போய்ப் பார்த்தேன். அங்கே அந்தத் தொனியைச் செய்தவன் நிற்கின்றான். அந்தத் தொனிக்குத் தக்கபடி தாங்கள் கருதியவாறே அவன் மிகவும் புஷ்டியுடையவனாகவே

இருக்கின்றான்; ஆயினும், தாங்கள் நினைத்தபடி அவன் தீங்கியற்றக் கூடியவனாகத் தோற்றவில்லை; தங்களோடு சிநேகமாயிருக்க விரும்புகிறான். கட்டளையிட்டால், இப் பொழுதே போய் அவனைத் தங்கள் திருச்சமுகத்திற்கு அழைத்துக்கொண்டு வருகின்றேன்,'' என்றுரைத்தது. சிங்கம், "அப்படியானால், நீ அவனை இங்கே அழைத்து வா,'' என்று கட்டளையிட்டது. உடனே தமனகன் எருதி னிடம் சென்று, அதனை அழைத்து வந்து, சிங்கத்தினிடம் சிநேகம் பண்ணுவித்தது. பின்பு, பிங்களனும் சஞ்சீவ கனும் நாளுக்குநாள் நட்பு அதிகரித்தவைகளாய், வாழ்ந்து வந்தன. அக்காலத்தில் அவைகளுக்கு உறவு அதிகரிக் கவே, அவைகள் மற்றப் பிராணிகளைத் தங்களுக்கு அவ சியமானவைகளாகக் கருதாமல் இருந்ததோடு, தங்களைச் சிநேகம் பண்ணுவித்த தமனகன் முதலிய பிராணிகளையும் சட்டைபண்ணாமல் இருந்தன.

தங்கள் அரசாகிய சிங்கம், இவ்வாறு புதிய சிநேகம் பண்ணிக்கொண்டு தங்களைக் கருதாமல் இருக்கவே, தமன கனுக்கும் கரடகனுக்கும் இரையொன்றும் அகப்படாமற் போயிற்று. அதனால், அவ்விரண்டும் ஒரு நாள் சிங்கத்தி னுடைய காரியத்தைப்பற்றி யோசிக்கத் தொடங்கின: தமனகன், கரடகனை நோக்கி, "கரடகா, காட்டிலே தன் னந் தனியாய்ச் சஞ்சரித்துச் சஞ்சீவகன் தொனிக்கும் பயந்திருந்த பிங்களனுடனே, நாம் அச்சஞ்சீவகனைச் சிநேகம் பண்ணுவித்தது, யானையானது தன் மத்தகத் தைப் பிளக்கும்படி அங்குசத்தை யெடுத்துப் பாகன் கையிற் கொடுத்தது போன்றிருக்கின்றது. சஞ்சீவகன் சிநேகம் கிடைத்தவுடனே நம் அரசன் நம்மைத் தேடா மல் விட்டு விட்டான்; அவ்விருவரும் மிகச் சந்தோஷமாய்

வாழ்கின்றனர்; இதனாலேயே நமக்கிரை கிடைக்காமற் போயிற்று; அவர்களுடைய சிநேகத்தைக் கெடுத்துவிட்டாற்றான் நமக்கு ஏதாவது இரையகப்படும்," என்று சொல்லிற்று. அதைக்கேட்டுக் கரடகன், "இந்தப் பிங்கள சஞ்சீவகர்களுடைய சிநேகத்தைப் பிரித்தல் எவ்வாறு முடியும்? மணியினின்றும் ஒளியானது எவ்வாறு பிரிக்கக் கூடாததாயிருக்கிறதோ, அவ்விதமே இவர்களுடைய சிநேகமும் பிரிக்கக் கூடாததா யிருக்கிறது; ஆதலால், இது முடியாத காரியம்," என்று சொல்ல, தமனகன் அதனை நோக்கி, "கரடகா, நீ அப்படிச் சொல்லவேண்டா; ஆகாத காரியமும் உபாயத்தாலாகும்; புத்தியுள்ளவனுக்கு எல்லாப் பலமு முண்டு; புத்தியில்லாதவனுக்குச் சுலபமான காரியமும் கை கூடாது; ஆகையால், புத்தியோடு காரியத்தை நடத்தினால், இந்தக் காரியம் சித்தியாகும்; என்னுடைய சாமர்த்தியத்தால், இவர்களுடைய உறவைப் பிரித்துவிடுவேன்," என்று சொல்லிற்று. கரடகன், "அப்படியானால், நீ பிங்களனிடம் சுகமாகப் போய், உன்னுடைய காரியத்தை முடித்துக்கொண்டுவா; உனக்கு மங்களம் உண்டாகுக," என்று கூறி, கரடகன் தமனகனைச் சிங்கத்தினிடம் அனுப்பிற்று.

உடனே, தமனகன் புறப்பட்டுச் சிங்கத்தினிடம் போய், அதற்கு வணக்கஞ் செய்து, "சுவாமி, உமக்கு இன்றைக்கு ஒரு தீங்கு நேரிட்டிருக்கிறது; உம்முடைய கட்டளை யில்லாமலே அதனைத் தெரிவிக்கும்படி நான் இப்போது உம்மிடம் வந்தேன்," என்று சொல்ல, சிங்கம் "அஃது என்ன பொல்லாங்கு? சொல்," என்று வினவிற்று. அங்ஙனம் வினவவே, தமனகன், "சுவாமி, உம்முடைய சினேகனாகிய சஞ்சீவகன், வெளிக்கு மாத்திரம்

உம்மிடம் விசுவாச முள்ளவன் போல நடித்துக்கொண்டு, மனத்தில் உமது இராஜ்யத்தை அபகரித்துக்கொள்ளத் தீர்மானித்திருக்கிறான்; இதைநீர் பொய்யென்று நினைத்து என்னைக் கோபித்தாலும் சரி; மெய்யென்று நினைத்துப் புகழ்ந்தாலும் சரி. அரசனுக்கு ஓர் ஆபத்து வருங்காலத்தில் அதனைப்போக்கத்தக்க உபாயங்களைத் தேடிச் செய்ய வேண்டுவது மந்திரிகளுக்குரிய தொழில். ஆதலால், நான் உமக்கு இவ்விஷயத்தைத் தெரிவித்தேன்,'' என்று சொல்லப் பிங்களன் இந்த வார்த்தைகளைக் கேட்டு, 'சஞ்சீவகன் இப்படியும் நினைத்திருப்பானா!' என்று சந்தேகமும் ஆச்சரியமுங் கொண்டு, மௌனமா யிருந்தது. அப்படி யிருப்பதைப் பார்த்த தமனகன், பின்னும் அதனை நோக்கி, ''சுவாமி, நான் சொல்லும் விஷயத்தில் உமக்கேதோ சந்தேகம் ஏற்படுகிறதுபோலக் காணப்படுகிறது; இவ்விஷயத்தில் எள்ளளவும் சந்தேகமில்லை; நீர் முன்பின் யோசியாமல் அவனை முக்கிய பிரதானி யாக்கினீர்; அதனால், அவனுக்கு மிக்க கர்வமுண்டாகி, அவன் தன்னை உமக்குச் சமான மானவ னாகவே கருதிக் காரியங்களை நடத்திக்கொண்டு வருகின்றான். அரசனும் பிரதானியும் சமான மானவர்களா யிருந்தால், அவ்விருவரில் ஒருவரை இராஜ லட்சுமி கைவிடுவோள்; ஓர் இராஜ்யத்தில் ஒருவனே முக்கிய பிரதானியா யிருந்தால், அவன் சுயேச்சையுடையவனாய்க் கர்வங் கொண்டு, இராஜ்ய காரியங்களைத் தானே நடத்துகிறவ னாதலால், அதில் இச்சை வைத்து, அதனை அபகரிக்க நினைத்து, அரசனைக் கொல்ல விரும்புவான். இவனும் அப்படியே நினைத்துத் தங்களைக் கொல்ல உறுதி கொண்டிருக்கிறான். ஆகையால், இப்படிப்பட்ட பிரதானியை வேரோடு களைந்துவிட வேண்டும். அப்படிச்

செய்யாவிடின், எப்படியாயினும் இவனால் தீங்கு நேரிடுவது திண்ணம்,'' என்று சொல்லிற்று.

இவற்றை யெல்லாம் கேட்டும், சிங்கம் புன்னகை கொண்டு, அதனை நோக்கி, "தமனகா, நீ என்ன சொன்னாலும், சஞ்சீவகனிடத்தில் நான் வைத்திருக்கும் சிநேகம் போகாது; அவன் எனக்குக் கெடுதி நினைத்தாலும், நினைக்கட்டும்; மித்திரர்களா யிருப்பவர்கள் பல தீங்குகளைப் பண்ணினாலும், அவற்றைச் சகித்துக்கொள்ளுவதே அறிவுடையோர்க்கு அழகு,'' என்று கூற, தமனகன், மேலும் சிங்கத்தினிடம், "நீர் இப்படி நினைப்பதுதான் மிகவும் அறிவீனம்; இதனால் உமக்கு நிச்சயமாகத் தீங்கு வரும். சஞ்சீவகன் உமக்கு முன்னே இனிமையாகப் பேசுகிறானென்று நீர் அவன்மீது அபிமானம் வைத்திருக்கிறீர். அவன் வெளிக்கு இனிமையாகப் பேசி, உட்பகை கொண்டிருக்கிறான். நீர் அவன் வார்த்தைகளுக்குச் செவி கொடுக்காமல், இனி என் வார்த்தைகளைக் கேட்க வேண்டும். விவேகிகள் சொல்லும் புத்தியைக் கேளாமல், வஞ்சகர் வார்த்தைகளைக் கேட்பவன், மருந்துண்ணாத நோயாளிபோலத் துன்பத்தை யடைவான். பாவியினுடைய வார்த்தை செவிக்கினிமையா யிருந்தாதாலும், அதைக் கேட்கலாகாது,'' என்று கூறிற்று. இந்த வார்த்தைகளை யெல்லாங் கேட்டுப் பின்னும் சிங்கம், தமனகனை நோக்கி, "நீ சொல்வதெல்லாம் சரிதான். எப்படி யிருந்தாலும், நானே சஞ்சீவகனுக்கு அபயங் கொடுத்து, அவனை இரட்சித்திருக்கிறேன்! அப்படியிருக்க அவன் எனக்குத் தீங்கு இயற்றுவானோ? நான் உன்னுடைய வார்த்தைகளை நம்பேன்,'' என, மேலும் தமனகன் விடாமல், "சுவாமி, நீர் சஞ்சீவகனுடைய குணங்

தெரியாமல் பேசுகிறீர். அவன் மிகவுங் கெட்டவன். நீர் அவனுக்கு என்ன நன்றியைச் செய்தாலும், அவன் நல்லவனுகமாட்டான்; கெட்டவர் குணம் என்ன செய்தாலும் நீங்குமா? கோணி யிருக்கும் நாய் வாலைக் குணக்கேடுக்க எவரால் முடியும்? பாம்புக்குப் பால் வார்த்து வளர்த்தாலும், அதன் விஷம் நீங்குமா? அடுத்தவர்க்கு இதம் புரிவது என்னைப் போன்ற சாதுக்களுக்குரிய தொழிலாதலால், நான் இப்போது தங்களுக்கு வருந் தீங்கை முன்னமே தெரிவித்தேன்; இவ்வாறு நான் தெரிவிக்காவிடின், பின்பு நீர் சங்கடப்படுங் காலத்தில், 'நீயாவது தெரிவித்தாயா? என்று என்மீது குறை கூறுவீர்; அதை உத்தேசித்தே இச்சமயத்தில் என் கடமையைக் கழித்துவிட்டேன். நீர் இதைக் கேட்டாற் கேளும்; கேட்கச் சம்மத மில்லாமற் போனல், விட்டுவிடும்," என்று சொல்லி மௌனமுற்றிருந்தது.

பிறகு சிங்கம், "அப்படியானல், சஞ்சீவகனிடத்தில் இதனைத் தெரிவித்து உண்மையைக் கேட்க வேண்டும்," என்று சொல்ல, உடனே தமனகன் துடி துடித்து, "ஆ! ஆ!! இது மிகவும் மதியீனமான செய்கை. இதை அவனிடம் கேட்டால், அவன் முன் சாக்கிரதைப்பட்டு, இதை விட்டு, வேருெரு வழியினல் உமக்குத் தீங்கு செய்வான்; ஆதலால், இதனை அவனிடம் தெரிவிப்பதே கூடாது. எப்பொழுதும் அரசர்களுடைய மந்திராலோசனை இரகசியமாகவே யிருக்க வேண்டும்," என்று கூறிற்று. இதைக் கேட்டுப் பின்னும் சிங்கம், 'தமனகா, அப்படி நீ சொல்லியவாறு அந்தச் சஞ்சீவகன் என்னோடு விரோதங்கொண்டாலும், அவனல் என்னை என்ன செய்ய முடியும்? அவன் என்னைக்காட்டிலும் மிகவும் தாழ்ந்தவன்

தானே?" என்றுசொல்ல, தமனகன், "நீர் அவனுடைய நிலைமையை அவ்வளவு எளிதாக நினைக்க லாகாது; அவனுடைய இயல்பும் வன்மையும் எப்படித்தெரியும்? காரியத்திற் பிரவேசித்தபின்புதான் தெரியும்; அவனுடைய குணம் உமக்குத் தெரியாது; அவன் சுபாவத்தைத் தெரியாமலே அவனைச் சேர்த்துக்கொண்டீர். ஒருவனுடைய சுபாவத்தைத் தெரிந்துகொள்வதற்கு முன் அவனோடு சிநேகங் கொண்டிருப்பது எப்பொழுதும் தீங்கு பயக்கும்," என்றுரைத்தது. சிங்கம் அதைக்கேட்டு, "அப்படியானால், அந்தச் சஞ்சீவகனுடைய கெட்ட சுபாவம் எப்படியிருக்கும்? அதனைத் தெரிவிப்பாயானால், அக்குணம் சஞ்சீவகனிடத்தில் ஏற்படும் பக்ஷத்தில், அதன் மூலம் நான் அவனுடைய வஞ்சக எண்ணத்தைத் தெரிந்துகொள்வேன்," என்று சொல்ல, தமனகன், "சுவாமி, அவன் உம்மோடு பகை கொண்டு உமக்குத் தீங்கு செய்ய வருங் காலத்தில், தன்னுடைய கொம்புகளை உமக்கு நேரே தாழ்த்திக் கொண்டு வருவான்; அப்பொழுது உம்மைக் கொல்ல வருகிறானென்று நீர் நினைத்துக்கொள்ளும்," என்று சொல்லிவிட்டு, உடனே எருதினிடம் சென்று, முகவாட்டத்தோடு அதனைக் கண்டது.

அப்போது சஞ்சீவகன், தமனகனைப் பார்த்து, "மித்திரா, சௌக்கியமாயிருக்கிறாயா?" என்று கேட்க, தமனகன், "சேவகனுக்குச் சுகமேது? இராஜா சமஸ்தானங்களி லிருப்பவர்கள் எப்பொழுதும் ஒரே நிலையிலிருக்கமாட்டார்கள்; ஒரு சமயம் அரசனால் அளவற்ற இன்பத்தை அனுபவிப்பார்கள், மற்றொரு சமயம் மிகுந்த துக்கத்தை அனுபவிப்பார்கள்; அரசர்கள் எப்பொழுதும் ஒருவனிடம் நிலையான சிநேகம் வைக்க மாட்டார்கள்;

அவர்கள் தங்களுக்குச் சமானமுள்ளவ ரிடத்திலுங்கூட இப்படித்தான் நடந்துகொள்ளுவார்கள்; அப்படியிருக்க அவர்களுக்குக் குறைந்தவர்களிடம் நிலையான சிநேகம் வைக்க மாட்டார்க ளென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? தாழ்ந்தவன் உயர்ந்தவரோடு சிநேகங் கொண்டால், அவனுக் கெப்போழுதும் நலங்கிடைக்கமாட்டாது. எவரும், 'நம்மீது உண்மையாக அன்பைச் செலுத்தத் தக்கவர் யாவர்? நாம் சிநேகங் கோள்பவரின் வலி எவ்வளவு? நம்முடைய திறமை எவ்வளவு? என்னும் விஷயங்களை ஆராய்ந்து, தமக்குத் தகுதியானவரோடு சிநேகங் கோள்ள வேண்டும், "என்றுரைக்க, சஞ்சீவகன் கேட்டு, "நண்ப, நீ என் இவ்வாறு கூறுகின்றாய்? என்றைக்கு மில்லாத வார்த்தைகள் உன் நாவினின்றும் இன்றைக்குப் புறப்படுகின்றனவே! இவ்வாறு பேசுதற்குக் காரணம் யாது?" என்று வினவிற்று.

அப்போது நரி, "மித்திரா, நம் அரசனிடத்தில் ஒரு வஞ்சனை தோன்றியிருக்கிறது: இராஜகாரியத்திலுண்டாகி யிருக்கும் வஞ்சனையைப் பிறரிடம் வெளிப்படுத்த லாகாது; அங்ஙனம் வெளிப்படுத்தினால், நம் தலை போய்விடும். ஆனாலும் நீ என் பேச்சை நம்பி, நம்முடைய அரசனாகிய பிங்களனோடு சிநேகங் கொண்டாய்; ஆதலால், உனக்கு அந்த இரகசியத்தைச் சொல்லுகிறேன்; நீ அதனை வெளிப்படுத்தாதே: நம்மரசன், காரணமில்லாமல், உன் மீது பகை கொண்டு, உன்னைக் கொன்று தன்னுடைய படைகளுக்கெல்லாம் விருந்து செய்யக் கருதி இருக்கின்றான்," என்று பெரிய மித்திர பேதமான வார்த்தைகளைப் பொருந்தக் கூறிற்று.

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே சஞ்சீவகன் திடுக்கிட்டுப் பெருமூச்சு விட்டு, "இஃதென்ன? பெரிய ஆபத்தாயிருக்கின்றதே!" என்று வருத்தமுற்றுப் பல வாறு ஆலோசித்துக்கொண்டிருந்தது. அஃது அப்படி யிருந்தபோது, தமனகன், அதைப் பார்த்து, "மித்திரா, நீ ஏன் பல விதமாக ஆலோசிக்கின்றாய்? ஏதேனுமொரு தீங்கு நேர்ந்தால், கூடியவரையில் அதை நிவிர்த்தி செய்துகொள்ளத் தகுந்த வழியில் நடக்க வேண்டும்," என்று சொல்ல, சஞ்சீவகன், நரியைப் பார்த்து, "தம னகா, நீ சொன்னது சரிதான்; இந்தக்காலத்தின் இயல்பு அப்படித்தான் இருக்கிறது; அரசர்கள் துஷ்டர்களையே பரிபாலிப்பார்கள்; அவர்களுக்குத் துஷ்டர்களோடு சிநே கிப்பதே விருப்பம்; நம்மைப் போன்றவர்களைச் சட்டை பண்ணமாட்டார்கள்; நம்முடைய வார்த்தைகளையுங் கேட்க மாட்டார்கள்; பெரும்பான்மையும் துஷ்டர்களு டைய வார்த்தைகளையே கேட்பார்கள்; அந்தத் துஷ்டரு டைய துர்ப்போதனையினாலேயே நம்மரசன் எனக்குத் தீங்கு செய்ய இசைந்திருக்கின்றான்," என்று சொல்ல, தமனகன், "நம்முடைய அரசனுக்கு வாய்ப்பேச்சு மாத் திரந்தான் தித்திப்பு; மனம் மிகவும் கடினம். ஐயோ! அவனுடைய சுபாவந் தெரியாமல் நீ அவனோடு சிநேகங் கொண்டாயே!" என்று பயத்தை யுண்டாக்கியது.

இந்த வார்த்தைகளை யெல்லாங் கேட்ட வுடனே சஞ்சீவகனுக்கு மிகுந்த கலக்க முண்டாய்விட்டது. அத னால், அது பெருமூச்சு விட்டு, "தமனகா, இப்போது பெரிய ஆபத்து நேர்ந்திருக்கிறது; இதிலிருந்து தப்பிப் பிழைக்க எனக்குத் திராணியில்லை. எமன் கையிலகப்

பட்டவன் எவ்வாறு தப்புவான்? என்மேற் குற்றமில்லா விடினும், பிங்களன் என்னைக்கொல்வது திண்ணம்; ஆயினும், நான் வீணே இறப்பதைக் காட்டிலும், சண்டை செய்திறப்பது நலம்; சண்டையி லிறந்தால், சுவர்க்க மடைவேன்; ஜயம் பெற்ருல், இராச்சிய மாள்வேன்,' என்று சொல்ல, தமனகன் அதை நோக்கி, "மித்திரா, நீ உனக்குப் பிங்களனை வெல்லத் தக்க சாமர்த்திய மில்லையென்று நினைக்க வேண்டா; உனக்கு மிக்க சாமர்த்திய முண்டு. உன்னுடைய வல்லமையை உணராமல், அவன் உன்னேடு பகைத்துக்கொண்டான்; சிட்டுக் குருவியை அற்பமானதென்று நினைத்து அதனேடெதிர்த்து அவமானமடைந்த சமுத்திரத்தைப் போல, அவமானத்தையடையப் போகின்ருன். அவனுக்குத் தன்னுடைய அகங்காரத்தினல் இது தெரியவில்லை; நீ தைரியத்தை மாத்திரம் விட்டுவிடாதே; சண்டையிடுவதற்கு இப்பொழுது முயற்சி செய்," என்று கூறிற்று.

இவ்வாறு கூறியவுடனே சஞ்சீவகன் தமனகனைப் பார்த்து, "நல்லது; மித்திரா, இனி என்ன செய்கிறது? உள்ளபடி நடக்கட்டும்; நீ சொல்லியபடியே சண்டையிடுகிறேன்; ஆனல், நம்மரசன் நிச்சயமாகப் பகை கொண்டிருக்கின்ருன் என்ற குறிப்பை முதலில் நான் தெரிந்துகொள்ள வேண்டும்; அங்ஙனம் தெரிந்துகொள்ளாமல், சண்டை தொடுப்பது சரியன்று; அவன் என்னேடு பகை கொண்டு சண்டை தொடுக்குங் காலத்தில் எப்படி இருப்பான்?" என்று வினவிற்று. அதற்குத் தமனகன், "அவன் கோபங்கொண்டு சண்டை தொடுக்குங் காலத்தில் தன் காதுகளை நெரித்துக்கொண்டு, வாலைத் தூக்குவான். எப்பொழுது அவன் இவ்விதச்

செய்கைகளைச் செய்வானே, அப்பொழுது உன்னைக் கொல்ல நினைத்தானென்றறிந்துகொள்; அச்சமயத்தில் நீ சும்மாவிராதே; நீயும் உன் கொம்புகளைத் தாழ்த்திக் கொண்டு, அவனுக்கு நேராகப் பாய வேண்டும்; அவ்வாறு செய்தாற்றான், அவனும் உன்னைப் பற்றிச் சிறிது யோசிப்பான்,'' என்று சொல்ல, எருது அவ்வாறே செய்வதாகக் கூறிற்று.

அதன்மேல் தமனகன் திரும்பி வந்தது. அப்போது கரடகன் அதனைக் கண்டு, "நீ போன காரியம் எப்படியாயிற்று?'' என்று வினவ, தமனகன், "நான் உத்தேசித்த காரியத்தை நிறைவேற்றிவிட்டேன்; பிங்கள சஞ்சீவகருடைய சிநேகத்தின் வாயில் மண்ணைப் போட்டுவிட்டேன்; பிங்களன் கோபக் குறி இன்ன விதமா யிருக்குமென்று நான் சஞ்சீவகனுக்குச் சொன்னபடியே, பிங்களன் இருக்கும்படி செய்ய வேண்டும்; நான் அதன்பொருட்டு அவனிடம் செல்கின்றேன்,'' என்று சொல்லிவிட்டு, உடனே பிங்களனிடஞ் சென்று, "சுவாமி, சஞ்சீவகன், நிச்சயமாயும்மோடுபோர் தொடுப்பதற்குப் புறப்பட உத்தேசித்திருக்கிறான். அவன் வரும்போது நீர் அசாக்கிரதையா யிருத்தல் கூடாது; அப்படி யிருந்தால், அவன்உம்மைஎளியவர்என்று கருதிவிடுவான். அவன் தலையைக் கண்ட மாத்திரத்தில் நீர் உம் செவிகளை நெரித்து, வாலை மேலே தூக்கிக் கொண்டு, சண்டையைக் காண்பிக்க வேண்டும்; அவ்வாறு செய்தாற்றான், அவன் பயப்படுவான்,'' என்று சொல்லி, அப்படியே செய்யும்படி அதன் மனத்தைத் திருப்பிவிட்டது.

நரி இவ்வாறு மித்திர பேதஞ் செய்யவே, சிங்கம், "சரி; சஞ்சீவகன் நம்மெதிரே வரட்டும்; ஒரு கை பார்ப்

போம்,'' என்று எருதின் வரவை எதிர் பார்த்திருந்தது. அச்சமயத்தில், எருது அதனிடம் சென்றது. அதைக் கண்ட மாத்திரத்திலேயே சிங்கம், தமனகன் சொல்லி வைத்தபடி தன்னுடைய சண்டைக் குறியைக் காட்டிற்று; எருதும் அதைக் கண்டவுடனே தமனகன் சொற்படி தன்னுடைய போர்க் குறியைக் காட்டிற்று. உடனே அவ்விரண்டிற்கும் பெரும்போர் விளைந்தது. இவ்வாறு இரண்டிற்கும் போர்நடக்கும்போது கரடகன், இச்செய்கை தகாதென்று கருதித் தமனகனிடம், "நீ இவ்வாறு மித்திர பேதம் செய்தது மிகுந்த பாபமான காரியம்; அனியாயமாக இவர்களுடைய சிநேகத்தைக் கெடுத்தாயே! நீ மிகவும் பொறுமை யுள்ளவன்; உனக்கிவ்விதப் பொறுமைக் குண மாகாது,'' என்று நியாயங்களைக் கூறி, அவற்றிற் குதாரணமாகச் சில கதைகளையும் சொல்ல, தமனகன் கேட்டுக்கொண்டிருந்தது. இப்படி இவ்விரண்டும் பேசிக் கொண்டிருக்கும்போதே, சிங்கம் போர் புரிந்து, சிறிது நேரத்திற்குள் சஞ்சீவகனைக் கொன்றுவிட்டு, 'ஐயோ! என்ன காரியஞ் செய்தோம்! தமனகன் பேச்சை நம்பி, நம்முடைய சிநேகிதனைக் கொன்றுவிட்டோம்!'' என்று மிகுந்த விசனத்தோடு உட்கார்ந்திருந்தது. அத்தருணத்தில் தமனகன் சிங்கத்தினிடம் சென்று, 'சுவாமி, சத்துருவைக் கொன்றதற்காக ஏன் துக்கப்படுகின்றீர்கள்? சாஸ்திரமே, 'சத்துருவைக் கொல்லவேண்டும், என்று கூறும் போது தாம் எதற்காக விசனப்பட வேண்டும்? இது கூடாது,'' என்று பல உபாயமான வார்த்தைகளைக் கூறி, அதன் விசனத்தை நீக்கிற்று. பின்பு சிங்கம் அந்த வனத்திலேயே முன்போலச் சுயேச்சையாகத் தன்னுடைய அரசாட்சியை நடத்திக்கொண்டு, மிக்க சுகத்துடனிருந்தது.

2. தமக்குத் தகாத காரியத்தைச் செய்வோர் அடையும் பயன்:

பின்வருவ தாராய்ந்து வினைபுரிவோர்
நலமனைத்தும் பெருக வாழ்வார்;
மன்னுமதை யுணராமல் தமக்காகச்
செய்கையினை மகிழ்ந்து செய்வோர்,
முன்னமொரு தச்சன்மரத் தடித்துவைத்த
ஆப்பசைத்து மூடத் தாலே
தன்னுடல்விட் டுயிரிழந்த குரக்கினைப்போ
லழிவரிந்தத் தரணி மீதே.

(இ - ள்) பின்னால் தமக்கு வரும் நன்மை தீமைகளை ஆராய்ந்துணர்ந்து, அறிவுடனே காரியங்களை நடத்துவோர், யாதொரு தீங்குமின்றி, நன்மையாவும் தங்களிடத்தே அதிகரிக்க, மகிழ்ச்சியுடனே வாழ்வர். அவ்வாறு தன்னால் வந்து பொருந்தும் தீங்கை யுணராமல், தமக்குத்தகாத காரியத்தைச்செருக்குடனே மகிழ்ந்து செய்பவர், முற்காலத்தில் ஒரு தச்சன் தான் வாள் கொண்டு அறுத்த மரத்தின் பிளப்பில் அடித்து வைத்த ஆப்பை மூட மதியால் அசைத்துப் பிடுங்கி அப்பிளப்பிலே தன்னுடலை விட்டு உயிரிழந்த ஒரு குரங்கைப் போல, இந்தப் பூமியில் அழிவர்.

மூடக் குரங்கின் கதை.

மகததேசத்தில்இருந்த சுதத்தன் என்பவன், கோயில் திருப்பணிக்காகச் சிலமரங்களைக் கொண்டுவந்து போட்டு, வாட்காரனை விட்டு அறுக்கும்படி செய்திருந்தான். அவ்வாறு அவைகளை வாட்காரன் அறுத்துக் கொண்டு வரும் போது, ஒருநாள் ஒருமரத்தை அறுத்து, அரைகுறையாக விட்டுச் சென்றான். அப்போது அவன், பிளப்பு வாயில் வாள் தாராளமாகச் செல்லும்பொருட்டு அடித்து வைத்த ஆப்பு, அப்படியே இருந்தது. அவன் வீட்டிற்குச் சென்ற

பிறகு, அக்கோயிலின் நந்தவனத்தில் வாசஞ் செய்து கொண்டிருந்த ஒரு குரங்குவந்து, அறுக்கப்பட்ட அம் மரத்தின்மே லுட்கார்ந்தது. அவ்வா றுட்கார்ந்தவுடனே அது தன் சாதிக் குறும்புக்குத் தக்கபடி சும்மா இராமல், அம்மரத்தின் பிளப்பின் நடுவே தன்னுடலை விட்டுக் கொண்டு, அங்கே அடிக்கப்பட்டிருந்த ஆப்பைப் பார்த்து, 'இஃது எதற்காக அடிக்கப்பட்டிருக்கிறது?' என்று முழுப் பலங் கொண்டு அதனைப்பிடித்து அசைத்துப் பிடுங்கிற்று. ஐயோ! ஆப்பு வெளிப்பட்டது தான் தாமதம்! உடனே மரத்தின்பிளப்பு நெருங்க, அக்குரங்கு தன்னுடல் நசுங்கிப் பல்லைத் திறந்து கீச்சுக் கீச்சென்று கத்தி, உயிர் விட்டது.

3. தொனியைக் கேட்டமாத்திரத்திலேயே பயப்படலாகாது.

வாய்ப்பகட்டா லிரைச்சலிடும் மடையர்களைப்
பெரியரென மதிக்கோ ணாது:
பேய்க்குழுவார் போர்க்களத்தில் மரக்கிளைபே
ரிகைதாக்கப் பிறந்த வோசை
போய்ச்செவியிற் புகவோரி பயந்துபின்னர்
நெருங்கவுண்மை புலப்பட் டாற்போல்
நாய்க்குநிக ராமவரை யாராயின்
அவர்நடிப்பு நாச மாமே.

(இ-ள்.) வாயதட்டினாலே இடம்பமாகப் பேசி இரைகின்ற அறிவீனர்களை, இப்பேச்சின்மாத்திரத்தாலேயே பெரியோரென மதித்து அவருக்குப் பயப்படலாகாது; பேய்க் கூட்டங்கள் பொருந்திய ஒரு யுத்த பூமியிலே கிடந்த பேரிகையில் மரக்கிளை காற்றாலசைந்து தாக்க, அதிலிருந்து பிறந்தவோசையானது போய்க்காதுகளிலே புகக்கேட்ட ஒருநரியானது யாதோவென்று திடுக்கிட்டுப்பயந்து, பின்னர் அப்பேரிகையினிடத்தே நெருங்கிப்

பார்க்க உண்மை விளங்கியதுபோல, நாய்க்குச் சமானமாக இரைச்சலிடும் அந்த மடையர்களை நெருங்கி ஆராய்ந்துபார்த்தால், அவர்களுடைய நடிப்புத்தொழில் வெளிப்பட்டு ஒழிந்து போகும்.

பேரிரை யோலியாற் பயந்த நரியின் கதை.

ஒரு நரியானது, ஒரு நாள் மிக்க பசியினு லிளைத்து, இரையைத் தேடிப் பலவிடங்களுக்குஞ் சென்று, அங்குமிங்குந் திரிந்தலைந்து, முடிவில் ஒரு போர்க்களத்தருகே வந்தது. அங்கே கிடந்த ஒரு பேரிகையில் காற்றினலசைந்த மரக்கிளை யொன்றுதாக்க, அதனல் திடீரென்று பெருந்தொனி யுண்டாயிற்று. அத்தொனியைக் கேட்ட மாத்திரத்தில், நரி நெஞ்சந் திடுக்கிட்டு, "அம்மா! நான் செத்தேன்!" என்று கலங்கிநின்றது. அவ்வாறுநின்று யோசித்துப் பின்பு சிறிது தைரியங் கொண்டு, "இந்த ஒலி எதனல் உண்டாயிற்று என்பதைச்சற்று நெருங்கிப் போய்ப் பார்ப்போம்," என்று முன்னே மெல்லெனப் பதுங்கிப் பதுங்கி நடந்துபோய், அந்தப் பேரிகையின் சமீபத்தில் நெருங்கிப் பார்த்தது. அங்கே பேரிகையின்தோலும் கோலுமே யல்லாமல், வேறென்றுமில்லை. அங்ஙனம் உண்மை புலப்பட்டவுடனே அந்த நரியானது, மன நடுக்கம் நீங்கி, தன்னுடைய அறியாமையைப் பற்றித் தன்னைத் தானே பரிகசித்துக்கொண்டு, "நம்முடைய புத்தி என்ன புத்தி! வீணே இந்தப் பேரிகையின் சத்தத்தைக் கேட்டு நாம் பயந்துவிட்டோம்; இங்கே நெருங்கிப் பார்க்காவிடில், நமக்கு உண்மை புலப்பட்டிராது. எப்பொழுதும் தொனியைக் கேட்டு அஞ்சுவது மதியீனம்," என்று சந்தோஷ மடைந்தது.

4. மனிதர்களுக்கு அவர்கள் செய்யும் குற்றத்தினலேயே இடர் வரும்.

வஞ்சனைகோள் மனத்தாரை நம்பிஅவ
ரோடுறவு மகிழ்ந்து செய்யின்,
அஞ்சிடுமோ துன்பம்வரும்; அறியாமல்
அவர்நேயம் அடுத்துச் செய்தோர்,
மிஞ்சுபரி சுத்தனைப்போல் நடித்ததிரு
டனைநம்பி விரும்பிச் சேர்த்த
எஞ்சுதலி லாப்பொருளை யிழந்தபர
தேசியைப்போ லிடர்க்குள் ஆவார்.

(இ-ள்.) *வஞ்சம் நிறைந்த மனத்தினையுடைய தீயரை நம்பி எவரேனும் சந்தோஷித்து அவருடனே நேயங் கொண்டால், அவர்க்குப் பயப்படத் தக்க பெரிய துன்ப மெல்லாம் வந்து சேருவது திண்ணம். இதனை உணராமல், அவர்களுடைய நேயத்தை நெருங்கிச் செய்தவர்கள், முன்பு மிகவும் அதிகரித்த பரிசுத்த முடையவனைப்போல நடிப்புச் செய்த ஒரு திருடனை நம்பி, தான் ஆசை கொண்டு சேர்த்த குறைவில்லாத பொருளை இழந்து வருந்திய பரதேசியைப்போல, ஏமாற்றத்துக்குள்ளாகித் துன்பத்திற் சிக்கி வருந்துவர்.*

பரதேசி பொருளிழந்த கதை.

ஒரு தேசத்திலே, தேவ சன்மா *என்னும் ஒரு சன்னியாசி இருந்தான். அவன் நெடுங்காலமாகப் பிச்சையெடுத்துச் சிறிது திரவியம் சேர்த்தான். அவன். அப்பொருளைக் காப்பாற்றும் விஷயத்தைப் பற்றிப் பலவாறு ஆலோசனை செய்து, 'இதனை வேறிடத்தில் வைத்தால், எவராகிலும் எடுத்துக்கொண்டு நம்மை ஏமாற்றி விடுவர்; ஆதலால், நம்மிடத்திலேயே எப்போதும் இருக்கும்படி வைத்துக் கொள்ள வேண்டும்,'' என்று முடிவு செய்து, அதை ஒரு*

வருக்குந் தெரியாமல் தன்னுடைய கந்தைத் துணிக்குள்ளே வைத்துத் தைத்து, அத்துணியை மேலே போர்த்துக்கொண்டு, மேலும் பிச்சையெடுத்து உண்டு திரிந்தான்.

அவன் அவ்வாறு திரியும்போது, ஆஷாட பூதி என்னும் ஒரு திருட்டு வேதியன், அந்தப் பரதேசி கந்தையில் பொருளிருக்கும் உளவைத் தெரிந்துகொண்டு, அதைத் திருடிவிட்டால், தனக்கு நெடு நாட் செலவு நடக்குமென்று கருதி, ஒரு நாள், "நாம் இந்தப் பரதேசியின் கந்தையைத் திருடிக்கொண்டால் இனிமேல் திருட்டு வேலையை விட்டுவிடலாம்; நமக்கிது போதும்," என்று தீர்மானித்துக்கொண்டு, ஒரு பிரமசாரியைப்போல வேடந் தரித்து, மகா சத்தியவந்தன் போல, தேவ சன்மாவினிடம் சென்று, அவனுடைய பாதங்களில் அடியற்ற மரம் போல வீழ்ந்து, வணங்கி யெழுந்து, அவன் முகத்தை நோக்கி நின்று, "மகானுபவரே, சிறிதும் சாரமற்றதாகிய சமுசார சாகரத்தில் அடியேன் வீழ்ந்து உழலாமல், எனக்கு ஞானோபதேசஞ் செய்து, தாங்கள் என்னை அதினின்றும் கரையேற்றி அருளவேண்டும்," என்று பலவாறு துதித்து, துன்பஞ் சகிக்காமல் வருந்துகிறவனைப் போலக் கண்ணீர் விட்டு அழுதான்.

இப்படி அவன் வருந்துவதைப் பார்த்தவுடனே பரதேசி, அவனுடைய சூதை உணராமல், அவனை மெய்யான பத்தனென்றே கருதி, அவன் தலைமேற் கையை வைத்து, "அன்பனே, நீ அஞ்ச வேண்டா; நீ இன்று முதல் என்னிடத்திலேயே இரு; உனக்கு நல்லுபதேசஞ் செய்கின்றேன்," என்று கூறி, அவனைத் தன்னோடு சேர்த்துக் கொண்டான். அன்று முதல் ஆஷாட பூதி மிகுந்த பொய்யான பக்தியோடு அந்தப் பரதேசியினிடம்

சேர்ந்து, அவன் இட்ட கட்டளைகளைச் செய்துகொண்டு, அவனுக்குத் தன்மேல் நம்பிக்கையுண்டாகும்படி நடந்து அவனுடைய கந்தையைச் சுருட்டிக்கொண்டுபோவதற்கு அவன் ஏமாறுந் தருணத்தை எதிர் பார்த்திருந்தான்.

இப்படி இருக்கும்போது, ஒரு நாள், அவ்விருவரையும் ஒரு பிராமணன் சாப்பாட்டிற் கழைத்திருந்தபடியால், அவர்கள் அவன் வீட்டிற் போய், விலாப்புடைக்கப் போசன மருந்திவிட்டுத் திரும்பினார்கள். அவ்வாறு திரும்பும்போது, நெடுந்தூரம் வந்த பிறகு, ஆஷாட பூதி பரதேசியை ஏமாற்ற உத்தேசித்து, ஒருவருக்குந் தெரியாமல் ஒரு துரும்பை எடுத்துத் தன் தலைமேற் போட்டுக்கொண்டு, உடனே அதனைத் தன் குருவாகிய அந்தப் பரதேசிக்குக் காட்டி "சுவாமி, நான் மிகவும் பாதகனாய் விட்டேன்! ஐயோ! நமக்கு அன்னமிட்ட அந்த வேதியர் வீட்டுத் துரும்பொன்று என் தலையில் ஒட்டிக்கொண்டு வந்து விட்டதே! நானும் இதனை உணராமல் இவ்வளவு தூரம் வந்துவிட்டேனே! இப்பொழுதுதான் துரும்பு என் தலையிலிருப்பதை உணர்ந்தேன். இது மகாதோஷம்; அன்ன மிட்டவர் வீட்டிற் கன்ன மிட்டதுபோலாயிற்று. 'உப்பிட்டவரை உள்ள மட்டும் நினை,' என்று பழமொழி இருக்க, நான் அதற்கு நேர் விரோதமாக இப்பொழுது நடந்திருக்கிறேன்; ஆதலால், இது தகாது. தாங்கள் இவ்விடத்திற் சிறிது நேரம் தாமதித்து இருங்கள்; இந்தத் துரும்பைக்கொண்டுபோய் அந்த வேதியர் வீட்டிற் போட்டு விட்டு ஒரு நொடிப் பொழுதில் திரும்பி வருவேன்," என்று சொல்லி, உடனே சன்னியாசி பார்க்கும்படி விரைந்தோடிச் சன்னியாசி கண்ணுக்குத் தெரியா

மல் மறைந்து, ஒரு செடி மறைவில் சிறிது நேரம் உட்கார்ந்திருந்து, துரும்பை எடுத்து எறிந்துவிட்டுப் பின்பு எழுந்து, மீண்டும் நெஞ்சிளைக்க விரைந்தோடி வந்து, அந்தச் சாமியார் காலில் விழுந்தெழுந்து, அந்தத் துரும்பை வேதியன் வீட்டில் போட்டுவிட்டு வந்தவன் போல நடித்து, "சுவாமி, இன்று உம்முடைய அனுக்கிரகத்தினுலேயே இந்தப் பாவத்தை விட்டு நீங்கினேன்; நல்ல வேளையாய்ப் போயிற்று! அந்தத் துரும்பைக் காணுமலிருந்தால், மிகுந்த பாவம் வந்து சேர்ந்திருக்கும்," என்று மகா சத்தியவந்தன் போலப் பேசினுன்.

அவனுடைய நடிப்பையும், பேசுந் திறத்தையும் பார்த்தவுடன் ஏழைப் பரதேசி மயங்கி, அவனது நடிப்பு வலைக்குளகப்பட்டு, மிகுந்த ஆச்சரிய மடைந்து, "இவன் அன்னியர் சொத்துக்கு ஆசைப்படாத இயற்கையுடையவன்; இவனிடத்தில் நாம் நம்பிக்கை வைக்கலாம்; இனி நாம் கந்தையை இவனிடம் கொடுத்தாலும், இவன் நமக்கு மோசம் பண்ணமாட்டான்," என்று அவனை நம்பி, அத் தருணம் தனக்கு மலபாதைக்கு வந்தபடியால், தான் உயிருக்கு நிகராகக் கருதி வைத்திருந்த கந்தையை அவன் கையிற் கொடுத்து, ஒரு குளக் கரையில் அவனை உட்கார வைத்துவிட்டுச் சற்றுத் தூரமாகச் சென்று, மல பாதைக்குப் போய்க் கால் கழுவும் பொருட்டுத் தண்ணீரருகே செல்ல, அங்கே ஆட்டுக்கடாக்களின் சண்டையில் நரியொன்று அகப்பட்டிறந்தபடியால், அவ் விநோதத்தைப் பார்த்துக்கொண்டு, சிறிது நேரம் தாமதித்து நின்றுவிட்டான். அப்படி நிற்கவே, ஆஷாடபூதி, "பரதேசியின் கந்தையைக் கொண்டு போவதற்கு இது தான் நல்ல தருணம்; இச்சமயத்தைக் கைவிட்டால்,

இனி வேறொரு சமயம் வாய்க்காது; காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள வேண்டும்,'' என்று ஆலோசித்து, உடனே கந்தையைச் சுருட்டி யெடுத்துக்கொண்டு, பரதேசியின் கண்ணுக்கு எட்டாமல், மறைந்தோடிப் போனான். சிறிது நேரத்திற்குள் பரதேசி திரும்பி வந்து பார்த்து, ஆஷாடபூதி காணாமற்போகவே, மனங் கலங்கினவனாய், "ஆ! ஆ!! ஆஷாடபூதி மிக்க பரிசுத்தனைப் போல நடித்து, நம்மை ஏமாற்றிச் சமயம் பார்த்துக் கந்தையைக் கைப்பற்றிக்கொண்டு ஓடினான்; நாம் எவ்வளவோ ஜாக்கிரதையாயிருந்தும், இத்தருணத்தில் மோசம் போய்விட்டோம்; இதை வெளியே சொன்னால், வெட்கக் கேடு,'' என்று திருடனைத் தேள் கொட்டினாற் போலத் தான் ஏமாந்ததை ஒருவரிடத்தும் சொல்லாமலிருந்துவிட்டான்.

5. அற்ப சுகங் கருதித் தீங்கு வருமிடத்திற் சார்வார்க்கு அபாயம் வரும்.

தீங்குவரு மிடத்திலற்பப் பயன்கருதிச்
சென்றவர்கள் திண்ண மாக
ஆங்காரத் தோடுபோர்செய் மேடங்கட்
கிடையினிற்போ யடுத்து நெற்றிப்
பாங்கர்வடி யுதிரத்தைப் பருகவெண்ணி
நரிநசுங்கிப் பதறி வீழ்ந்து
தாங்கவொணாத் துயருடனே மாய்ந்ததுபோல்
இடரடைந்து சாவர் தாமே.

(இ-ள்.) அற்பப் பிரயோசனங் கிடைப்பதை நினைத்து, தங்களுக்குக் கெடுதி வரக்கூடிய இடத்திற் போனவர்கள், நிச்சயமாக, கோபத்துடனே சண்டை செய்த இரண்டு ஆட்டுக்கடாக்களுக்கு நடுவிற் போய்ச் சேர்ந்து, அவற்றின் நெற்றியின்

பக்கத்திலே வடிந்த இரத்தத்தை நக்கிக் குடிக்க நினைத்து ஒரு நரியானது, உடல் நசுங்கிப் பதறிக் கீழே விழுந்து, சகிக்க முடியாத துயரத்துடனே இறந்தது போலத் துன்ப முற்றுச் சாவார்கள்.

ஆட்டுக் கடாக்களுக்கு இடையிற் போய் இறந்த நரியின் கதை.

மிகவும் கொழுத்துப் பருத்த இரண்டு ஆட்டுக்கடாக்கள், ஒரு நாள் ஒரு குளத்தினருகே, பகை கொண்டு கோபத்துடனே பின்வாங்கிப் பாய்ந்து, ஒன்றோடொன்று சண்டை தொடுத்துக்கொண்டு நின்றன. அப்போது அவ்விரண்டின் நெற்றியிலும் இரத்தம் பீரிட்டொழுகிக்கொண்டிருந்தது. அத்தருணத்தில் அங்கே வந்த ஒரு பேராசை கொண்ட மூட நரி, ஆட்டுக் கடாக்கள் சண்டையிடுவதையும் அவற்றின் நெற்றியில் இரத்தம் ஒழுகுவதையும் பார்த்து, "இவ்விரண்டும் உக்கிரமாகச் சண்டை புரிவதால், இப்போதிவை இங்கென்ன நடந்தாலும் கவனிக்க மாட்டா; நாம் இவற்றின் நடுவிற் சென்று ஏதேனும் செய்தாலும், அதை அறிந்துகொள்ளுந் தன்மை இப்போது இவைகளிடத்தில் இல்லை. இவற்றின் நெற்றியிலோ, புதிய இரத்தம் ஒழுகுகின்றது; அது மிகவும் சுவையாயிருக்கும்; ஆதலின், தந்திரமாகச் சென்று, அதனைப் பருகலாம்," என்று ஆலோசித்து, அந்தக் கடாக்கள் கோபத்தாற் பின் வாங்கி, வலிமை கொண்டு வேகத்தோடு பாயுந் தருணத்தில், இரத்தத்தை நக்கும்பொருட்டுப் பைய அவற்றினடுவே ஆசையுடன் வெறு வாயை மென்றுகொண்டு சென்றது. ஐயோ! அவ்வாறு சென்றதுதான் தாமதம்; உடனே கடாக்களிரண்டும் பாயவே, நரி, பாய்ச்சலினிடையி லகப்பட்டு,

உடல் நசுங்கிக் கண்கள் பிதுங்கித் துடித்துக்கொண்டு கீழே வீழ்ந்து வேதனை பொறுக்கமாட்டாமல் இறந்தது.

6. இடர் செய்யும் வலியாரை உபாயத்தால் வெல்லலாம்.

மிக்கார் இடர்செயினும் மெல்லியார் தேள்ளியரேல்
தக்கவுபா யத்தாலச் சங்கடத்தை—அக்கணமே
நீக்கிடுவர்: காகம் நெடியசர்ப்பந் தன்னையுயிர்
போக்கிநலங் கொண்டதனைப் போல்.

(இ - ள்) வலியில் மிகுந்தவர்கள், செருக்கால் மெலியவருக்குத் தீங்குசெய்யினும், அம்மெலியவர் தெளிவான அறிவுடையவர்களா யிருப்பார்களானுல், ஒரு காகமானது தனக்கு இடர் செய்த சர்ப்பத்தை உபாயத்தால் கொன்று நன்மை யடைந்தது போல, அந்தச் சமயத்திலேயே தகுதியான ஒரு வகைத் தந்திரத்தால் அத் துன்பத்தை நீக்கிச் சுகமடைவர்.

காகம் சர்ப்பத்தைக் கொன்ற கதை.

ஒரு பெரிய மரத்தில், ஆணும் பெண்ணுமாகிய இரண்டு காக்கைகள் கூடு கட்டிக்கொண்டு, நெடுங்காலமாக வாழ்ந்திருந்தன. அக்காலத்தில், அந்த மரப்பொந்தில் ஒரு நாகம் வந்து குடிபுகுந்து, பெண் காக்கையிடுகிற முட்டைகளை யெல்லாம் உடைத்துக் குடித்து, அக்காக்கைகளுக்குச் சந்ததி விருத்தியாகாமற் செய்துகொண்டிருந்தது. அப்படி யிருக்கும்போது ஒரு சமயம் பெண் காகத்திற்கு முட்டையிடும் பருவம் வந்தது. அப்பொழுது அந்தக் காகம், "ஐயோ! நான் இப்போதிடுகிற முட்டைகளும் நாசமாய்ப் போய்விடுமே! இதற்கென்ன செய்யலாம்?" என்று மிகவும் விசனமுற்று, தனக்குச் சிநேகமாயிருந்த ஒரு நரியிடம் போய், முன் நடந்த தன்னுடைய

குறைகளை யெல்லாங் கூறி, "இனிமேலாகிலும் என்னுடைய முட்டைகளைக் காப்பாற்றுவதற்கு என்ன உபாயஞ் செய்யலாம்?" என்று விசனமுற்றது. அதைக் கேட்டவுடன் நரி, "ஒரு நண்டானது தந்திரத்தால் கொக்கைக் கொன்றது போல, இந்த நாகத்தையும் ஒரு தந்திரத்தாற் கொல்ல வேண்டும்; இடர் செய்பவர் நம்மைக்காட்டிலும் வலியவர் ஆயினும், அவரை உபாயத்தால் வென்று விடலாம்," என்று கூற, காகம், "அவ்வாறு பாம்பைக் கொல்வதற்கு நான் என்ன உபாயஞ் செய்ய வேண்டும்?" என்று கேட்டது. அதற்கு நரி, "இதற்கு நானோர் உபாயஞ் சொல்கிறேன்; கேள்: நீ சமீபத்திலுள்ள நகரத்தில் இராஜ குமாரி ஸ்நானஞ் செய்யும் மஞ்சனச் சாலைக்குப் போய்க் காத்திருப்பாயானால், அவள் ஸ்நானஞ் செய்யும் சமயத்தில் தன் ஆபரணங்களைக் கழற்றிப் பக்கத்தில் வைத்துவிட்டு, ஸ்நானஞ் செய்வாள். அத்தருணத்தில் நீ அவ்வாபரணங்களில் ஒன்றைத் தூக்கிக்கொண்டு வந்து, மனிதர்கள் பார்க்கும்படி அந்த நாகமிருக்கும் பொந்திற் போட்டுவிடு; அதைப் போட்ட சிறிது நேரத்திற்குள்ளாகவே பாம்புக்கு நாசகாலங் கிட்டி, உன்னுடைய எண்ணம் நிறைவேறிவிடும்," என்று சொல்லிற்று. காகம் அவ்வாறே செய்தது. உடனே, அரண்மனை வேலைக்காரர்கள், காகத்தின் பின்னே தொடர்ந்து சென்று, காகம் பொந்திற் போட்ட நகையை எடுக்கும்படி அந்தப் பொந்தை வெட்டிப் பிளந்தார்கள். அப்போது நாகம் சீறிக்கொண்டு வெளியில் வந்தது. அதைப் பார்த்தவுடனே அவர்கள், "பாம்பு! பாம்பு!! அடி! அடி!!" என்று கூவிக்கொண்டே, அதனை இரண்டு துண்டாக வெட்டியெறிந்தார்கள். பிறகு, காகம் குஞ்சு பொரித்துக்

கொண்டு, தன் ஆணுடனே அந்த மரத்திலேயே யாதொரு சங்கடமு மின்றி மிக்க சுகமாக வாழ்ந்திருந்தது.

7. புத்தியுள்ளார் தம்மைக்காட்டிலும் வலிய பகைவரையும் எளிதில் வெல்வர்.

புத்தியிலார் தீங்கினரால் பொன்றிடுவர் மெய்சோர்ந்து;
புத்தியுளார் மோசம் புரிந்தவொரு—கொக்கதனைக்
கொன்றுசுகம் பெற்ற குளநண்டு போற்பகையை
வென்றினிதா வாழ்வர்புவி மேல்.

(இ-ள்.) உலகத்தில் புத்தி இல்லாதவர்கள், எவ்வளவு வல்லமையுடையவர்களா யிருப்பினும், தங்களுக்குத் தீங்கு செய்யும் பகைவரால், அத்தீங்கை நீக்கிக்கொள்ளும் வகை தெரியாமல், தேகம் தளர்ந்து, உயிர் விடுவார்கள்; புத்தியுள்ளவர்களோ, தாங்கள் எளியவர்களாயினும், முன்னே தன்னைக் கொல்ல நினைத்து மோசஞ் செய்த ஒரு கொக்கை உபாயத்தால் கொன்று சுகத்தை யடைந்த ஒரு குளத்தில் வாழும் நண்டைப் போல, பகையை வென்று, இனிமையாக வாழ்வார்கள்.

நண்டு கொக்கைக் கொன்ற கதை.

எப்பொழுதும், மீன்களையே அதிகமாகத் தின்று வளர்ந்த ஒரு கிழக் கொக்கானது, தான் கிழப்பருவம் அடைந்துவிட்டபடியால், பல விடங்களுக்குஞ் சென்று இரை தேடுதற்குச் சக்தியற்றதாய், ஒரு நாள் ஒரு குளக் கரையில் வந்து உட்கார்ந்துகொண்டு, "நமக்கோ, முன் போல அங்கும் மிங்கும் பறந்து சென்று இரை தேடுதல் இப்போது முடியாது; இனி உபாயத்தால் சுலபமாக ஆகாரந் தேடிக்கொள்ள வேண்டும்; இதற்கென்ன உபாயஞ் செய்யலாம்?" என்று ஆலோசித்துக் கொண்டு, விசனமாக இருந்தது. அப்போது அந்தக் குளத்தில் வசித்

திருந்த மீன்கள், கொக்கைப் பார்த்து, "நீ இரை தேடுந் தொழிலை விட்டு ஏன் சும்மா விருக்கின்றாய்?" என்று வினவின. அதைக் கேட்ட கொக்கு, 'இவற்றைத் தந்திரமாகப் பற்ற வேண்டும்,' என்று நினைத்து, "நான் உங்களுடைய இனத்தாரையே தின்பவன்: அதனால், எப்பொழுதும் உங்களுக்கு விரோதியே; ஆயினும், எனக்குப் பரோபகார சிந்தையுண்டு; விரோதிகளுக்கும் ஒரு சமயத்தில் அபாயம் வந்தால், நான் அவர் பொருட்டு மனம் இரங்குவேன்: இப்பொழுது உங்களுக்கோர் அபாயஞ் சம்பவித்திருக்கின்றது: இன்றைக்கு ஒரு செம்படவன் இங்கே வந்து உங்களை எல்லாம் பிடிக்க உத்தேசித்திருக்கிறான்: இதிலுள்ள நீங்களெல்லாம் க்ஷேமமாயிருந்தால், நான் தினந்தோறும் உங்களில் இரண்டு மூன்று பேரை உண்டு ஜீவித்திருப்பேன்; எல்லாம் நிர்மூலமாய்ப் போய்விட்டால், என் ஜீவனத்துக்குக் கஷ்டமாய்விடும்; இப்படி நிர்மூலமாய்ப் போவதைக்காட்டிலும், நீங்களெல்லோரும் க்ஷேமமாயிருந்தால், எனக்கும் க்ஷேமந்தான்; இன்னும் எனக்கு ஒரு பெரிய எண்ணமுமுண்டு: அதாவது, எனக்கு நீங்கள் இரை ஆனாலும் ஆகாவிட்டாலும், நீங்களெல்லோரும் க்ஷேமமாயிருப்பதை நான் கண்ணால்பார்த்துக்கொண்டு இருந்தாற் போதுமென்பதுதான்; இதைப் பற்றித்தான் என்ன செய்யலாம் என்று நான் ஆலோசித்துக்கொண்டு விசனமா யிருக்கின்றேன்," என்று மிக்க வஞ்சகமான வார்த்தைகளைத் தந்திரமாக உரைத்தது.

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே மீன்கள் எல்லாந் திடுக்கிட்டுக் கொக்கின் வார்த்தைகளை உண்மையென்றே நினைத்து, அதனை நம்பி, "இவன் நமக்கு விரோதியாயிருந்தாலும், இப்போது நம்மிடம் உண்மையைத்

தெரிவித்தபடியால், இவனாலேயே நன்மையும் உண்டாகக் கூடும்; நாம் பிழைக்கும்படியான வழியை இவனே தெரிவிப்பான். எவன் நமக்கு அபாயஞ் சொன்னானோ, அவனே உபாயமுந் தெரிவிப்பான். ஆதலால், இவனிடத்திலேயே நாம் அடைக்கலம் புகவேண்டும்,'' என்று முடிவு செய்து கொண்டு, கொக்கை நோக்கி, ''நீயே எங்களை இப்போது காப்பாற்ற வேண்டும்; நாங்கள் பிழைப்பதற்கு வேறு மார்க்கமில்லை,'' என்று கூறின.

உடனே கொக்கு, 'சரி; சரி. இவைகளெல்லாம் நம்முடைய மாயவலைக்குள் அகப்பட்டுக்கொண்டன,' என்று மனத்திற்குள் மகிழ்ச்சியடைந்து, அம்மீன்களைப்பார்த்து, ''நீங்கள் சொல்லுவதும் சரிதான்; உங்கள் வார்த்தை புறப்படுவதற்கு முந்தியே நான் உங்களைக் காப்பாற்ற வேண்டுமென்றுதான் நினைத்திருக்கிறேன்; ஆனால், நான் மிகவுங் கிழவனாயிருப்பதால், செம்படவனோடு சண்டை செய்து உங்களைக் காப்பாற்றுதல் முடியாது; வேண்டுமானால், உங்களை வேறோரிடத்திற்குக் கொண்டு போய்ச் சேர்த்துவிடுவேன்; இந்த உபாயஞ் செய்து, உங்களைக் காப்பாற்றுதல் எனக்கெளிது; இவ்வாறு செய்வேனானால், 'தன்னால் கொல்லப்படத் தக்கவர்களையும் இவன் காப்பாற்றினானே! இவன் மிகவும் பரோபகாரி,' என்று பலரும் என்னைக் கொண்டாடுவர். இந்த விருத்தாப்பிய காலத்தில், 'பரோபகாரி,' என்னும் ஒரு நல்ல பட்டம் எனக்கு உங்களால் கிடைக்கும்; நீங்களும் நெடுங்காலம் சுகமாக வாழ்ந்து என்னைப் புகழ்ந்துகொண்டு இருப்பீர்கள்,'' என்று சொல்ல, மீன்கள் மதியை விலைக்குக் கொடுத்துவிட்டுத்தங்களுடைய பிராணனைக்காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டு அந்தக் கொக்கை நோக்கி, ''பரோபகாரியே,

உன்னுடைய அபிப்பிராயப்படியே நீ எங்களை வேறோரிடத்திற் கொண்டு போய்ச் சேர்த்துவிடு; நாங்கள் உன்னையே நம்பி யிருக்கிறோம். நீ எங்களை இச்சமயம் கைவிடலாகாது,'' என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டன.

பிறகு கொக்கு, உள்ளம் பூரித்து, ''நான் உங்கள் இஷ்டப்படியே செய்கின்றேன்; ஒவ்வொருவராக என்முன்னே வருவீராக,'' என்று சொல்ல, அப்படியே மீன்களெல்லாம் ஒவ்வொன்றாகக் கொக்கின் முன்னே வந்தன. வர வர, கொக்கானது, ஒவ்வொன்றாக அவற்றை யெல்லாம் வாயினாற் கௌவிக்கொண்டு பறந்து, சிறிது தூரத்திற்கு அப்பாற் சென்று, தன்னுடைய இஷ்டம்போல அவற்றுட் சில மீன்களைத் தின்று, மற்ற மீன்களை யெல்லாம் சில நாள் வரை ஆகாரத்திற்கு உதவும்பொருட்டு அங்குள்ள ஒரு பெரிய கற் பாறையின்மேல் போட்டு உலர வைத்தது. அப்படி எல்லாவற்றையும் உலரப் போட்டுவிட்டு, இன்னும் மீன்கள் மிகுந்திருக்கின்றனவா என்று பார்த்தற்பொருட்டுமீண்டும்அக்குளக்கரையிற்போய்உட்கார்ந்தது.

அப்போது கொக்குக்கும் மீன்களுக்கும் இடையில் நடந்தவற்றை யெல்லாம் பார்த்துக்கொண்டு அக்குளத்திலிருந்த ஒரு நண்டானது, தானும் ஜீவனைக் காப்பாற்றிக் கொள்ளலாமென்று நினைத்து, கொக்கை நோக்கி, ''ஜீவகாருணிய முடைய மகா புண்ணியவானே, நீ மீன்களைக் கொண்டுபோனவிடத்திற்கு என்னையுங் கொண்டு போய்க் காப்பாற்ற வேண்டும்,'' என வேண்டிக்கொண்டது. அப்போது கொக்கு, 'சேருங்காலத்தில் எல்லாம் தாமே வந்து சேரும்,' என்று மனத்திற்குள்ளே சந்தோஷித்து, அந்த நண்டையும் அவ்வாறே கௌவி எடுத்துக்கொண்டு சென்றது. அவ்வாறு சென்று, மீன்கள் செத்துக் கிடக்கும்

கற்பாறைக்கு நேரே போய்ச் சேர்ந்தவுடனே, நண்டானது, அங்கே மீன்கள் செத்துக் கிடப்பதையும், பக்கத்தில் மீன் முட்கள் சிந்திக் கிடப்பதையும் பார்த்து, கொக்கின் வஞ்சகத்தைத் தெரிந்து, "ஐயோ! இந்த வஞ்சகமுள்ள கொக்குத் தந்திரமாக மீன்களை ஏமாற்றிக் கொண்டு வந்து, அவற்றுட் சிலவற்றைத் தின்றுவிட்டுச் சிலவற்றைப் பின்னும் சிலநாட்கள்வரை ஆகார மாகும் பொருட்டு உலரவைத்துவிட்டு, போதாததற்கு நம்மையுங் கொல்ல ஏமாற்றிக் கொண்டு வந்துவிட்டது; இது நம்மைக் கொல்வதற்கு முன்னரே நாம் இதனை வஞ்சகத்தாற் கொன்று, நம்முடைய பிராணனைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும்," என்று ஓர் உபாயத்தை ஆலோசித்துக் கொண்டு, உடனே கொக்கை நோக்கி, "புண்ணியவானே, நீ என்னை மிகவும் பிரயாசைப்பட்டு எடுத்துக் கொண்டு வந்ததால், நான் பிழைத்துச் சுகமாக வாழ்வே னென்பதைநிச்சயமாகத் தெரிந்து கொண்டேன். ஆனால், என்னைச் சேர்ந்த பந்துக்களெல்லாம் அந்தக் குளத்தி லிருக்கின்றார்கள்; அவர்களுக்கு இதைச் சொல்லாமல் நான் மட்டும் உன்னுடன் வந்துவிட்டேன்; அவர்களை யெல்லாம் செம்படவன் கையிலகப்பட்டு இறக்கும்படி விட்டுவிட்டு, நான் மாத்திரம் சௌக்கியத்தை யடைவது சரியன்று. ஆபத்து வந்த காலத்தில் சுற்றத்தையும் காப்பாற்ற வேண்டுவது முக்கிய தருமம். ஆகையால், என்பொருட்டு நீ அவர்களையும் காப்பாற்ற வேண்டும்; அவர்களிருக்குமிடம் உனக்குத் தெரியாது; அப்படியே தெரிந்து போய், நீ மாத்திரம் அவர்களை அழைத்தாலும், அவர்கள் உன்னை நம்பி வர மாட்டார்கள். நீ என்னை மறுபடியும் அவ்விடத்திற்கு எடுத்துக்கொண்டு போனால், அவர்களை

உனக்குக் காட்டி உன்னுடன் வரும்படி அவர்களுக்கும் கூறிவிட்டு, மீண்டுவந்து விடுவேன்; நீ விரைவாக என்னை இப்பொழுதே சிரமத்தைப் பார்க்காமல் அங்குக்கொண்டு போகவேண்டும்,'' என்று கூறிற்று.

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே கொக்கு மிகவும்பேராசையுற்று, அடங்காமகிழ்ச்சிகொண்டு,' நமக்கு இன்றைக்கு நல்ல அதிர்ஷ்டம் பிறந்தது! என்று உள்ளம் பூரித்து, நண்டைக் கௌவினபடியே திரும்பிப் பறந்து, அக்குளத்திற்கு நேரே வந்தது. அப்படி வரவே, நண்டு, 'இதுதான் நல்ல தருணம்,' என்று கருதி, "கொக்கே, நீ இவ்வளவு தந்திரமா கற்றிருக்கின்றாய்! உன் தந்திரத்தின் வாயில் மண்ணைப் போடுகின்றேன்; பார்!'' என்றுகோபத்துடனே தன்னுடைய கொடுக்கினால் அந்தக் கொக்கின் கழுத்தை இரண்டு துண்டு ஆகும்படி நறுக்கிவிட்டு, குளத்தில் வீழ்ந்து, தன் இனத்துடன் கூடிச் சுகமாக வாழ்ந்தது. கொக்கு, தன் தந்திரமெல்லாம் பாழாய்ப் போக, தன் கழுத்து இருதுண்டாகி நாசமாயிற்று.

8. புத்திமானே பலவான்.

வன்மையிலா னேனும், மதியுள்ளான் ஓர்முயல்போல்
இன்னல்தவிர்த் தின்பமிக எய்துவான்;—மன்னுமதி
இல்லான் பெரியன் எனினும், மடச் சிங்கம்போல்
அல்லலுற்றுச் சாய்வான் அழிந்து.

(இ-ள்.) புத்தியுள்ளவன், வல்லமையில்லாதவனாயிருப்பினும், தன்னினும் எத்தனையோ பங்கு அதிகமான வல்லமையுடைய சிங்கத்தைத் தன்னுடைய உபாயத்தாற் கொன்று தனக்குவந்த துன்பத்தை நீக்கிச் சௌக்கியத்தை யடைந்த ஒரு முயலைப்போல, தன்பால் வந்து சேரும் சங்கடங்களை நீக்கி, இன்

பத்தை மிகுதியாக அடைவான்; பொருந்திய அறிவில்லாதவன், உருவத்திற் பெரியவனுயிருப்பினும், அந்த முயலால் நாசமடைந்த சிங்கத்தைப் போல, அற்பரையும் வெல்வதற்கு இயலாதவனுய்த் துன்பத்தை யடைந்து, உயிர் நீங்கி, வீழ்ந்து இறப்பான்.

முயல் சிங்கத்தைக் கோன்ற கதை.

மரங்க ளடர்ந்த ஒரு பெருங்காட்டில், மதோன் மத்தன் என்னும் ஒரு சிங்கமானது, தனக்கு மேற்பட்ட மிருக மொன்று மில்லாமல், அகங்காரத்தோடு சுயேச்சையாக அரசுபுரிந்து வாழ்ந்து வந்தது. அப்போது அஃது அக் காட்டிலிருந்த மற்ற மிருகங்களை யெல்லாம் இஷ்டம் போலப் பிடித்துக் கொன்று தின்று கொழுப்பேறித் திரிந்தது. அப்படித் திரியுங் காலத்தில், கணக்கற்ற மிருகங்கள் நாசமாய்ப் போகவே, மிருகங்க ளெல்லாங் கூடி, "நம்முடைய இனத்தாரெல்லாம் மிகுந்த சேதமடையாமலிருத்தற்கு ஏதேனும் ஒருபாயஞ் செய்யவேண்டும்; நாளொன்றுக்கு நம்மில் ஒருவர் வீதம் நாம் கொடுப்பதாகவும் நம்மெல்லாரையும் தன் இஷ்டப்படி அடித்துக் கொல்லலாகாதென்றும் மதோன்மத்தனிடம் சொல்லியாவது ஓர் ஏற்பாடு செய்துகொண்டால், நலமாயிருக்கும்,'' என ஆலோசித்து, உடனே சிங்கத்தினிடம் போய், "அரசனே, இக்காட்டி லிருக்கின்ற எங்களை யெல்லாம் இவ்வாறு நீ கணக்கின்றி அடித்துக் கொல்வது சரியன்று; இதனுல் கொஞ்ச காலத்திற்குள் நாங்கள் எல்லோரும் அழிந்து போவோம். பின்பு நீ உன் ஆகாரத்திற்குக் கஷ்டப்பட வேண்டும்; நாங்கள் ஓர் ஆலோசனை செய்திருக்கின்றேம்; அந்தப்படியே நடந்தால், உனக்கும் நலம்; எங்களுக்கும் நலம்; நாள் ஒன்றுக்கு எங்கள் இனத்தாரி லிருந்து ஒவ்வொருவரை உனக்கு நாங்கள் இரை கொடுத்துக்கொண்டு

வருகின்றோம்; நீ அவ்வாறு எங்களால் அனுப்பப்படுகிற வரைப் பட்சித்து எங்களையும் பாதுகாத்துக்கொண்டு வர வேண்டும்,'' என்று பிரார்த்தனை செய்தன. சிங்கம் இந்த ஏற்பாட்டைப்பற்றி ஆலோசித்து, 'இதுவும் நல்லதுதான்,' என்று கருதி, ''அப்படியே செய்து வருகின்றேன்; நீங்கள் தவறாமல் ஒவ்வொரு நாளைக்கும் ஒவ்வொருவரை அனுப்பிக்கொண்டு வருவீர்களாக,'' என்று கூறிற்று.

பிறகு மிருகங்களெல்லாம் இந்த ஏற்பாட்டின்படியே ஒவ்வொரு நாளைக்கும் ஒவ்வொரு மிருகம் அனுப்பிக் கொண்டு வர, சிங்கம் இருந்த விடத்திலேயே அலையாமலிருந்து கொண்டு, தினந்தோறும் வரும் மிருகங்களைப் பட்சித்துச் சுகமாக வாழ்ந்து வந்தது. இப்படி இருக்குங்காலத்திலே, ஒரு நாள், ஒரு கிழ முயல் போக வேண்டிய முறை வந்தது. அப்போது மிருகமெல்லாங் கூடி, ''இன்றைக்கு உன் முறை யாதலால், நீ சீக்கிரம் போக வேண்டும்; பசி வேளை தப்பினால் அரசனுக்குக் கோபம் வந்துவிடும்; அப்படி வரும் பக்ஷத்தில், எல்லோருக்கும் கெடுதி சம்பவிக்கும்,'' என்று கூறி, விரைவாக அதனைப் பிடித்துத் தள்ளி அனுப்பின. முயலோ, 'இன்றைக்கு நமக்கு மரண காலம் வந்துவிட்டது; எப்படியாவது போய்த்தானே தொலைய வேண்டும்,'' என்று விசனத்துடன் புறப்பட்டுச் சிங்கத்தினிடம் சென்றது. அப்படிச்செல்லும்போதே அது, ''நாம் இந்த மரணத்தினின்றும் தப்பி மதோன்மத்தனைக் கொல்வதற்கு ஏதேனும் உபாயங் கிடையாதா? புத்திமான்கள் நினைத்தால், எதையும் சாதிப்பார்கள்; ஆதலால், இதைப் பற்றி ஆலோசித்தால், ஏதேனும் உபாயங் கிடைக்கும்,'' என்று பலவாறு யோசித்து, முடிவாக உபாயத்தைக் கண்டு, 'இதனால் சிங்கத்தை ஏமாற்றி விடலாம்,' என்று

தீர்மானித்துக்கொண்டு, மெதுவாக நடந்து, நெடு நேரஞ் சென்ற பிறகு சிங்கத்தின் பசி வேளை தப்பி நடுநடுங்கிச் செல்வதுபோல் அதனிடத்திற் சென்றது.

அப்போது சிங்கம் முயலைப் பார்த்து, 'கேவலமான கிழவனே, யானையுங்கூட என் பசி வேளை தப்பி வந்தது இல்லையே! அப்படி இருக்க, நீ மனதிற் சிறிதும் பயமில்லாமல், என் பசி வேளை தப்பி வந்திருக்கின்றாய்; உனக்கிந்த அகங்காரம் எதனால் ஏற்பட்டது? எவனுடைய தைரியத்தைக் கொண்டு நீ இவ்வாறு செய்தாய்?'' என்று மிகுந்த கோபங் கொண்டு, முன்னங்காலைத் தரையிலே மோதிக்கொண்டு, மீசைகள் படபட வென்று துடிக்கக் கேட்டது. அதற்கு முயல் மிகவும் பயங்கொண்டது போல நடித்து, அச்சிங்கத்தை நோக்கி, "சுவாமி, இஃது என்னால் நேர்ந்த தவறன்று; உம்முடைய பசி வேளைக்கு முந்தியே வந்தேன்; அப்படி வரும்போது அங்கே ஒரு மிருகேந்திரன் எதிர்ப்பட்டான். அவனுக்கு எதிரே வந்தால், அவன் என்னைப் பிடித்துத் தின்றுவிடக் கூடும். அதனால், நான், "'இவன் நம்மைத் தின்றுவிட்டால், நம்மிறைவர் ஆகாரத்திற்கு நாம் உபயோகப்படுவது தவறிப்போய்விடுமே! நம்முடைய சத்தியத்திற்கும் பங்கம் வருமே! ஆதலால் இவன் கண்ணுக்கு அகப்படாமல் மறைந்துகொள்ள வேண்டும்,'' என்று பயந்து ஆலோசித்து, அப்படியே ஓரிடத்தில் மறைந்து இருந்து, அவன் வேறிடத்திற்குச் சென்ற பின்பு புறப்பட்டு வந்தேன்; அதனாலேயே இவ்வளவு நேரமாயிற்று,'' என்று சொல்ல, சிங்கம் கடுஞ்சின மடைந்து, "இந்தக் காட்டில் என்னை யல்லாமல் வேறோர் அரசனும் இருக்கின்றானா? அவனைச் சீக்கிரத்தில் காட்டுவாய்; இப்பொழுதே நான் அவனை அறைந்து கொல்லுகின்றேன், வா சீக்கிரம்'' என்று அம்முயலை அழைத்தது.

உடனே அம்முயல், தான் யோசித்த உபாயப்படியே அந்தச் சிங்கத்தை அழைத்துக்கொண்டு போய்ச் சேறும் நீரும் மிகுந்திருந்த ஒரு பாழுங் கிணற்றைக் காட்டி, "இதி லேதான் அவன் இருக்கின்றான்," என்று கூறிற்று. உடனே சிங்கம் அவசரப்பட்டு, முயலின் வார்த்தையை நம்பிப் போய், அந்தக் கிணற்றை உற்றுப் பார்த்தது. அதில் தன்நிழல் தோன்றவே, அந்த மடச்சிங்கம், அதனை வேறொரு சிங்கமென்றே நினைத்து, அதனோடு சண்டை செய்து அதனைக் கொல்லும் பொருட்டுக் கோபத்தோடு அக்கிணற்றிற் பாய்ந்தது. ஐயோ! அஃது அவ்வாறு பாய்ந்தவுடனே, சேற்றிற்குள் அழுந்தி, ஜலத்தை விட்டு வெளியேற முடியாமல், நாசியில் தண்ணீர் ஏறிச் சிறிது நேரத்திற்குள் இறந்தது. முயல், 'சனியன் தொலைந்தது!' என்று சந்தோஷத்துடனே துள்ளிக்கொண்டோடி, மற்ற மிருகங்களுக்கு நடந்த செய்தியைச் சொல்ல, அவைகள் இதனை ஏற்றிப் போற்றி இடர் நீங்கி மகிழ்ந்து வாழ்ந்தன.

9. துடுக்குள்ளவர் நேசம் ஆகாது.

துடுக்கு ளாரிதஞ் சொல்லினும்
அவரோடு நேயந்
தொடுத்தி டாதவர் அவனியிற்
சுகமிகப் பெறுவர்;
அடுத்த தீயரைச் சேர்ப்பவர்,
மூட்டினுக் கன்று
படுக்கை மேலிடங் கொடுத்தபேன்
எனத்துயர்ப் படுவார்.

(இ-ள்) குறும்புள்ளவர்கள் இதமான வார்த்தைகளைக் கூறி னாலும், அந்த வார்த்தைகளை நம்பி அவருடனே உறவு கொள் ளாதவர்கள் இந்தப் பூவுலகத்திலே மிகுந்த சுகத்தை யடைவார்

கள்; அவ்வாறன்றித் தம்மிடத்தே அடுத்த தீங்குள்ளவர்களை உறவாகச் சேர்த்துக்கொள்பவர்கள், அந்தக் காலத்தில் ஒரு மூட்டுப் பூச்சிக்கு இராஜ சயனத்தின்மேல் இடங்கொடுத்த சீலைப்பேன் துயரடைந்தது போலத் துன்ப முறுவார்கள்.

மூட்டுப் பூச்சிக்கு இடங் கொடுத்துச் சீலைப்பேன் கெட்ட கதை.

ஓர் அரசனுடைய பஞ்சணையில், மந்த விசர்ப்பணி என்னும் ஒரு சீலைப்பேன் தங்கி, அரசன் தூங்குங் காலத்தில் அவனை மிருதுவாகக் கடித்து, அவனுக்குத் தெரியாமல் அவனுடைய இரத்தத்திற் சிறிது சிறிது குடித்து, நெடுங்காலமாக ஜீவித்துக் கொண்டு இருந்தது. அப்படி இருக்குங் காலத்தில், அதன் வீட்டிற்கு மிகவுந் துடுக்குள்ள டிண்டிபன் என்னும் மூட்டுப் பூச்சி வந்து, தனக்கும் அங்கே வாசஞ் செய்வதற்குச் சிறிது இடங் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டது. உடனே சீலைப்பேன் அதைப் பார்த்து, "அப்பா, நீ மிகவுந் துடுக்குள்ளவன்; அரசன் தூங்குவதற்கு முன்னுகவே பொறுமையின்றி உன்னுடைய முட்களைப் போன்ற பற்களினுலே அவனை வெடுக்கென்று கடித்துக் கலகத்தை மூட்டிவிடுவாய்; அதனுல், உனக்கு நாசம் வருவதோடு, எனக்கும் நாசம் வரும். இடத்திற்குத் தகுந்தபடி உனக்கு நடக்கத் தெரியாது; நீ அரச சயனத்தி லிருக்கத் தக்கவனல்லன் நீ சுய நலத்தையே கருதிக் கெடும் சும்பன்; ஆதலால், இவ்விடத்தை விட்டு நீ விரைவாக ஓடிப்போ," என்று கோபித்துக் கூறி அதனைத் துரத்திற்று.

அப்போது மூட்டுப் பூச்சி, மிகவும் வருத்த முற்றுத் தாழ்மையோடு சீலைப்பேனை நோக்கி, "நண்பனே, நான் உன்னுடைய சார்பிலிருக்கலாமென்று வந்தேன்; மிகவும்

துடுக்காகக் காரியங்களை நடத்துதல் என்னுடைய குல இயற்கையானாலும், உன்னிடத்திலிருக்கும் போது நான் அவ்வாறு செய்ய மாட்டேன். நீ எப்படி நடக்க வேண்டு மென்று சொல்கின்றாயோ, அப்படியே நடக்கின்றேன்; நீ என்னைத் தள்ளி விடாமல் சேர்த்துக் கொள்ள வேண்டும்,'' என்று பிரார்த்தித்தது. அங்ஙனம் பிரார்த்தித்த வுடனே சீலைப்பேன் மனமிரங்கி, "சரி; நீ மிகவுங் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறபடியால், உனக்கு இங்கே இடங் கொடுக்கிறேன்; நீ வெடுக்கென்று அரசனைக் கடித்துக் கலகத்தை மூட்டி விடாமல், அரசன் நித்திரை செய்யும் சமயம் பார்த்து மெத்தெனக் கடித்துச் சிறிது இரத்தம் பருகி, ஜீவித்து இருப்பாயாக; ஜாக்கிரதை! மறந்து விடாதே!'' என்று சொல்லித் தன்னிடத்திலிருக்கும்படி அனுமதி கொடுக்க, மூட்டுப் பூச்சி நல்லதென்று சம்மதித்து அங்கோரிடத்திற் பதுங்கி இருந்தது.

இப்படி இருக்கும்போது, இராஜாவந்து அந்தச் சயனத்தில் இராத்திரி நேரத்தில் படுக்க, மூட்டுப் பூச்சி, சேர்ந்த அன்றைக்குத் தானே சீலைப்பேன் தனக்குச் சொன்னவற்றை யெல்லாம் மறந்து, தன் ஜாதிக் குணத்தை விடாமல், அரசன் நித்திரை கொள்வதற்கு முந்தியே வெடுக்கென்று அவனைக் கடித்தது. உடனே அரசன் திடுக்கிட்டெழுந்து, 'படுக்கையில் ஏதோ கடித்தது! சோதித்துப் பாருங்கள்!' என்று சோதனைக் காரரிடம் சொல்ல, அவர்கள் விளக்கை யெடுத்துக்கொண்டு படுக்கையைப் புரட்டிச் சோதித்தார்கள். அப்போது மூட்டுப் பூச்சி விரைந்தோடி, அவர்கள் கண்ணில் அகப்படாமல், கட்டிற் சந்திற் புகுந்து ஒளித்துக்கொண்டது. சீலைப்பேனோ, மெதுவாக நடக்கும் சுபாவமுடைய தாகையால்,

தன்னுடைய குல வியற்கைப்படி, பையப் பைய ஊர்ந்து சென்றுகொண்டு இருந்தது. அதைக் கண்ட உடனே சோதனைக்காரர்கள், "இதுதான் நம் அரசனைக்கடித்தது!" என்று கோபத்துடனே அதனைப் பிடித்து நசுக்கிக் கொன்றார்கள். அந்தச் சீலைப்பேன் வகை தெரியாமல் மூட்டுப் பூச்சிக்கு இடங்கொடுத்தபடியால், தான் வீணே அரசனைக் கடிப்பதற்கு முன்பே நசுக்குண்டு உயிர் இழந்தது.

10. சிறியார் உறவால் தீங்கு வரும்.

குற்றமில் பெரிய ரோடு
கூடினோ ரினிது வாழ்வர்;
பற்றிலாச் சிறியர் நேயம்
பற்றினர், கோடிசோற் கேட்டுச்
செற்றமார் சிங்கத் தோடு
சேர்ந்தவொட் டகையைப் போலப்
பெற்றமா வுயிர்விட் டந்தோ!
பெருமையும் இழப்பர் மாதோ.

(இ-ள்) குற்ற மற்றவர்களாகிய பெரியோர்களுடனே சேர்ந்தவர்கள், சந்தோஷமாகச் சுகம் பெற்று வாழ்வார்கள்; மனத்திலே சிறிதும் அன்பு இல்லாதவராகிய அற்பருடைய நேயத்தைப் பொருந்தினவர்கள், ஒரு காக்கையினுடைய வார்த்தையைக் கேட்டுச் சினம் பொருந்திய ஒரு சிங்கத்துடனே கூடிய ஒட்டகை உயிரிழந்தது போல, தாங்கள் அருமையாகப் பெற்ற உயிரையும் விட்டு, ஐயோ! உயிர் விடுவதோடு தங்கள் பெருமையையும் இழந்து விடுவார்கள்.

சிங்கத்துடன் கூடியிறந்த ஒட்டகத்தின் கதை.

மரங்க ளடர்ந்த ஒரு காட்டிலே, மதோற்கடன் என்னும் ஒரு சிங்கம், ஒரு நரியையும், புலியையும், காக்கையையும் தனக்கு மந்திரிகளாக வைத்துக்கொண்டு, அர

சாண்டு வந்தது. அப்படி அரசாட்சி புரிந்து வருகிற காலத்தில், ஒரு நாள், ஓர் ஒட்டகம் வழிதப்பி அக்காட்டின் வழியாக வந்தது. அப்போது சிங்கத்தின் மந்திரியாகிய காகம், அதைக் கண்டு, 'நீ யார்?' என்று வினவிற்று. அதற்கு ஒட்டகம், "நான் நெடுந்தூரத்தில் இருந்து ஓரிடத்திற்குச் செல்லக் கருதிப் புறப்பட்டு, இங்கே வழி தவறி வந்துவிட்டேன்; எனக்கு நீ துணைசெய்து, என்னை நீயிருக்குமிடத்திற் சேர்த்துக்கொள்ளவேண்டும்," என்று சொல்ல, உடனே காகம், சிங்கத்தினிடம் அதை யழைத்துக்கொண்டு போய், அதன் காரியத்தைச் சொல்லிற்று. சிங்கம் அதைக் கேட்டு, ஒட்டகத்தை நோக்கி, "நீ அஞ்ச வேண்டாம்; இன்று முதல் நம்முடைய மந்திரிகளுடனே நீயும் ஒரு மந்திரியாயிருந்து இங்கே சுகமாக வாழக்கடவாய்," என்று இன்மொழி கூறி, அதற்கு மந்தானகன் என்று பெயர் இட்டு, அதனைத் தன்னுடைய கூட்டத்திற் சேர்த்துக் கொண்டது. அதன்மேல் ஒட்டகம் அந்தச் சிங்கத்தின் கூட்டத்துடனே சேர்ந்து, நன்றாய் உணவுண்டு சுகமாக ஜீவித்திருந்தது.

இப்படி இருக்குங் காலத்தில், ஒரு நாள், சிங்கத்திற்குத் தேகம் அசௌக்கியமா யிருந்தது. அது காரணமாக அந்தச் சிங்கம், தனக்கு இரை தேட முடியாமல் இருந்தபடியால், தன்னுடைய பழைய மந்திரிகளாகிய நரி, புலி, காக்கை ஆகியவைகளை யழைத்து, "இன்றைக்கென்னால் இரை தேடுதல் முடியாது; நீங்கள் போய் ஏதாவது இரை கொண்டு வர வேண்டும்; அதில் நான் தின்று மிகுந்ததை நீங்கள் தின்ன வேண்டும்," என்று சொல்ல, அம்மூன்றும் ஒட்டகத்தையும் அழைத்துக்கொண்டு, அந்தச் சிங்கத்தின் கட்டளைப்படியே அக்காட்டிற் புகுந்து, பல

விடங்களிலும் சென்று, இரைதேடிப் பார்த்து, ஒன்றும் அகப்படாமையால், அதைப்பற்றி வஞ்சனையாக ஆலோசிக்கத் தொடங்கி, உடனே மந்தானகனுக்கு ஒரு வேலையிட்டு, அதனைத் தூரத்திற் செல்லும்படி அனுப்பிவிட்டு, 'இதற்கு என்ன செய்யலாம்?" என மூன்றுங் கலந்து பேசின. அப்போது காகம், நரியையும் புலியையும் பார்த்து, "நாம் எவ்வளவோ பிரயாசைப்பட்டுத் தேடியும் இரை யொன்று மகப்படவில்லை; நாமும் நம்மரசனும் பட்டினி கிடக்க வேண்டிய சமயம் நேர்ந்திருக்கின்றது; இதை நிவிர்த்தி செய்து நாம் சந்தோஷமாக இரை யுண்பதற்கு ஒரு வழியிருக்கின்றது; அதைச் சொல்லுகிறேன்; கேளுங்கள்: இப்போது நம்முடன் புதியவனுகச் சேர்ந்திருக்கிற மந்தானகனுல், நமக்கொரு பிரயோஜனமுமில்லை; ஆதலால், அவனைக் கொன்று எல்லோரும் புசித்து விடலாம்; நம்மரசனுக்கும் இதைச் சொல்லிக் காரியத்தைச் சரிப்படுத்தி விடுவோம்," என்று கூற, அவ்விரண்டும், "நீ சொல்வது சரிதான்; நம்முடைய அரசன் அவனுக்கு அபயங் கொடுத்திருக்கின்றுன். அப்படி இருக்க, நாம் அவனை யெவ்வாறு கொல்லுதல் கூடும்? இது நியாயமு மல்லவே!" என்று உரைத்தன.

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே காகம், "நாம் எப்படியாவது இன்றைக்கு மந்தானகனைக் கொல்லுதற்கு உபாயந் தேடா விட்டால், சிங்கராஜன் மிக்க பசியோடிருப்பதால், அவன் கையால் நாமெல்லோரும் மரணமடைவது நிச்சயம்; 'பசிவந் தெய்திடிற் பறந்திடும் ஞானமும்,' என்றபடி, பசி மிகுந்தவர்களுக்கு அச்சமயத்தில் விவேக மெல்லாம் பறந்து போய்விடும்; பசி மிகுதியானுல் தாயானவள் பிள்ளையையும் கவனியாமல் விட்டுவிடுவாள்;

பாம்பு தானிட்ட முட்டைகளைக் குடிக்கும்; நாய் தான் ஈன்ற குட்டிகளையும் தின்றுவிடும். ஆகையால், சிங்கராஜன் நம்மை உறவினர் என்று பார்க்கமாட்டான்; இதை நீங்கள் சிறிதும் உணரவில்லை; நம்முயிரைக் காப்பாற்றுவதற்கு மந்தானகனைக் கொல்வதற்குச் சூழ்ச்சி செய்தலே தகுதியான காரியம்; நான் இதற்குத் தக்க உபாயஞ் செய்கின்றேன்; நீங்கள் பேசாம லிருங்கள்," என்று சொல்லிவிட்டு, உடனே சிங்கத்தினிடஞ்சென்று, "சுவாமி, இன்றைக்கு இரை ஒன்று மகப்படவில்லை," என்று கூறிற்று. அப்போது சிங்கம் கவலையுற்று, "இதற்கென்ன வுபாயஞ் செய்யலாம்?" என்று வினவ, காகம், "அரசே, தங்கள் வசத்திலேயே தக்க இரை அகப்பட்டிருக்கிறது; இதைப் பற்றி முன் எனக்கு ஞாபகம் வரவில்லை; இப்பொழுது தான் வந்தது; இனி, கவலையுமில்லை; ஆலோசிக்க வேண்டுவது மில்லை; இப்போது நாம் இரைக்காலோசனை பண்ணினது, கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய் தேடின கதைபோல இருக்கின்றது," என்று சொல்லிற்று. இதைக்கேட்ட வுடனே சிங்கம், ஆச்சரியப்பட்டு, "என்னிடத்தில் ஆகார மெங்கே இருக்கின்றது? நீ சொல்வது விநோதமாக இருக்கின்றதே!" என, காகம், "சுவாமி, மந்தானகன் நல்ல இரையாக இருக்கின்றானே! அவனிருக்கும்போது வேறே ஆகார மேன் தேடவேண்டும்?" என்று சொல்லிற்று. இந்தவார்த்தைகள் செவியிற் புகுந்த மாத்திரத்திலே, சிங்கம், 'சிவசிவா!' என்று பூமியைத் தொட்டுக் காதுகளின்மேற் கைகளை வைத்துக்கொண்டு, காகத்தை நோக்கி, "மந்திரி, நீ மகா பாதகமான வார்த்தையைக் கூறினை; நான் அந்த மந்தானகனுக்கு அபயங் கொடுத்திருக்கின்றேனே! அப்படி இருக்க, நீ இந்த அனி

யாயமான வார்த்தையைச் சொல்லலாமா? அடைக்கலம் புகுந்தவனைக் கொல்லலாமா? கோதானம், பூதானம் முதலியவற்றைக்காட்டிலும் அபய தானம் மேம்பட்டதாகும்; அசுவமேத யாகஞ் செய்யும் புண்ணியத்தினும் இது சிறந்ததென்று சாஸ்திரங் கூறுகின்றது. இவையெல்லாம் தெரிந்திருந்தும், இந்த அடைக்கல தானத்திற்கு விரோதஞ் செய்தால், மகா பாவம் வந்து சேரும்; இதை விட்டு மறு வார்த்தை பேசு," என்று சொல்ல, காகம், "அரசரே, நீர் சொல்லும் சாஸ்திரமும் சரிதான்; ஆனாலும், ஒரு குலத்தைக் காப்பாற்றுவதற்காக ஒருவனைக் கைவிடலாம்; ஒரு கிராமத்தை ரக்ஷிப்பதற்காகவும் ஒரு தேசத்தைப் பரிபாலித்தற் பொருட்டும் ஒரு கிராமத்தை விட்டுவிடலாம்;ஒருவன் தன்னிமித்தம் பூமியைக் கைவிடலாம். இப்படியும் சாஸ்திர மிருக்கின்றது; ஆதலின், நாம் நால்வரின் பசியைத் தணிப்பதற்காக மந்தானகனைக் கொல்லலாம்; இதனால், தோஷமில்லை; இதற்காகத் தாங்கள் கவலைப்பட வேண்டுவதில்லை; தாங்களே அவனைக் கொல்ல வேண்டுவதுமில்லை; நாங்கள் மூவருமே அவனைக் கொன்று விடுகிறோம்; இல்லாவிடில், அவனே, 'என்னைக் கொல்லுங்கள்,' என்று சாவதற்கு இணங்கும்படி நான் செய்துவிடுகின்றேன்; அவன் அவ்வாறு சொன்ன பின்பு வேண்டுமானால், அவன் சம்மதத்தின்மேல் நாங்களே அவனைக் கொல்லுகின்றோம்; நீர் பேசாம லிரும்," என்று சொல்லிற்று. இந்தத் தந்திரமான வார்த்தைகளைக் கேட்டவுடனே சிங்கம் ஒன்றும் சொல்லாமல், மௌனமாக இருந்தது.

அப்படி இருக்கவே, மௌனமாயிருப்பதே மாறுவிருப்பம்,' என்பதற் கிணங்க, சிங்கம் பேசாம லிருந்ததையே அதன் கட்டளையாக நினைத்துக்கொண்டு, காகம் போய்

ஒட்டகம் தன் வாயினாலேயே தன்னைக் கொல்லும்படி சொல்லச் செய்வதற்கு ஒரு சூழ்ச்சி செய்து, அதற்கிணங்கி இருக்கும்படி நரிக்கும் புலிக்கும் இரகசியமாகச் சொல்லி வைத்துப் பின்னர் ஒட்டகத்தையும் அவைகளையும் அழைத்துக்கொண்டு சிங்கத்தினிடம் வந்து, "சுவாமி, இன்றைக் கிரை யொன்று மகப்படவில்லை; ஆதலால், பட்டினியிராமல், என்னையாவது புசித்துப் பசியாறுங்கள்," என்று கூறிற்று. அதற்குச் சிங்கம், "நீ எம்மாத்திரம்! உன்னைத் தின்பதனால் என் பசி தணியுமா? உன் மாமிசம் என் கடைவாய்ப் பல்லுக்கும் பற்றாதே!" என்று சொல்ல' காகம் சொல்லிவைத்த தந்திரப்படி, நரி உடனே சிங்கத்தின் முன்பு வந்து, "சுவாமி, நான் சற்றுப் பெரியவனா யிருக்கிறேன்; என்னையேனும் புசியும்," என்று சொல்லிற்று; அதற்கும் சிங்கம், "நீயும் என் வயிற்றுக்குப் பற்றமாட்டாய்," என்று சொல்ல, புலி, உடனே வந்து, சிங்கத்தினிடம், "சுவாமி, நான் இவ்விருவரினும் பெரியவனா யிருக்கின்றேன்; என்னையாவது புசித்துப் பசி தணியும், என்று உரைத்தது. அதைக்கேட்டுச் சிங்கம், "நீயும் அவ்வளவு பெரியவனல்லன்; எனக்குப் பற்றாத இரையாகத்தான் இருக்கின்றாய்," என்று சொல்லி அதையும் மறுத்தது. இவையெல்லாம் படிப்படியாக இவ்வாறு விசுவாசமுடையவைகள் போலச் சொல்லி வந்ததால், ஒட்டகமும் இச்சூதை யுணராமல் சொன்னால் அப்போது அதனைக் கொன்றுவிடலாம் என்று காகம் உபதேசித்தபடி யோசித்தே இவ்வாறு கூறின. அந்தோ! ஒட்டகம் இச்சூதை யுணராமல், மேற்கூறியபடி புலியையும் சிங்கம் மறுத்தவுடன், தானும் விசுவாசத்தைக்காட்ட நினைத்து அதன் முன்னே

போய், "சுவாமி, நான் எல்லாரினும் மிகவும் புஷ்டி யுடையவனு யிருக்கின்றேன்; இஷ்டமானல், என்னைக் கொன்று தின்று பசி தீரும். சமயத்துக்குதவாமல் நான் எதற்காக விருக்கின்றேன்?" என வஞ்சனை யில்லாமற் சொல்ல, இந்த வார்த்தைகள் அதன் வாயினின்றும் புறப் பட்டும் புறப்படாமலு மிருக்கையிலேயே, சிங்கத்தையும் எதிர்பாராமல், சரிசரி யென்று உடனே புலியும் நரியும் அதன்மேற் பாய்ந்து, அதனை நிமிஷநேரத்திற் கொன்றன. பின்பு அதனிறைச்சியை எல்லாம் அவை ஒன்ருகக் கூடிக்கொண்டு தின்றுவிட்டன.

11. சிறியாரோடும், அவர் வல்லமை யுணராமல் பகைத்தால், அவமானம் வரும்.

உருவத்திற் சிறியானேன் றெருமனிதன்
உள்வலியை யுணர்ந்தி டாமல்
கருவித்துப் பகைவிளைத்தன் னவன்றனக்குத்
தீங்கியற்றக் கருது வோர்கள்,
ஒருசிட்டின் முட்டைகளைக் கவர்ந்தகடல்
அவமானம் உற்ருற் போலப்
பெருவெற்றி தனையிழந்து கீர்த்தியின்றி
அவமானம் பெறுவர் மாதோ.

(இ - ள்.) உள்ளே காரிய வன்மையுடைய ஒரு மனிதன் தோற்றத்திற் சிறியவனுயிருந்தால், அவன் உருவத்திற் சிறியவ னென்று அவனுடைய உள் வலிமையை அறியாமல் கருவங் கொண்டு, அவனேடு மிக்க பகையையுண்டாக்கி, அப்பேர்ப்பட் டவனுக்குக் கெடுதி செய்ய நினைப்பவர்கள், ஒரு சிட்டுக் குரு வியை அற்பமானதென்று நினைத்து அதன் முட்டைகளைக் கவர்ந்த கடலானது பின்னர் அவமானத்தை அடைந்தாற் போல, தங்களுக்குக் கிடைக்கப் பெற்றுள்ள பெரிய ஜயத்தைக் கைவிட்டுப் புகழின்றி மான பங்கத்தை யடைவார்கள்.

குருவியின் முட்டைகளைக் கவர்ந்த கடல் அவமான முற்ற கதை.

சமுத்திரக் கரையோரத்தில், ஆணும் பெண்ணுமாகிய இரண்டு சிட்டுகள், ஒரு செடியின் கீழ்க் கூடுகட்டிக்கொண்டு வாழ்ந்திருந்தன. அப்படி இருக்கும் போது பெட்டைச் சிட்டு, ஆண் சிட்டைப் பார்த்து, "எவ்விடத்தில் முட்டையிடலாம்?" என்று வினவ, ஆண் சிட்டு, "நாமிருப்பதே நல்ல இடம். இவ்விடத்திலேயே முட்டையிடலாம்," என்று கூறிற்று. அதைக்கேட்டுப் பெண், "இதுவோ கடற்கரையா யிருக்கின்றது; ஒருவேளை கடல் முட்டைகளை அடித்துக்கொண்டு போனாலும், போகும்; ஆதலால், எனக்குப் பயமாயிருக்கிறது," என்று கூற, ஆண் சிட்டு, "சமுத்திரம் பெரியதா யிருந்தாலும், நான் சிறுவனாயிருந்தாலும் எனக்கு இடர் செய்வதற்குச் சமுத்திரத்திற்குச் சாமர்த்தியமில்லை," என்றுரைத்தது. அப்போது பெண் சிட்டு, ஆச்சரியமுற்று, "உனக்கும் சமுத்திரத்திற்கும் எவ்வளவோ தாரதம்மியமுளது; உன் வல்லமை அதனிடத்திற் செல்லுமா? ஒருவன், தன் வலியும் பிறன் வலியும் கவனித்து வினைபுரியாவிடில், துன்பத்தை யடைவான்; இவற்றைக் கவனித்துச் செய்பவன், சுகத்தை யடைவான். நீ என்பேச்சைக் கேட்கவேண்டும். கேளாவிடில், அபாயம்வரும்; எவன் மித்திரன் பேச்சைக் கேட்கவில்லையோ அவன், அன்னங்களின் பேச்சைக் கேளாத ஆமை மரணமடைந்தது போல, நாசத்தைஅடைவான்; இன்னும் ஒரு துன்பம் நேரிடுவதற்கு முன்னே அதை நிவிர்த்தி செய்துகொள்ள ஆலோசிக்கிறவனும், அது வரும்போதே அதைத் தீர்க்கும் வழியைத் தேடுவோனும் சௌக்கியத்தை யடைவார்கள். "வருவது வரட்டும்; வந்த

பின் பார்த்துக்கொள்ளலாம்,'' என்றிருப்பவன், வந்த பின் காப்போன் என்னும் மீனைப்போல உயிரிழப்பான்; ஆதலால், எதையும் ஆலோசித்துச் செய்ய வேண்டும்; எதிலும் முன் ஜாக்கிரதையுடனிருக்க வேண்டும்,'' என்று கூற, ஆண் சிட்டு, "எனக்கெல்லாம் தெரியும்; பாதக மொன்றும் நேராது; நீ என் சொற்படி இங்கேதானே முட்டையிடு; அபாயம் வந்தால், நான் ஒரு கை பார்த்துக்கொள்வேன்,'' என்று தைரியம் சொல்லிற்று. அதன் மேல் பெண் சிட்டு, அந்த ஆணின் வார்த்தையை நம்பி, அவ்விடத்திற்றுனே முட்டையிட்டது.

அப்படி முட்டையிட் டிருக்கும்போது, ஒரு நாள், சமுத்திரம், அந்த ஆண் சிட்டின் வல்லமையை யுணராமல், அதன் முட்டைகளை அடித்துக்கொண்டு போய் விட்டது. அப்போது பெண் சிட்டு, மிகவும் விசனமுற்று, ஆண் சிட்டை நோக்கி, நான் சொன்னதைக் கேளாமல் இவ்விடத்திலேயே முட்டை யிடும்படி கட்டளை யிட்டாய்; நானும் அப்படியே செய்தேன். இப்பொழுது சமுத்திரம் முட்டைகளை அடித்துக்கொண்டு போய்விட்டதே! இனி இந்தச் சங்கடத்திற்கென்ன செய்யலாம்?'' என்று புலம்ப, ஆண் சிட்டு, "பெண்ணே, நீ பயப்படாதே; நான் நம் முட்டைகளை எளிதிற் கொண்டுவருகின்றேன்; என்னுடைய வல்லமையைப் பார்,'' என்று சொல்லி, அதன் விசனத்தை நீக்கிவிட்டு, உடனே எல்லாப் பறவைகளையும் அழைத்துக்கொண்டுபோய், கருடனைக் கண்டு, அதன் பாதங்களில் விழுந்து வணங்கி, தன் குறையைக் கூறிற்று. அதைக் கேட்டுக் கருடன் மனமிரங்கி, அவ்விஷயத்தை விஷ்ணுவுக்கறிவித்து, "இந்தச் சிட்டு, முட்டைகளை இழந்து வருத்தப்படுகின்றது; ஆதலால், அம்முட்டை

களைக் கொடுக்கும்படி சமுத்திரத்திற்குக் கட்டளையிட வேண்டும்,'' என்று விண்ணப்பஞ் செய்ய, விஷ்ணுவான வர், சமுத்திரத்தைக் கூப்பிட்டு, "நீ இந்தச் சிட்டின் முட்டைகளை இப்பொழுதே இதனிடம் கொடுத்துவிட வேண்டும்,'' என்று கட்டளை யிட்டனர். உடனே சமுத்திரம் முட்டைகளைக் கொண்டு வந்து சிட்டினிடம் கொடுத்து விட்டு, அவமானத்தை யடைந்தது.

12. மித்திரர் சொல்லைக் கேளாதவர்க்குத் துன்பம் வரும்.

நன்றுபுரி நண்பரின்சொல் நாடியவர் சொற்படியே
என்றும்நடப் பார்சுகவாழ் வெய்துவார்;—அன்பருரை
கேளார், அனங்கள்மொழி கேளாத கூர்மம்போல்,
வாழாது வீழ்வருயிர் மாய்ந்து.

(இ-ள்) தமக்கு நலஞ்செய்கின்ற நேயருடைய நலமான வார்த்தைகளை விரும்பி, அவர் கூறும் புத்தியான வார்த்தைகளின் படியே எப்பொழுதும் தவருமல் நடப்பவர்கள், சுகம் பொருந்திய வாழ்வை யடைவார்கள்; அத்தகைய அன்பர்களுடைய வார்த்தைகளைக் கேட்டு நடக்காதவர்கள், தனக்குச் சிநேகமாகிய 'அன்னங்களின் வார்த்தையைக் கேளாமல் மறந்துவிட்டு மரணமடைந்த ஆமைபோல, உலகத்தில் நிலைபெற்று வாழாமல், உயிர் நீங்கிக் கீழே வீழ்ந்தழிவார்கள்.

அன்னங்களின் சொல்லை மறந்திறந்த ஆமையின் கதை.

விகடம், சகடம் என்னும் இரண்டு அன்னங்களும், கம்புக்கிரீவன் என்னும் ஒராமையும் சிநேகங் கொண்டு, ஒரு குளத்தில் சந்தோஷமாக வாழ்ந்து வந்தன. இப்படி அவை வாழ்ந்து வருங்காலத்தில், அங்கே மழைக்குறைவு நேரிட்டுச் சில தினங்களுக்குள் அக்குளம்

வற்றிப் போகக் கூடியதா யிருந்தது. அதை யறிந்த வுடனே அன்னங்க ளிரண்டும், "இப்போது இக்குளம் வறண்டு போகக்கூடிய தருணமாயிருக்கின்றது: இனி இவ்விடத்திலிருந்தால், நமக்குக் கஷ்டம் உண்டாகும்; ஆதலால், நாம் வற்றாத வேறொரு குளத்திற்குப் போய் விடுவதே யோக்கியம். இதை நம்முடைய சிநேகிதனாகிய கம்புக் கிரீவனுக்கும் சொல்லி, அவனையும் அழைத்துக் கொண்டு போய்விடுவோம்," என்றுபேசி முடிவு செய்து கொண்டு, கம்புக்கிரீவனுக்கு இவ்விஷயத்தைத் தெரிவித்தன. அவற்றின் வார்த்தைகளைக் கேட்டவுடனே கம்புக் கிரீவன் அன்னங்களை நோக்கி, "நீங்களோ, உத்தேசித்த விடத்திற்கு மிகவும் விரைவாகப் பறந்து போய் விடுவீர் கள்; நானோ, மந்தமான நடையை யுடையவன்; என்னால் எப்படி வருதல் கூடும்?" என்றுகேட்டது. அன்னங்கள், "நீ நாங்கள் கூறும் வார்த்தைப்படி செய் வாயானால், உன்னையும் நாங்கள் செல்லு மிடத்திற்கு இலகுவாகக்கொண்டு செல்வோம்," என்றுரைத்தன. ஆமை அவ்வாறே செய்வதாக ஒப்புக்கொள்ள அன்னங் களிரண்டும் ஒரு கழியைக் கொண்டு வந்து ஆமை முன்னேவைத்து, அதனை நோக்கி,"நீ இந்தக் கழியின் நடுப்பாகத்தை வாயினாற் கௌவிக்கொண்டு தொங்க வேண்டும்; நாங்கள் இதன் இரண்டு பக்கத்து நுனியை யும் பக்கத்துக் கொருவராகக் கௌவிக்கொண்டு போகின்றோம். நாம் குறித்தவிடம் போய்ச் சேரும் வரையிலும் நீ வாய் திறந்து பேசவே கூடாது; அவ்வாறு பேசுவாயானால், அபாயம் வரும், ஜாக்கிரதையாயிரு," என்று சொல்ல, ஆமை அவ்வாறே செய்கிறேன் என்று ஒப்புக்கொண்டு அக் கழியைக் கௌவிக்கொண்டது.

உடனே அன்னங்கள் கழியின் இரண்டு பக்கங்களையும் அலகால் கௌவி, அதனோடு ஆமையைத் தூக்கிக்கொண்டு சென்றன. அப்படி அவை ஆகாய மார்க்கமாகப் பறந்து போகுங் காலத்தில், ஒரு பட்டணத்திற்கு நேரே செல்லும்போது, அந்நகர வாசிகள் அவற்றின் செய்கையைப்பார்த்து, அதிசயித்து, ஓரிடத்திற்கூடி, "இஃதென்ன விநோதம்! ஒரு கழியின் நடுவே ஆமையொன்று பற்றிக்கொண்டு தொங்க, அதனை இரண்டன்னங்கள் தூக்கிச் செல்கின்றனவே! இவைகளுக்குள் எதனால் இந்தச்செய்கை ஏற்பட்டது?" என்று பேரிரைச்சலிட்டுப் பேசிக்கொண்டார்கள். அந்த இரைச்சலைக்கேட்டவுடனே கம்புக்கிரீவன், தனக்கு அன்னங்கள் சொல்லிய வார்த்தையை மறந்து, அந்த மனிதர்களின் பேச்சிற் கவனத்தைச் செலுத்தி, அதைப்பற்றி அன்னங்களிடம்வினவ ஆரம்பித்து, "இந்தப் பேரிரைச்சல் எங்கிருந்து உண்டாகின்றது?" என்று கேட்கும்பொருட்டு வாயைத் திறந்தது. ஐயோ! அங்ஙனம் வாய் திறந்த மாத்திரத்தில் அந்தக் கூர்மம் கழியை விட்டு ஆகாயத்திலிருந்து பூமியில் வீழ்ந்தது. அங்கு நின்றவர்களில் புலால் தின்னும் சில மனிதர்கள், உடனே அதனையெடுத்துக் கொண்டுபோய்க் கொன்று தின்றார்கள்.

13. துன்பம் வருமுன்னே ஜாக்கிரதையாக இருத்தல் வேண்டும்.

தீங்குவரு முன்னதற்குத் தப்பும் மார்க்கம்
தெரிந்துசெய்வார், வருமுன்காப் போனென் கின்ற
பாங்குபெறு மீன்போல நிலைத்து வாழ்வர்;
பற்றுதுயர் வரும்போதோர் உபாயஞ் செய்வோர்,

தூங்காமல் வருங்காற்காப் போனும் மீன்போல்
சுகம்பெறுவார்; வந்தபின்பார்ப் போமென் பார்கள்,
ஏங்கிவந்த பின்காப்போன் என்னும் மீன்போல்
இறந்துடலம் ஒழிந்துதுன்பம் எய்து வாரே.

(இ-ள்) துன்பம் வருவதற்கு முன்னரே, அதற்குத் தப்புகின்ற வழியை அறிந்து செய்து கொள்பவர்கள், வருமுன் காப்போன் என்ற அழகையுடைய மீனைப்போல, உலகத்தில் நிலைபெற்றுச் சுகமாக வாழ்வார்கள்; பிடிக்கின்ற தீங்கானது வருஞ்சமயத்தில் அதைத் தீர்த்துக்கொள்வதற்கு ஒரு தந்திரஞ் செய்பவர்கள், சோம்பியுறங்காமல், வருங்காற் காப்போன் என்னும் பெயரையுடையதாகிய மீனைப்போல, சுகத்தை யடைவார்கள்; எந்தத் தீங்கும் வந்த பின்பு பார்த்துக்கொள்ளலாம் என்று மூடத்தனமாகப் பேசாமலிருப்பவர்கள், வந்தபின் காப்போன் என்னும்மீன் இறந்தொழிந்ததுபோல அழுதிரங்கி, உடலொழிந்திறந்து, மிக்க துயரத்தை யடைவார்கள்.

மூன்று மீன்களின் கதை.

ஒரு நீர் நிறைந்த குளத்தில், வருமுன் காப்போன், வருங்காற் காப்போன், வந்த பின் காப்போன் என்னும் பெயர்களையுடைய மூன்று மீன்கள் நெடுங் காலமாக வாழ்ந்துகொண்டு இருந்தன. அப்படி இருக்குங் காலத்தில், ஒரு நாள், அக்குளத்தில் தண்ணீர் குறைந்திருக்கக் கண்டு, செம்படவர்கள் அங்கே வந்து, "இக்குளத்தில் தண்ணீர் கொஞ்சமாயிருக்கிறது; ஆதலால், இதிலிருக்கிற மீன்களை யெல்லாம் நாளை வந்து பிடிப்போம்," என்று பேசிக்கொண்டார்கள். அதைக் கேட்டவுடனே, வருமுன் காப்போன், தன்னுடைய மற்ற சிநேகித மீன்களிடத்திற் சென்று, "நமக்கு அபாயம் வரும்போ லிருகிறது; ஆதலால், நாம் இப்பொழுதே இவ்விடத்தை விட்டுச் சீக்கிரம்

வேறிடத்திற்குப் புறப்பட்டுப் போய்விட வேண்டும்; இனி இவ்விடத்தில் கண நேரமுந் தாமதிக்கலாகாது," என்று கூற, வருங்காற் காப்போன், "நமக்கு அபாயம் வருங் காலத்திற் பார்த்துக்கொள்ளலாம்; காரியம் வருங்காலத் தில் அதற்குத் தகுந்த புத்தியுமுண்டாகும்," என்று சொல்லிவிட்டது. வந்தபின் காப்போன், "எதுவந்தாலும், ஒருவன் தன்னிடத்தை விட்டு விடுவது அறிவீனம்; வரத் தக்கது வந்தே தீரும்: வராதது நாம் பிரயாசைப்பட்டு அழைத்தாலும், வராது; எல்லாம் தலை விதிபோல நடக்கும்; ஆதலால், நான் இருக்குமிடத்தைவிட்டு வரமாட்டேன்," என்று சொல்லி விட்டது.

அதன்மேல் வருமுன் காப்போன், மற்றிரண்டை யும் கவனியாமல், உடனே வேறுகுளத்திற் போய்விட்டது. மறு நாள் விடியற் காலத்திலே செம்படவர்கள் வந்து, அந்தக் குளத்தில் வலையை வீசி, மீன்களைப் பிடித்தார்கள். அப்போது வருங்காற் காப்போன், அவ்வலையி லகப்பட்டு, தான் சமயத்திற்குத் தகுந்த தந்திரம் செய்யக் கூடிய தாகையால், தன்னுடைய இயற்கைப்படியே செத்த மீன் போலப் பாசாங்கு பண்ணிக்கொண்டு கிடந்தது. அதைப் பார்த்துச் செம்படவர்கள், "இது செத்த மீன்; ஆதலால், எங்கும் துள்ளி ஓடிப் போகாது," என்று அதன் மீது சந்தேகங் கொள்ளாமல், அதை யெடுத்துக் கரையின்மீது போட்டு வைத்தார்கள். அப்படி அவர்கள் போட்டுவிட்டு மறுபடியும் வலையை வீசி மீன் பிடித்துக்கொண்டு திரியுஞ் சமயத்தில்; வருங்காற் காப்போன், 'இதுதான் தருணம்' என்று சந்தடி செய்யாமல் துள்ளித் துள்ளிப் பக்கத்தி லிருந்த வேறொரு பள்ளத்தின் நீரிற் புகுந்து ஒளிந்து கொண்டது. வந்தபின் காப்போன் ஒரு விதமான தந்திர

முங் கற்றுக்கொள்ளாததும், மூடஞானம் பேசக்கூடியது மாதலால்,அப்போது தான்பிழைப்பதற்குவகையொன்று முணராமல்,வலைக்குள்ளேயேகிடந்து,அங்குமிங்கும்பாய்ந் தோடத் தொடங்கிற்று. அதைக் கண்டு செம்படவர்கள், "இது மிகவுந் துடுக்குள்ளதாயிருக்கிறது. கொஞ்சம் கவனி யாமலிருந்தால், இது வலையைக் கிழித்துக்கொண்டு ஓடிப் போய்விடும். ஆதலால், இதைச் சீக்கிரம் அடித்துக்கொல்ல வேண்டும்," என்று சொல்லிக்கொண்டே, அதனைத் தடி யால் அடித்துக் கொன்றுவிட்டார்கள். மற்ற இரண்டு மீன்களும் உயிருடன் சௌக்கியமாய் வாழ்ந்தன.

14. மூடருக்குப் புத்தி கூறினால், அபாயம் வரும்.

புத்தியற்ற மூடருக்குப் பத்திசொல்வார் கோக்குமுன்பு
நத்திக் குரங்குகட்கு நற்புத்தி—கற்பித்துக்
கல்லிலறை யுண்டக் கணத்தொழிந்த பான்மைபோல்
அல்லலுற்றுச் சாவர்பிண மாய்.

(இ - ள்.) சிறிதும் புத்தியில்லாத மடையருக்குப் புத்தி கூற நெருங்கியவர்கள், முன்னே ஒரு கொக்கானது விருப்ப முற்றுக் குரங்குகளுக்கு நல்லபுத்தி கற்பிக்கத் தொடங்கி நெருங்கி அக் குரங்குகளில் ஒன்றின் கையாலே கல்லிலறையப்பட்டு அச்சம யத்திலேயே உயிர் விட்டொழிந்த தன்மை போல, மிக்க துன் பத்தை யடைந்து, உயிர் நீங்கிப் பிணமாகி இறப்பார்கள்.

குரங்கினத்திற்குப் புத்தி கூறிக் கொக்கிறந்த கதை.

மரங்களடர்ந்த ஒரு சோலையிலே பல குரங்குகள் கூடி வாசஞ் செய்துகொண்டிருந்தது. அப்படியிருக்கும் போது குளிர் காலத்தில் ஒரு தினம் குளிர் அதிகரித்து இருந்தபடியால், அந்தக் குரங்குகள் மிகவும் வாட்டத்தை யடைந்து, அக்குளிரின் நடுக்கத்தைத் தீர்த்துக்கொள்

ளும்படி நெருப்பைத் தேடி, அங்கே சஞ்சரித்த மின் மினிப் பூச்சிக் கூட்டத்தை நெருப்பென்று நினைத்துக் குளிர் காய்வதற்கு அக்கூட்டத்தினருகிற் சென்றன. அப்போது அங்கே ஒரு மரத்தில் உட்கார்ந்திருந்த சுமுகன் என்னும் ஒரு கொக்கு, குரங்குகளின் மூடத்தன்மையைப் பார்த்து, அதை நீக்கக் கருதி, தான் வாயை மூடிக் கொண்டு சும்மாவிராமல், விரைவாக அந்தக்குரங்குகளின் அருகே சென்று, "இது மின்மினிப் பூச்சிக்கூட்டம்; நெருப்பன்று. நீங்கள் அறிவீனத்தால் இதனை நெருப்பென்று மயங்கிவிட்டீர்கள்," என்று கூறித் தன்னுடைய புத்திசாலித்தனத்தைக் காட்டிற்று. கொக்கு இவ்வாறு கூறியவுடனே அந்தக் குரங்குக் கூட்டங்களில் ஒன்று கடுங்கோபங் கொண்டு, "ஏழைக் கொக்கே, நீ எவ்வளவு திராணியுள்ள பிராணி? எமக்குப் புத்தி கூறும்படியான அவ்வளவு வன்மை உன்னிடத்தி லிருக்கின்றதா? உன்னுடைய நிலைமையை இன்னதென்று உணராமல், எம்மிடம் நெருங்கிப் பேசினை யல்லவா? இதற்குத் தகுந்த புத்தி இதோ நானும் கூறுகிறேன்; பார்," என்று சொல்லித்தன் பல்லைக் கடித்துக்கொண்டு திடீரென்று அதன் மேற் பாய்ந்து, அந்தக் கொக்கைப் பிடித்து, அங்கிருந்த ஒரு கல்லில் அறைந்து கொன்று விட்டது.

---

15. நேயத்தில் வஞ்சனை செய்வோர் அழிவர்.

நேயத்தில் வஞ்சனை செய்வார்கள்
        நீள்துஷ்ட புத்தியேன்பான்
மாயத்தி னல்மரப் பொந்தினில்
        தந்தையை வைத்தவன்றன்

காயத்தைப் போக்கிநற் போன்னும்
இழந்து கலங்கிச்சோல்ல
வாயற் றிறந்த வகைபோற்
பயனற்று மாளுவரே.

(இ - ள்.) உறவானவிடத்தில் சூதான காரியங்களைச் செய்பவர்கள், பேராசையில் அதிகரித்த துஷ்ட புத்தி யென்பவன், வஞ்சகத்தினாலே தன் சிநேகிதனாகிய சுபுத்தி யென்பவனுக்குச் சிநேகத் துரோகஞ் செய்யக் கருதி, ஒரு மரப் பொந்திலே சாக்ஷி கூறும்படி தன் தந்தையை மறைத்து வைத்துப் பின்னர் அவனை இறக்கும்படி செய்து, அவனுடைய தேகத்தை உலகத்தி லில்லாமற் போக்கி, தான் உத்தேசித்த நல்ல பொன்னையு மிழந்து, மனங் கலங்கி, வேறு பேச்சுப் பேசுவதற்கு வாயிழந்து இறந்தொழிந்தபடி ஒரு பயனு மில்லாமல் மாண்டழிவார்கள்.

சிநேகத் துரோகஞ் செய்தழிந்த துஷ்ட புத்தி கதை.

ஒரு நகரில் துஷ்ட புத்தி, சுபத்தி என்னும் பெயர்களையுடைய இரண்டு வைசிய வாலிபர்க ளிருந்தார்கள். அவர்கள், இளமையிலேயே பணஞ் சம்பாதிக்க வேண்டுமென்னும் கருத்துடன் புறப்பட்டு, நெடுந்தூரத்திற் கப்பாலுள்ள ஒரு தேசத்திற்குக் குடும்பத்துடனே சென்றார்கள். அவ்வாறு அங்கே சென்று தொழில் நடத்திக் கொண்டிருக்குங் காலத்தில், அவ்விருவரும் ஒரு தினம் வெளியிற் சென்றிருக்கும்போது, பூமியிலே ஓரிடத்தில் சுபுத்திக்குப் பணப் புதையல் அகப்பட்டது. அஃது அவன் தனியாயிருக்கும்போ தகப்பட்டும், அவன் தான் மாத்திரம் அதனை யெடுத்துக்கொள்ள நினையாமல் தன்னுடைய தரும குணத்திற்குத் தக்கபடி சிநேகிதனுக்கும் அதனைப் பங்கிட்டுக் கொடுக்கவேண்டுமென் றெண்ணித்

தனக்குப் புதைய லகப்பட்டதைத் துஷ்ட புத்திக்கும் தெரிவித்தான். அவ்வாறு தெரிவித்தவுடனே அவன், 'இதனைத் தந்திரமாக அபகரித்துக்கொள்ள வேண்டும்' என்று முதலிலேயே நினைத்துக்கொண்டு, வஞ்சனையான எண்ணத்துடன் சுபுத்தியை நோக்கி, "நேயனே, புதைய லெடுத்த திரவியத்தை நாம் திடுமென ஊருக்குக் கொண்டு போய் வெளிப்படுத்த லாகாது; அவ்வாறு வெளிப்படுத்தினால், அரசாட்சி புரிவோருக்குப் பாதி கொடுக்கவேண்டும்; இன்னும், புதையலிருந்த நிலத்துக்காரனுக்கும் வேறே பாகங் கொடுக்கவேண்டும்; இன்னுமொரு சங்கடமும் இருக்கின்றது; அதாவது, இந்தப் புதையலைப் புதைத்தவர்களுடைய சொந்தக்காரர்கள் இருக்கிறார்களா வென்பதை விசாரித்துத் தெரிந்துகொள்ளும் வரை இதை அரசாட்சியார் பிடுங்கி வைத்துக்கொள்வார்கள்; இதற்குரியவர்கள் இருக்கிறார்கள் என்று தெரிந்தால், இதிற் பெரும்பான்மையான திரவியத்தை அவர்களுக்கே கொடுத்துவிட்டு, நமக்குச் சிறு பான்மைதான் கொடுப்பார்கள்; இதற்கு உரியவர்கள் இல்லையென்று தெரிந்தால் மாத்திரந்தான் இது நம் கைக்கு வரும்; அப்படி வருவதிலும், முதலில் கூறிய பாகங்களெல்லாம் போய்விடும்; இந்தச் சங்கடங்கள் எல்லா மிருப்பதனால், இதிற் கொஞ்சம் திரவியத்தை மாத்திரம் எடுத்துக்கொண்டு, மற்றதை இங்கேயே ஒரு மரத்தடியில் பள்ளந்தோண்டிப் புதைத்து வைத்துவிட்டுப் போய்ப்பின்னர் நாளாவிருத்தியில் வந்து, சிறிது சிறிதாக எடுத்துப் பங்கிட்டுக்கொள்வோம்; அவ்வாறுசெய்யின், ஒருவருக்கும் இவ்விஷயம் தெரியாது; வியாபாரத்தில் நமக்கு நாடோறும் பொருள் அதிகரித்துவிட்டதாக ஜனங்கள் நினைத்துக்கொள்வார்கள்; இப்

பொழுதே எல்லாத் திரவியத்தையுங்கொண்டு சென்று, நம்மிடம் அளவிறந்த திரவிய மிருப்பதாகக் காட்டினால், நாம் புதைய லெடுத்தது எல்லோருக்கும் வெளிப்பட்டுப் போகும்; அவ்வாறு வெளிப்படின், நாம் புதைய லெடுத்தும் பயனில்லாமற் போகும்,'' என்று பலவாறு உபதேசஞ்செய்தான். சுபுத்தி, வஞ்சனையற்றவ னாதலால் துஷ்ட புத்தியின் சூதை உணராமல், அதற் கிசைந்தான். அதன் மேல் இருவருஞ் சேர்ந்து, புதையலில் கொஞ்சம் திரவியத்தை யெடுத்துக்கொண்டு, மற்றதை அங்கிருந்த மரத்தடியில் புதைத்துவிட்டுச் சென்றனர்.

இவ்வாறு சென்ற அவர்கள், அந்நகரத்திலேயே தங்கித் தங்கள் தங்கள் தொழிலை நடத்திக்கொண்டு, முன்போலவே சிநேகமா யிருந்தார்கள். அப்படி இருக்கும்போது, துஷ்ட புத்தி யென்பவன், ஒரு நாள் தான் உத்தேசித்தபடியே இரகசியமாகச் சென்று தானும் சுபுத்தியும் புதைத்து வைத்த திரவியத்தை யெடுத்துக் கொண்டு வந்து தன் வீட்டில் வைத்துவிட்டு, சில தினங்கள் சென்ற பின்பு, சுபுத்தியை ஏமாற்றக் கருதி, அவனிடம் சென்று, "நண்பனே, நாம் அன்று புதைத்து வைத்த திரவியத்தை இப்போதுபோய் எடுத்துக்கொண்டு வரலாம்; வா,'' என்றழைக்க, அவன் அவ்வாறே புறப்பட்டான். பின்பு இருவரும் போய்த் திரவியம் புதைக்கப் பட்டவிடத்தைத் தோண்டிப் பார்த்தார்கள். அங்கே ஒன்றுமில்லை. அவ்வாறு திரவியமில்லாமற் போகவே, திரவியத்தை மோசஞ்செய்த துஷ்டபுத்தி, மகா சத்திய வந்தன் போல முதலில் அவசரப்பட்டு, மிகுந்த மன வருத்தத்தோடு சுபுத்தியை நோக்கி, "சிநேகத் துரோகியே! இங்குத் திரவியம் புதைக்கப்பட்டிருந்தது நம்மிருவருக்கு

மே தெரியும்; அப்படியிருக்க, இதனை வேறொருவரும் தெரிந்து எடுத்திருக்கமாட்டார். எனக்குப் பங்குகொடுக்கக்கூடாதென்ற எண்ணத்துடன் நீ இரகசியமாக வந்து அந்தத் திரவியத்தை எடுத்துக்கொண்டு போய்விட்டு, ஒன்று மறியாதவன்போல இருந்து என்னை ஏமாற்றியிருக்கிறாய்; நீயும் கபடமாக என்னோடுசேர்ந்து வருத்தப்படுகிறாய்; இந்தப் பாசாங்கெல்லாம் எனக்குத் தெரியும். உன்னை ஒரு போதும் நான் நம்பமாட்டேன்; எனக்குப் பாதித் திரவியத்தைக் கொடுத்தால் மாத்திரந்தான் உன்னை விடுவேன்," என்று பல விதமாகப் பேசி, அவனோடு கலகம் விளைத்தான். சுபுத்தி, தான் எடுக்கவில்லையென்று எவ்வளவோ உண்மையான வார்த்தைகளைச் சொல்லிப் பார்த்தான். துஷ்ட புத்தி கபடமில்லாதவனாயிருந்தாலன்றோ நம்புவான்? அவன் தானே மோசஞ்செய்து கலகமுண்டாக்குபவனாதலால், சுபுத்தியின் வார்த்தைகளைக் கேட்கவேயில்லை. சிறிது நேரத்திற்குள் இருவருக்கும் கலகம் பலப்பட்டு விட்டது. முடிவில் அவ்விருவரும் அவ்வூர் அரசனிடம் சென்று, தம் வழக்கைத் தெரிவித்து, அதைத் தீர்த்துவிடும்படி விண்ணப்பஞ்செய்து கொண்டனர்.

அப்போது அரசன், நியாயாதிபதியை அழைத்து, அவ்வழக்கைப் பஞ்சாயத்தில் விசாரித்துத் தீர்த்து விடும்படி கட்டளை யிட்டான். அவன், "ஐந்து தினங்களுக்குள் இதைத் தீர்த்துவிடுகிறேன்," என்று அரசனிடம் தெரிவித்துவிட்டு, உடனே பஞ்சாயத்தார்களைக்கூட்டி வைத்து, தானும் அவர்களுடனிருந்து வழக்கை விசாரிக்க ஆரம்பித்தான். அவ்வாறு விசாரணை செய்யத் தொடங்கவே, துஷ்ட புத்தி, தன்னுடைய கக்ஷியை ஸ்திரப்படுத்தும்

பொருட்டு ஒரு சாக்ஷியை ஏற்படுத்தத் தகுந்த ஓர் உபாயத்தை ஆலோசித்து, முடிவுசெய்துகொண்டு, அப்படியே செய்யக்கருதி, உடனே பஞ்சாயத்தாரை நோக்கி, "நீதிமான்களே, என் வார்த்தையைப் பொய்யென்று நினைக்கவேண்டா; இந்தச் சுபுத்தியே திரவியத்தையெடுத்துக்கொண்டான் என்பதற்குத் தக்க சாக்ஷியும் இருக்கின்றது; அந்தச் சாக்ஷியை விசாரித்துக்கொண்டாவது எனக் கனுகூலமாக நீங்கள் தீர்ப்புச் செய்யவேண்டும்," என்று சொன்னான். பஞ்சாயத்தார்கள், "அப்படியிருந்தால், நீ உன்னுடைய சாக்ஷியைக் கொண்டுவா," என்று தெரிவிக்க, உடனே, அவன், "நான் நாளைக்குச் சாக்ஷியை உங்களுக்குக் காட்டுவேன்," என்று சொல்லிவிட்டுத் தன் வீட்டிற்குப் போய்த் தகப்பனை அழைத்து, "தந்தையீர், நீர் நான் சொல்லுகிறபடி ஒரு காரியம் செய்வீரானால், இலகுவில் எனக்கு அளவற்ற திரவியம் கிடைக்கும்," என்று சொல்ல, அந்தக் கிழவன், "அஃதென்ன? சொல். நான் செய்யக் கூடியதாயிருந்தால், செய்கின்றேன்," என்று உரைத்தான். அப்போது துஷ்டபுத்தி, தானும் சுபுத்தியும் திரவியத்தைப் புதைத்த விடத்திலுள்ள மரத்தை அந்தக் கிழவனுக்குத் தெரிவித்து, "அப்பா, சுபுத்தி கண்டெடுத்த புதையலை அம்மரத்தினடியில் நானும் அவனும் புதைத்து வைத்துப் பின்பு அவனுக்குத் தெரியாமல் நானே அதனை இரகசியமாக எடுத்துக்கொண்டு வந்துவிட்டு, இப்போது அவனிடமிருந்து மேலும் பணம் பறிப்பதற்கு, அவனே அதனை எடுத்துக்கொண்டானென்று அவன்மீது வழக்குத் தொடுத்திருக்கின்றேன்; பஞ்சாயத்தில் விசாரணை நடக்கின்றது; நான், சுபுத்தி திரவியத்தை எடுத்ததற்குச்

சாக்ஷி இருக்கின்றதென்றும், நாளைக்குச் சாக்ஷியைக் காட்டுவதாகவும் பஞ்சாயத்தாரிடம் சொல்லி வந்திருக்கின்றேன். ஆதலால், நீர் இராத்திரிக்கு ஒருவருமறியாமல் அந்த மரப்பொந்திற்போய் ஒளித்திருக்கவேண்டும்; நான் நாளைக்காலையில் அங்கே பஞ்சாயத்தாரை அழைத்துக்கொண்டுவந்து, 'இந்த மரத்தைக்கேளுங்கள்; உண்மை கூறும்,' என்று சொல்வேன்; அப்போது பஞ்சாயத்தார் மரத்தை நோக்கி, "பணத்தை எவரெடுத்தவர்?" என்று கேட்பார்கள். அத்தருணத்தில் நீர் பொந்துக்குள்ளிருந்து, சுபுத்திதான் பணத்தைக் கொண்டுபோனான்," என்று சொல்லவேண்டும்; நீர் அவ்வாறு சொன்னால், பஞ்சாயத்தார்கள் அம்மரமே தெய்விகமாக உண்மையான சாக்ஷி கூறியதென்று நினைத்து, உடனே சுபுத்தியை எனக்குத் திரவியங் கொடுக்கும்படி தீர்ப்புச் செய்து விடுவார்கள்; உமக்கொரு வார்த்தைதான் செலவு; எனக்கோ, அதனால் அளவு அற்ற திரவியம் கிடைக்கக் கூடியதாயிருக்கிறது," என்று கூறினான்.

கிழவன் இந்த மோசமான வார்த்தைகளைக் கேட்டவுடனே திடுக்கிட்டு, "அப்பா, மோசம் வந்தாலும் வரும். இது மிகவும் தீங்கான காரியம். தீங்கு நேரிடுங் காரியத்தைச் செய்து சௌக்கியத்தை அடைய வேண்டும் என்று நினைப்பவர்கள், ஒரு மூடக் கொக்கு, பாம்பால் இறக்கும் தன் குஞ்சுகளைக் காப்பாற்றும் பொருட்டுக் கீரியைத் தன் னிருப்பிடத்திற்கு வரச்செய்து தன் பகையாகிய பாம்பை ஒழித்துத் தன்னுடைய குஞ்சுகளையும் இழந்ததுபோலத் தீங்கடைவார்கள்; ஆதலால், இக்காரியம் செய்தலே கூடாது," என்று பல நீதிகளை எடுத்துக் கூறி, அவ் விஷயத்தைத் தடுத்தான். அவ்வாறு தடுத்தும், துஷ்ட

புத்தி கேளாமல், அன்றிரவே அக்கிழவனை இழுத்துக் கொண்டுபோய்க் கட்டாயப்படுத்தி அம்மரப் பொந்தில் உட்கார வைத்துவிட்டு, விடிந்த பின் பஞ்சாயத்தாரிடஞ் சென்று, "நீங்கள் அந்த மரத்தினருகே வந்தால், அங்குச் சாக்ஷி இருக்கிறது; விசாரித்துக் கொள்ளலாம்," என்று சொல்லி, அவர்களையும், நியாயாதிபதியையும், சுபுத்தி முதலியவர்களையும் அழைத்துக்கொண்டு வந்து, அந்த மரத்தினெதிரில் நிறுத்தி, "இந்த மரமோ, மகா தெய்விகம் பொருந்தியது. இதை விசாரித்தால், நடந்த உண்மையைக் கூறிவிடும்," என்றுரைத்தான். அப்போது அவர்கள் அதிசயித்து, அந்த மரத்தை நோக்கி, "இங்கிருந்த பணத்தைக் கொண்டுபோனவர் யாவர்?" என்று வினவினார்கள். அங்ஙனம் வினவவே, பொந்திற்குள் இருந்த கிழவன், தனக்கு அக்காரியத்தைச் செய்யச் சம்மதியில்லாதிருந்தும், துஷ்ட புத்தி செய்த தொந்தரவிற்காக, அரை மனமாய், நெஞ்சு நடுக்கத்தோடு வார்த்தைகள் தடுமாற, "இங்கிருந்த பணத்தையெல்லாம் சுபுத்திதான் தோண்டி யெடுத்துக்கொண்டு போனான்," என்று கூறிவிட்டு, 'இனி என்ன தீங்கு விளையுமோ!' என்று கலக்கத்தோடு மூச்சை அடக்கிக்கொண்டிருந்தான்.

மரப் பொந்திலிருந்து இவ்வாறு சத்தம் புறப்பட்டவுடனே அங்கு நின்றவர்களெல்லோரும், 'இஃதென்ன! தெய்விகமா யிருக்கின்றதே!' என்று ஆச்சரியப்பட்டார்கள். சுபுத்தியோ, தான் பணத்தை யெடுக்காத உண்மையுடையவனாதலால். அதில் நம்பிக்கை வைக்கவில்லை; பெருத்த சந்தேகத்தை அடைந்துவிட்டான்; அங்ஙனம் சந்தேக முண்டாகவே, அவன், "இஃது என்ன? பெரிய மோசமாயிருக்கின்றது! இங்கே மனிதனில்லாமல், பேச்

சின் தொனி எவ்வாறுண்டாகும்? தெய்விகத்தால் இஃது உண்டாயிருக்கும் பக்ஷத்தில் அது மெய்யையன்றோ கூற வேண்டும்? அப்படி அல்லாமல், பொய்யான வார்த்தை புறப்படுவதால், இங்கு ஏதேனும் சூதிருக்க வேண்டும்; இதைச் சோதிக்காமல் விடலாகாது,'' என்று யோசித்து, உடனே அந்த மரத்தின்மேலேறிப் பார்த்தான்; அதில் மேற்பாகத்தில் வழியுடைய ஒரு பொந்து காணப்பட்டது. அதனைக் கண்டவுடன் சுபுத்தி, "சரி! சரி!! இந்தப் பொந்திற்குள்ளேதான் ஏதோ மாறுபாடு இருக்கின்றது; எது வாயிருந்தாலும், இன்னும் சிறிது நேரத்திற்குள் உண்மை வெளிப்பட்டுப் போகும்; இதற்குத் தகுந்த காரியத்தை இப்பொழுது செய்வோம்,'' என்று உடனே அந்தப் பொந்தில் சருகுகளையும், காய்ந்த குச்சிகளையும் சேகரித்துப் போட்டு, அதிலே நெருப்பு மூட்டி விட்டான். நெருப்பு மூண்டு எரியவே, உள்ளே இருந்த கிழவனுக்குச் சூடு தாக்க, வேதனை கிளம்பிவிட்டது. ஐயோ! அவன் என்ன செய்வான் பாவம்! தன்னுடைய மோசம் வெளிப்பட்டு விடுமென்று பயந்து, சிறிது நேரம் வரையில் பல்லைக் கடித்துக்கொண்டு பேசாமல் இருந்தான். இதற்குள் அவனுடம்பிற் பாதி வெந்துபோய் விட்டது. அதற்கு மேல்;அவனால் சகிக்க முடியவில்லை; அதனால், அவன், "இனி எப்படியானாலும் சரி; உயிர் போகுந் தருணமாயிருக்கின்றது; உயிர் போனாலும் போகிறதென்று இருந்து விடலா மென்றால், நெருப்பு வேதனை என்னால் பொறுக்க முடியவில்லையே! அடே அப்பா! இனிச் சகிக்க முடியாது! முடியாது!!'' என்று கதறிக்கொண்டு பொந்திலிருந்து புலி பாய்வது போலத் திடீரென்று வெளியே பாய்ந்தான். அச்சமயத்தில் அங்கிருந்தவர்களெல்லோரும், வியப்பும்

வெறுப்பும் சிரிப்பு முடையவர்களாய்க் கிழவனிடம் நெருங்கி, "இஃது என்ன, பெரிய மாயா விநோதமா யிருக்கின்றது! நீ ஏன் இப்பொந்தில் வந்து புகுந்து இவ் வார்த்தையைக் கூறினாய்?" என்று வினவ, அவன், "நான் துஷ்ட புத்தியின் தகப்பன்; அவனுடைய மோசஎண் ணத்தால் அவன் என்னைத் தொந்தரவு பண்ணி இழுத்துக் கொண்டு வந்து இப்பொந்தில் வைத்துப் பொய் கூறும் படி செய்து, எனக்கு இந்த அபாயத்தை விளைவித்தான்," என்று சொல்லிவிட்டு, உடனே இறந்து போனான். அதன் மேல் நியாயாதிபதியும், பஞ்சாயத்தார்களும் துஷ்ட புத் தியின்மோசச்செய்கையைச்சந்தேகமில்லாமல்உணர்ந்து, நடந்த விஷயத்தை அரசனுக்குத் தெரிவித்தார்கள். பின் னர் அரசன் துஷ்ட புத்தியைப் பயமுறுத்தி விசாரித்து, அவனுடைய வாயினாலே அவன் செய்தமோசச் செய்கை களை யெல்லாம் சொல்லத் தெரிந்துகொண்டு, அவனிட மிருந்த புதையல் திரவியத்தை வாங்கிச் சுபுத்திக்குக் கிர மப்படி கொடுத்துவிட்டு, அப்பொழுதே அந்தத் துஷ்ட புத்தியைக் கழுவிலேற்றுவித்துக் கொன்றான். துஷ்ட புத்தி தன்னுடைய சிநேகத் துரோகமான செய்கையினால் தன் தந்தையையுங் கொன்று, திரவியத்தையு மிழந்து, தானும் அந்தோ! வதையுண்டு உயிர் விட்டான்.

16. சுகம் வருமென்றெண்ணிப் பொல்லாங்கான காரியம் செய்ய லாகாது.

முன்வரு மற்பப் பயன்றனைக் கருதி
மூடமாம் யோசனை கொண்டு
பின்வரும் பெரிய தீங்கையோ ராமல்
பிரியமா வோர்வினை புரிவோர்,

தன்னருங் குஞ்சு கட்குறும் இடரைத்
தவிர்த்திட வுன்னிய கோக்கோன்
றின்னலுற் றுழன்ற பான்மைபோல் துயரம்
எய்தியே கலங்குவர் அம்மா.

(இ-ள்) முன்னே வரும் சிறிது பயனாகிய சுகத்தை யடைய விரும்பி, மதியீனமாகிய ஆலோசனையை மனத்திற் கொண்டு, தாம் செய்யுங் காரியத்தால் பின்னே வந்தடையும் பெரிய கெடுதியை அறியாமல், விருப்பத்தோடு தீங்கு வரும் ஒரு காரியத்தைச் செய்பவர்கள், தன்னுடைய அருமையான குஞ்சுகளுக்கு வந்து சேர்ந்த துன்பத்தை நீக்கிட நினைத்துச் செய்யத் தகாத காரியத்தைச் செய்த ஒரு கொக்கானது துன்பத்தை யடைந்து வருந்திய தன்மைபோல, துன்பத்தை யடைந்து கலங்குவார்கள்.

தகாத காரியஞ் செய்து துன்பமுற்ற கோக்கின் கதை.

ஆணும், பெண்ணுமாகிய இரண்டு கொக்குகள் கூடி, ஓர் ஏரி கரையினோரத்தில் கூடு கட்டி, நெடுங்காலமாக வாழ்ந்து வந்தன. அப்படி வாழ்ந்து வருங் காலத்தில், அங்கே பெண் கொக்குப் பொரிக்கிற குஞ்சுகளை யெல்லாம், பக்கத்தில் வளையிலே குடி கொண்டிருந்த ஒரு பாம்பு வந்து தின்று நாசப்படுத்திக்கொண்டே இருந்தது. இப்படி இருக்கும்போது, ஒரு சமயத்தில், பெண் கொக்குச் சில குஞ்சுகளைப் பொரித்துவிட்டு, "இக்குஞ்சுகளையும் அந்தப் பாம்பு வந்து தின்றுவிடுமே! இவற்றையேனும் காப்பாற்ற வேண்டுமே! இதற்கென்ன செய்யலாம்?" என்று ஏரி கரையிலிருந்த ஆண் கொக்கிடம் சொல்ல, அதுவும் இதைப்பற்றி என்ன செய்யலாம்என்று பல விதமாக ஆலோசித்துக் கொண்டிருந்தது.

லில் வந்து காத்திருந்தும், நீ ஏன் என்னோடு பேசாதிருக்கின்றாய்?'' என்று வினவிற்று. உடனே எலி, தன் சிநேகிதனாகிய சித்திரக் கிரீவனுடைய சப்தத்தைத் தெரிந்துகொண்டு, அளவில்லாத சந்தோஷத்துடனே, "நான் மிக்க புண்ணியசாலி யாகையினால், என் மித்திரனாகிய சித்திக்கிரீவன் இன்றைக்கு என் வீட்டிற்கு வந்திருக்கின்றான்; மனமொருமித்த மித்திரர்களோடு வார்த்தை யாடுவதைக்காட்டிலும் இந்த உலகத்தில் மிகுந்த ஆனந்தம் வேறென்ன விருக்கின்றது? மித்திரா, சித்திரக்கிரீவா, எப்பொழுது வந்தாய்? யாரோ என்று பயந்து கொண்டு உள்ளே இருந்தேன்; நீ யென்று தெரிந்திருந்தால், பேசாமல் இருப்பேனோ?'' என்று சொல்லிக்கொண்டே வளையைவிட்டு வெளியே ஓடி வந்தது. அது சித்திரக் கிரீவனிடம் வந்து, அது தன்னினத்துடனே வலையி லகப்பட்டிருப்பதைப் பார்த்து, மனம் பதைபதைத்து, "மித்திரா, நீ எல்லோரினும் மிகுந்த சமர்த்தனல்லவா? அப்படி இருக்க, உனக்கு ஏனிந்தச் சங்கடம் நேர்ந்தது?'' என்று வினவ, சித்திரக் கிரீவன், "நண்பனே, எவரேவருக்கு எந்த எந்தக் காலத்தில் எது எது நடக்க வேண்டுமோ, அந்த அந்தக் காரியங்கள் நடந்தேதீரும்; விதி மிகவும் வல்லமை யுடையது, அதைக் கடக்க வல்லவர் யாவர்? கடல் பெருகிப் புரண்டால், அதைத் தடுக்கக் கரையேது? அது போல, விதியைத் தடுத்தற்கு உபாய மேது?'' என்று வினவிற்று. இரணியகன், "நீ சொல்வது மெய்தான்; நீயோ, நூறு நாழிகை வழித் தூரத்திற்கப்பாலிருந்தும் வஸ்துக்களின் தன்மைகளைத் தெரிந்துகொண்டு போகிற மகா சமர்த்தன்; அவ்வாறு இருந்தும், இன்றைக்கு வேடன் வலையிற் சிக்கிக்கொண்டனை; எவ்வளவு புத்திசாலிகளா

யிருந்தாலும், அவர்களுக்கு வருவது வந்தே தீரும்; சந்திர சூரியர்க்கு இராகு கேதுக்களால் பீடையேற்படுவதும், யானையும் பாம்பும் பறவையுங் கட்டுப்படுதலும், விவேகிகளுக்கும் வறுமை வந்தெய்தலும் தெய்வச் செயலால் நடப்பவைகளே யல்லாமல் வேறொன்றினாலுமல்ல,'' என்று வியப்புடனும் விசனத்துடனும் சொல்லிச் சித்திரக்கிரீவனுடைய வலைப் பிணிப்பை அறுக்கத் தொடங்கிற்று.

அப்போது சித்திரக் கிரீவன், "நண்பா, முன்னே என் பரிவாரமாகிய புறாக்களின் கட்டை அறு,'' என்று தன்னுடைய பரோபகார சிந்தைக்குத் தக்கபடி கூற, எலி, "என் பல்லோ, மிகவும் இலேசானது; இத்தனை பேருடைய கட்டுகளை யெல்லா மறுத்தற்குத் தக்கவன்மை அதனிடத்துண்டோ, இல்லையோ; எனக்குத் தெரியாது; முதலில் இவர்களுடைய கட்டுகளை யறுத்துக்கொண்டு வந்து, சிலரிருக்கும்போது எதிரிகள் வந்துவிட்டாலும், அல்லது நான் அறுக்க முடியாமல் இளைத்துப் போய் விட்டாலும், உனக்கும் எஞ்சியிருக்கும் மற்றவர்களுக்கும் அபாயம் வரும்; ஆதலால், உன்னை முதலில் விடுவித்து விட்டுப் பின்னர் மற்றவர்களுடைய பாசங்களையும் என் சாமர்த்தியத்துக்குத் தக்கபடி அறுப்பேன்,'' என்றது. அவ்வாறு சொல்லியும் சித்திரக்கிரீவன் கேளாமல், "நீ சொல்லுவது சரிதான்; எப்படியிருந்தாலும், முன்னே இவர்கள் தளைகளை யறு,'' என்று சொல்ல, இரணியகன் "அன்பனே, எவனும் முதலில் தன்னைக் காப்பாற்றிக் கொண்டு, பின்பு தன்னைச் சார்ந்தவர்களைக் காப்பாற்ற வேண்டும்; அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கையும் அடைதற்குப் பிராணன் முக்கிய சாதனமா யிருக்கின்றது; அதைக் காப்பாற்றினால் எல்லாவற்றையுங் காப்

பாற்றினாற்போல ஆகும்,'' என்று சொன்னது. அதன் மேலும் சித்திரக் கிரீவன், "நீ சொல்லும் நீதிகள் எல்லாம் சரிதான்; ஆனாலும், இப்படிப்பட்ட சமயங்களில் இவர்களை ஆபத்தினின்றும் நீக்கிக் காப்பாற்றும் பொருட்டுத்தானே என்னை இவர்கள் அரசனாக ஏற்படுத்தி யிருக்கின்றார்கள்? ஆதலால், இவர்கள் பிராணனை முதலிற் காப்பாற்றிய பின்பே, என் பிராணனைக் காப்பாற்ற வேண்டும்; நீ இனி வேறொன்றும் சொல்லி மறுக்காமல், நான் சொல்கிறபடி செய்,'' என்றது. பின்பு எலி, சித்திரக் கிரீவனைப் பார்த்துச் சந்தோஷித்து, "நீ மிகவும் ஜீவகாருண்ய முடையவனா யிருக்கின்றாய்; சுற்றத்தைக் காப்பதில் மெத்தக் கவலையுடையவனாயு மிருக்கின்றாய்; எசமானனிடத்தில் விசுவாசமா யிருக்கிற சேவகனும், சேவகனிடத்தில் அன்பாயிருக்கிற எசமானனும் எப்பொழுதும் சௌக்கியத்தை யடைவார்கள்: நீ உன் பரிவாரங்களிடம் மிக்க அன்பு வைத்திருக்கின்றபடியால், உனக்குக் கடவுள் துணை செய்வார். நீ எக்காலத்தும் நன்மையே அடைவாய்,'' என்று உபசார வார்த்தைகள் கூறி, அதனைப் புகழ்ந்து, எல்லாப் புறாக்களின் கட்டுகளையும் சேதித்துப் பிறகு சித்திரக் கிரீவனுடைய பந்தத்தையும் அறுத்துவிட்டது. பின்பு அவ்விரண்டும் ஒன்றை யொன்று புகழ்ந்து, ஒன்றிற்கொன்று உபசார வார்த்தைகள் சொல்லிக் கொண்டன. அதன்மேல் சித்திரக்கிரீவன், இரணியகனிடத்தில் விடை பெற்றுக்கொண்டு, தன் பரிவாரங்களுடனே புறப்பட்டுத் தன்னிடத்திற்குப் போய்விட்டது.

இவ்வாறு சித்திரக் கிரீவன் போனவுடனே, பக்கத்திலிருந்து நடந்த காரியங்களை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த இலகுபதன னென்னுங் காகம், இரணிய

கனுக்கும் சித்திரக்கிரீவனுக்கு முள்ள சிநேகத்தைப்பற்றி ஆச்சரிய முற்று, "நாமும் இந்த எலியுடன் சிநேகமாயிருந்தால், ஆபத்தான சமயத்தில் நன்மையடையலாம்; உலகத்தில் உண்மையான சிநேகிதன் ஒருவனையேனும் பெருதவன் பிணத்திற்குச் சமானம்; இன்னும் அவன் நாயைப்போல் எவ்விடத்தும் தாழ்மையுற்றுத் திரிவன்," என்று ஆலோசித்து, அதனுடனே சிநேகங் கொள்ளக் கருதி, உடனே இறங்கி, இரணியகனுடைய வளையின் சமீபத்திற்போயுட்கார்ந்து, அதை நோக்கி, "நண்பனே, நீ மிகவும் உபகாரியா யிருக்கின்ருய். உன்னோடு சிநேகஞ் செய்பவருக்கு நலமே கிடைக்கும்; ஆதலால், நானும் உன் சிநேகத்தை விரும்புகின்றேன்," என்று சொல்ல, இரணிகன் இந்த வார்த்தைகளைக் கேட்டு, "நீ யார்?" என்றுவினவிற்று. காகம், "நான் இலகுபதனன் என்னும் காகம்; நீ என்னோடு உறவுகொள்ளும் பக்ஷத்தில் நான் எப்பொழுதும் உன் மனநோக்கத்தின்படியே நடந்துகொண்டிருப்பேன்," என்றது. உடனே இரணியகன், "ஐயோ நீயா? உன் குலம் மகா வஞ்சக முடையது; நானோ, உனக்கு இரையாகக் கூடியவன்; நீ என்னைக் கூசாமற் கொன்று தின்னத் தக்கவன்; உனக்கு மெனக்கும் சரிப்படாது; உன்னுடைய சிநேகத்தை நான் கொள்வேனுல், ஒரு நரியினுடைய சிநேகத்தினுலே, ஒரு மான் வலையில் அகப்பட்டு வருந்தியதுபோல, உன்ஞல் அபாயத்திற் குள்ளாவேன்; அந்த மானுக்கு நரியின் சிநேகம் எவ்வாறு பயன்படாமற் போயிற்ரே, அவ்வாறே உன்னுடைய சிநேகமும் எனக்குப் பயன்படாமற் போகும்," என்று கூறிற்று. அப்போது காகம் விசனமுற்று, "அன்பனே உன்னைத்தின்பதால் என் வயிறு நிறையுமா?

அப்படியே நின்றுலும், ஒரு வேளைக்குத்தானே திருப்தி யடைவேன்? நீ ஜீவித்திருந்தால், உன்னால் சித்திரக்கிரீவன் நன்மை யடைந்ததுபோல, எப்பொழுதும் பயனடைந்துகொண்டிருப்பேன்; ஆதலால், உனக்குத் துரோகஞ் செய்யமாட்டேன்; நீ என்னோடு நட்புக் கொள்ளத்தான் வேண்டும்," என்று கூற, இரணியகன், "நீ என்ன சொன்னாலும் என் மனம் திருப்தியடையாது; எப்படியிருந்தாலும், நீ எனக்கு ஜன்மவிரோதி; உன்னுடனே நான் சிறிதும் சிநேகங் கொள்ளமாட்டேன்; சத்துருவாய் இருப்போன் ஒரு சமயத்தில் எவ்வளவு அனுகூலம் பண்ணினுலும், அதை யுத்தேசித்து அவனுடன் சிநேகம் பண்ணலாகாது; தண்ணீர் வெந்நீரானாலும் நெருப்பை யவித்துவிடும்; ஜலத்தில் வண்டியும் பூமியிற் கப்பலும் செல்லுமா? ஒருபோதும் இல்லை; இதைப் போலப் பொருந்தாத விடத்தில் எவரும் சிநேகங் கொள்ள மாட்டார்கள்; ஆதலால், உன்னை நான் நம்பமாட்டேன்," என்று வெறுத்துக் கூறிற்று. எலி இவ்வாறு சிறிதும் இடங்கொடுக்காமற் கூறியும், காகம் அதனோடு எப்படியும் சிநேகங் கொள்ள வேண்டுமென்று உறுதி கொண்டிருந்தபடியால், எலியை நோக்கி, "அன்பனே, நீ என்னைச் சிநேகமாகச் சேர்த்துக்கொண்டால் மாத்திரம் நான் உயிருடன் வாழ்வேன்; இல்லாவிடில், உன்முன்னே பட்டினியாகவிருந்து இங்கேயே உயிரை விட்டுவிடுவேன்; நெருப்பின் வெப்பத்தினலே பொன்முதலிய உலோகங்கள் உருகியொன்றுகின்றன; அதுபோல நான் என்னுடலை வருத்தியேனும் உன்னோடொன்றுகின்றேன்; ஏதேனுமொரு காரியத்தை முன்னிட்டு, மிருகம் பறவை முதலியவைகள் சிநேகத்துவத்தைப் பெறுகின்றன; ஆதலால், நான்

உன்னால் நன்மையடையலா மென்ற எண்ணத்தைக் கொண்டு, உன்னுடன் சிநேகமாக விரும்புகின்றேன்; மூடர்களோ, பயத்தினாலாவது, ஏதேனும் பேராசையினு லாவது ஒருவருடன் சிநேகங்கோள்வார்கள்; விவேகிகளோ, அவ்வாறின்றிச் சற்குண முள்ளவரைக் கண்டமாத்திரத்தில் அவருடன் சிநேகமாவார்கள்; அவர்களைப்போல நானும் விவேகியாதலின், உன் சற்குணத்தைக் கண்டு இப்போது உன்னோடு சிநேகங் கொள்ள விரும்புகின்றேன்; மண் பானை சீக்கிர முடைந்துவிடும். உடைந்தாலும், மீண்டும் போருந்தாது; போற்குடமோ, சீக்கிர முடையாது; ஒரு சமயம் உடைந்தாலும், மீண்டும் போருத்தினுற் போருந்திக் கோள்ளும்; இவைகளைப்போல அற்பருடைய சிநேகம் சீக்கிரம் நீங்கிப் போகும்; நீங்கின், மீண்டு முண்டாகாது; விவேகிகளுடைய சிநேகமோ, எளிதில் நீங்காது; ஒரு சமயம் சிறிது நீங்கினும், மீண்டும் முன்னிருந்ததினும் பதின்மடங்கதிகமாக உண்டாகும்; நான் சற்குணமுடையவ னுதலின், என்னுடைய சிநேகம் எளிதில் நீங்காது; ஒரு சமயம் சிறிது நீங்கினும், மீண்டும் வளரும்,'' என்று பல விதமான நீதிகளையெல்லாம் எடுத்துக்கூறித் தன்னுடைய நற்குணத்தை விளக்கிக் காட்டிற்று.

இவ்வளவு வார்த்தைகளையுங் கூறிய பின் எலிக்குக் காகத்தின்மேல் நம்பிக்கை உண்டாயிற்று. அதனுல், அது, ''இவன் மிகவும் மனவுறுதி யுடையவன்; சிநேகி தர்க்கு நன்மை செய்பவன்; ஆதலால், இவனுடன் சிநேகங் கொள்ளலாம்,'' என்று சந்தோஷித்து, உடனே காகத்தை நோக்கி, ''நண்பனே, உன்னுடைய புத்தி சாதுரியமான வார்த்தைகளால் நான் சந்தோஷ மடைந் தேன்; உன் விஷயத்தில் எனக்கு நம்பிக்கையு முண்டாய்

விட்டது; இனி நீ என்னோடு சிநேகமாயிரு; நாமிருவரும் இன்றுமுதல் ஒரு மனமுடையவர்களா யிருத்தல் வேண்டும்; உதவி செய்பவன் மித்திரனென்றும், தீங்குசெய்பவன் விரோதி யென்றும் தெரிந்து, அவர்களுக்குத் தகுந்தபடி நடத்தல் வேண்டும்,'' என்றுசொல்லி, மேலும் அதற்கு உபசார வார்த்தைகள் கூறித் தன்னுடைய வளையிலிருந்து சிறிது ஆகாரங் கொண்டு வந்து கொடுத்து, அதனிடம் விடை பெற்றுக்கொண்டு, உள்ளே போயிற்று; மித்திரத்துவம்பெற்ற காகமும் தன்னிருப்பிடத்திற்குச் சென்றது. அன்று முதல் அவ்விரண்டும் தினந்தோறும் மிக்க சிநேகமாய் அடிக்கடி சந்தித்து ஒன்றுக்கொன்று ஆகாரங் கொடுத்துக்கொண்டும், பல இனிமையான வார்த்தைகளைப் பேசிக்கொண்டும் காலங் கழித்து வந்தன.

இப்படியிருக்குங் காலத்திலே, இலகு பதனனுக்கு அங்கே இரை அகப்படாமையால், அது வேறோரிடம் செல்ல விரும்பி, அதனை இரணியகனுக்குச் சொல்லக் கருதி, ஒரு நாள் அந்த எலியினிடம் வந்து, "நண்பனே, இப்போதிங்கே எனக்குச் சரியான இரை அகப்படவில்லை; ஆதலால், வேறிடஞ் செல்ல விரும்புகின்றேன்; நீ யெனக்கனுமதி கொடுக்கவேண்டும்,'' என்று சொல்ல, இரணியகனும், அச்சமயத்தில் தன் ஆஸ்தியை இழந்து வறுமையுற்றிருந்தபடியால், தானும் காகத்துடன் செல்ல விரும்பி, "மித்திரா, நீ எவ்விடத்திற்குச் செல்ல விரும்பி யிருக்கின்றாய்?'' என்று வினவிற்று. அதற்கு இலகுபதனன், தண்டகாரணியத்தி லுள்ள கருப்பூரகௌரம் என்கிற தடாகத்தில், ஆமையாகிய மந்தரன் என்பவன் வாசஞ் செய்கிறான்; அவன் எனக்கு மிகுந்த உண்மையுள்ள சிநேகிதன். நான் அங்குச்சென்றால், அவன் பலவிதமான

மீன்களைக் கொண்டுவந்து எனக்குக் கொடுத்து, என்னைப் போஷிப்பான்; ஆதலால், அவனிடம் செல்ல விரும்பி யிருக்கின்றேன்,'' என்று சொல்ல, இரணியகனும் அந்தக் காகத்தினிடம், "சிநேகிதனே, அவ்விடத்திற்கு என்னை யும் அழைத்துக்கொண்டு போகவேண்டும்; நானும் வேறு தேசஞ் செல்வதில் விருப்புடையவனா யிருக்கின்றேன்,'' என்று கூறிற்று. அப்போது காகம், "நண்பனே, நீ இவ்விடத்தில் சந்தோஷத்துடன்றானே இருந்தாய்? இப் பொழுது ஏன் வேறிடஞ் செல்ல விரும்புகின்றாய்?'' என்றுவினவ, இரணியகன், இதற்கேற்பட்ட காரணத்தை நான் அங்குச் சென்றபின் சொல்லுவேன்; நீ இப்பொழுது என்னைத் தூக்கிக்கொண்டு போ,'' என்று கூறிற்று.

அதன்மேல் இலகுபதனன் இரணியனைத் தூக்கிக் கொண்டு தன் சிநேகனாகிய மந்தரனிருக்கும் தண்டகாரணி யம் போய்ச் சேர்ந்து, அதனைக் கண்டு சந்தோஷித்தது. அப்போது மந்தரனும் மனக்களிப்படைந்து, இலகு பதனனுக்கும், இரணியகனுக்கும் நல்ல விருந்திட்டு உப சாரம் புரிந்து, அவற்றின் க்ஷேம லாபங்களைப் பற்றி விசாரித்தது. அப்போது இலகு பதனன் முதலில் தன்னு டைய க்ஷேம சமாசாரத்தைச் சுருக்கிச் சொல்லி விட்டுப் பின்பு, இரணியகனுடைய தன்மையைப்பற்றிச் சொல்லத் தொடங்கி, "அன்பனே, இந்த இரணியுகன் மிக்க பரோப காரி. இவன் தன்னோடு சிநேகங் கொண்டிருக்கிற சித்திரக் கிரீவ னென்னும் புறா அரசனை அவன் பரிவாரத்துடனே ஒரு சமயம் வேடனுடைய வலையினின்றும் விடுவித்துக் காப்பாற்றியவன்; அப்போது இவனுடைய சிநேகத்தின் உயர்வைப் பார்த்து, நானும் இவனுடனே சிநேகங் கொண்

டேன்; இவனைப்போன்ற சிநேகன் உலகத்தில் எவருக்கும் அகப்படுவது அருமையினும் அருமை,'' என்று கூறிற்று.

இதைக்கேட்டவுடனே மந்தரன், மிகுந்த சந்தோஷத்தை யடைந்து, இரணியகனை நோக்கி, "அன்பார்ந்த நண்பனே, நீ நகரங்களின் சார்பிற் சஞ்சரிக்கக் கூடியவனல்லவா? அப்படியிருக்க, இந்த மனித சஞ்சாரமில்லாத காட்டில் ஏன் வந்தாய்?'' என்று வினவ, எலி, தான் சம்பகாவதி என்னும் நகரத்தில் சூடா கர்ணன் என்னும் சந்நியாசியின் மடத்தில் ஒரு புதையலுடனே கூடிச் செருக்குடனே யிருந்து, அவன் சாப்பிட்டு மிகுந்த சோற்றைத் தாவி யுண்டு, அவனுக்கு உபத்திரவத்தை யுண்டாக்கிக் கொண்டு வாழ்ந்து வந்ததாகவும், பின் அங்கே வந்த மற்றொரு பரதேசியின் போதனையால் அவன் தன் திரவியத்தை யெடுத்துக்கொண்டு தன்னை யடித்துத் துரத்திவிட்டதாகவும், அதனால், தான் வலிமை குன்றித் தரித்திரப்பட்டு வனத்திற்கு வந்து விட்டதாகவும் கூறிற்று. இதைக் கேட்டு மந்தரன், இரணியகனைப் பார்த்து, "மித்திரா, நீ இதற்கு வருத்தப்படாதே; விவேகிகளா யிருப்பவர்கள் எவ்விடத்திற்குச் சென்றாலும், மரியாதை யடைவார்கள்: சிங்கம் தன் இடத்தை விட்டு மற்றொரு காட்டிற்குச் சென்றாலும், புல்லைத் தின்னாமல், யானையையே தின்னும்; உற்சாகமுடையவன், சந்தோஷ முள்ளவன், தைரியமுள்ளவன், சூரத்தன்மை யுடையவன், நெஞ்சிற் களங்க மில்லாதவன் ஆகிய இவர்களிடத்தில் இலக்குமி தானே வந்தடைவள்; நீ உன்னுறைவிடத்தை விட்டு வந்தாலும், விவேகியா யிருப்பதனால், எவ்விடத்தும் மரியாதை யடைவாய்; நீ சிங்கத்தைப்போன்ற மனவுறுதி யுடையவனாதலால், வேற்றிடஞ் சென்றாலும், வறுமையுற்று உனக்குத் தகாத

ஆகாரத்தைப் புசிக்கமாட்டாய்; இன்னும் உன்னிடத்தில் ஊக்கமும், சந்தோஷமும், தைரியமும், சூரத்தன்மையு மிருப்பதால், உனக்கு எவ்விடத்திலும் மிக்க செல்வமுண் டாகும்; நீ செல்வம் போனதைப்பற்றியும் கிலேசப் படாதே; மேகச்சாயை, துஷ்டனுடைய தயவு, இளம்புல், யௌவனம், தனம் இவைகள் நெடு நாளைக்கு நிற்கமாட் டா; இவற்றை யிழப்பதற்காக அறிவாளிகள் வருந்தி ஆகார மற்று அழுதுகொண்டிருக்கலாகாது; நீ நல்ல புத்திசாலி யாகையால், உனக்கிவை யெல்லாம் தெரிந்தே யிருக்கும்; ஆதலால், உனக்கு நான் அதிகமாகச் சொல்ல வேண்டுவ தில்லை; இனி நீ எல்லாக் கவலைகளையு மொழித்து, என்னு டனே சிநேகமாய் இவ்விடத்திலேயே யிரு; என்னாலியன்ற உதவியை நான் உனக்கு எப்பொழுதும் செய்துகொண்டு இருப்பேன்,'' என்று அதன் கவலை ஒழிந்து கலக்கம் தீரத் தைரியமான பல வார்த்தைகளைக் கூறிற்று.

இவைகளைக் கேட்டு இரணியகன் சந்தோஷித்தது. பின்பு இலகு பதனனும் ஆமையின் வார்த்தைகளுக்கு மகிழ்ந்து, அவனை நோக்கி, "மந்தரா, நீ எல்லா நற்குணங் களும் பொருந்தியவன்; விவேகிகளுக்கு வந்த துன்பத்தை விவேகிகளே நீக்குவார்கள்; அதுபோல, எங்களுக்குவந்த கஷ்டத்தை நீ நீக்குவா யென்று கருதியே நாங்கள் உன் னிடத்திற்கு வந்தோம்,'' என்று கூறி விட்டு, ஒரு நீண்ட மரத்திற்போயுட்கார்ந்து, தன் குலச் சுபாவப்படியே, முன் ஜாக்கிரதையுடன் அபாயம் வருவதை அறிந்துகொள் ளும் பொருட்டு, நாலா பக்கங்களிலும் திரும்பிப் பார்த் துக்கொண்டு இருந்தது. அப்படி யிருக்கும்போது, அது ஏதோ பயத்திற்கு ஏதுபோலத் தோன்றிய படியால், உடனே மந்தரனையும், இரணியகனையும் நோக்கி, "நண்பர்

களே, நாம் பயப்படத் தக்க விஷயம் ஏதோ ஒன்றுண்டாகும் போலத் தோன்றுகிறது; ஆதலால், நீங்கள் உங்களுக்குரிய விடங்களிற் புகுந்து ஒளித்துக் கொள்ளுங்கள்,'' என்று சொல்லிச் சாடை காட்ட, மந்தரன் தண்ணீரிற் புகுந்து மறைந்துகொண்டது; எலி, தான் ஒரு வளைக்குட்புகுந்து ஒளித்துக் கொண்டது. அதன்மேல் காகம் அந்த மரத்தின் நுனியிற் போயிருந்து, பயக் குறியுண்டானதைச் சந்தேகமற ஆராயும் பொருட்டு, நான்கு பக்கங்களிலும் நன்றுகப் பார்த்தது. அப்போது பயங்கரமான எந்த விஷயமுங் காணப்படவில்லை; அதனால், அஃது, எலியையும் ஆமையையும் விளித்து, ''நண்பர்களே, அபாயம் வருவதற்கு ஏது ஒன்றுமில்லை; ஏதோ ஒருதொனியைக் கேட்டு நான் சந்தேகப்பட்டேன்; இப்போது அச்சந்தேகம் ஒழிந்தது; நீங்கள் மீண்டும் வெளியில் வரலாம்,'' என்று கூறிற்று. உடனே அவை மறுபடியும் வெளியே வந்தன; பின்பு அம்மூன்றும் ஓரிடத்தமர்ந்து சந்தோஷமாகப் பேசிக்கொண்டு இருந்தன.

அப்போது சித்திராங்கன் என்னும் ஒரு கலைமான் அங்கே வந்து, அவற்றை நோக்கி, ''அன்பர்களே, நான் வேடர் செய்யும் உபத்திரவத்தால் பயங்கொண்டு, எனக்குத் தைரியங்கூறி என்னைத் தேற்றத்தக்க துணைவரொருவருமில்லாமையால், பல விடங்களிலும் அலைந்துஉழன்று, முடிவாக இப்போது உங்களைக் கண்டு, நீங்கள் நல்லவர்களென்று தெரிந்து, உங்களுடன் சேர்ந்து உறவாயிருக்கலாமென்று வந்தேன்,'' என்று கூறிற்று. அதன் வார்த்தைகளைக் கேட்டவுடனே இலகுபதனன், இரணியகன், மந்தரன் ஆகிய மூன்றும் கூடி யோசித்து, மான் தீங்கற்ற பிராணியாதலால், அதனைத் தங்களுடன் சேர்த்துக்

கொள்ளலாமென்று தீர்மானித்துக்கொண்டன. அதனால், மந்தரன், மற்ற இரண்டின் சம்மதத்தின்மேல், மானை உபசரித்து, அதை நோக்கி, "நண்பனே நானிருக்கும் இவ்விடம் உன்னுடைய வீடே; எனக்குரிய இந்த இரண்டு சிநேகிதர்களுடனே நீயும் ஒருவனாகச் சேர்ந்திரு; என்னை உன்னுடைய சேவகனென்று எண்ணிக்கொள்; எப்பொழுதும் உனக்கு நான் சேவகன்போல இருந்து தொண்டு செய்வேன்," என்று முக மலர்ச்சியோடு மொழிந்து, அதனைத் தன் கூட்டத்தில் சேர்த்துக்கொண்டது. பின்பு அந்த நான்கும் அவ்விடத்திற் கூடி உறவாயிருந்தன.

ஒரு நாள் சித்திராங்க னென்னும் மான் வேறோர் இடத்திற்குப் புல் மேயச்சென்றது. அது தினந்தோறும் சூரியன் அஸ்தமிப்பதற்குள் வரக் கூடியதா யிருந்தும், அன்றைக்குச் சூரியன் மறைந்து நெடு நேரமாகியும், வரவில்லை; அதனால், இலகுபதனன் முதலிய மூன்றும், "சித்திராங்கன் இன்னும் வரவில்லையே! அவனுக்கென்ன அபாயம் நேர்ந்ததோ!" என்று கவலையடைந்து, அது வரும் வழியைப் பார்த்துக்கொண்டிருந்தன; இராத்திரியுமாய்விட்டது; இரவு வந்து நெடு நேரமாகியும், மான் வரவில்லை; ஆகையால், அவைகள், "அந்தோ! இராத்திரியாகியும், நம்முடைய நண்பன் வரவில்லையே! நிச்சயமாக அவனுக்கு ஏதேனும் அபாயந்தான் சம்பவித்திருக்கும்; இல்லாவிடில், வராம லிருக்க மாட்டான்; இப்போது எங்கேனும் போய் அவனைத் தேடிப் பார்க்கலா மென்றால், இருள் சூழ்ந்து இருக்கின்றதே! இவ்விருளில் ஒன்றும் தெரியாதே!" என்று பலவிதமாகத் துக்கித்து, அன்று இரவெல்லாம் கவலையாய் நித்திரை கொள்ளாமலிருந்தன. பின்பு விடியற்கால மாயிற்று. உடனே காகம், மற்ற

இரண்டினிடமும், "நண்பர்களே, நீங்கள் இவ்விடத்தி லேயே இருங்கள்; நான் பல பக்கங்களிலும் விரைந்து பறந்து சென்று, சித்திராங்கன் என்ன கதியடைந்தா னென்பதைப் பார்த்துக்கொண்டு வருகின்றேன்," என்று சொல்லிவிட்டுப் பறந்து நான்கு பக்கங்களிலும் பார்த் துக்கொண்டு சென்றது. அவ்வாறு செல்லும்போது, சித்திராங்கன், ஓரிடத்தில் ஒரு வேடனால் கட்டப்பட்ட வலையில் சிக்கிக்கொண்டு கிடக்கக் கண்டது.

அதைக் கண்டவுடனே இலகுபதனன் மனம் பதைத்து, அதனிடம் சீக்கிரம் சென்று, "நண்பா, நீ மிகவும் புத்திசாலியாயிருந்தும் இந்த வலையில் எப்படிச் சிக்கிக்கொண்டாய்?" என்று வினவ, சித்திராங்கன், "மித்திரா, நீ இப்போதிதைப் பற்றி விசாரிப்பதி லொன் றும் பயனில்லை; நீ இப்பொழுதே விரைவாகச் சென்று, இரணியகனை இங்கே அழைத்துக்கொண்டு வரவேண்டும்; அவன் வந்தால், வேடன் வருவதற்குள் என் கட்டை அறுத்து என்னை விடுவிப்பான்; வேடன் வந்துவிடும் பக்ஷத்தில், ஒருபாயமும் செய்தல் முடியாது," என்று சொல்ல, உடனே காகம் விரைவாகப் பறந்து போய், மந்தரனிடத்திலும், இரணியகனிடத்திலும், நடந்த காரி யத்தைச் சொல்லி, இரணியகனை அழைத்துக்கொண்டு வந்தது. இரணியகன் வந்தவுடனே மானைப் பார்த்து, "மித்திரா, நீ மிகச் சமர்த்தனாயிருந்தும், இந்த வலையி லெப்படி அகப்பட்டாய்?" என்று வினவ, மான், "எவ் விதப் புத்திசாலிகளா யிருந்தாலும், கெட்ட காலம் வரும் போது ஆபத்துக்குள்ளாய் விடுவர்; அதைப்பற்றிப் பின்பு பேசிக்கொள்ளலாம்; நீ இப்பொழுது என்னை வலையி னின்றும் சீக்கிரமாக விடுவி; நான் சிறு குட்டியா யிருந்த

போது ஒரு சமயம் வலையிலகப்பட்டு, வாதனையடைந்து, பின்பு ஓர் இராஜ குமாரனிடம் சேர்ந்து, அவனால் விடப் பட்டு வந்திருக்கிறேன்; அதனால், எனக்குப் பழையபயம் அதிகமாயிருக்கிறது; ஆதலால், தாமதம் பண்ணாதே," என்று கூறி, அவசரப்பட்டது. அச்சமயத்தில் மந்தரனும் சிநேக வாஞ்சையால் தன்னிடத்தி லிருக்கச் சிறிதும் மனம் பொருந்தாமல், அந்த மானைப் பார்க்கும் பொருட் டுத் தன்னியற்கைப்படி மிருதுவாக நடந்து வந்து, அங்கே சேர்ந்து, மானின் துன்பத்தைப் பார்த்துக் கவலை கொண்டு, மிக்க பரிவுடன் இரணியகனை நோக்கி, "நண் பனே, நீ இப்போது தாமதம் பண்ணுவது கூடாது; வேடன் வருவானானால், நாமெல்லோரும் இவ்விடத்தை விட்டோடிப் போவோம்; சித்திராங்கன் மாத்திரம்வேடன் கையி லகப்பட்டுக்கொள்வான்; இதைக் குறித்து எனக்கு மிக்க கவலையா யிருக்கிறது; ஒருவன் நினைக்கிறபடி அவ னுடைய மனத்தில் இருப்பதை அறிகிற சிநேகிதனும், பிறர் துக்க மறிகிற பிரபுவும் உலகத்திற் கிடைப்பதருமை; இந்தச் சித்திராங்கனோ, நம் மனத்தி லிருக்கிறதை யறிந்து நடக்கக் கூடிய நண்பன்; இவனைப் போன்ற சிநேகிதன் எங்கும் எப்பொழுதும் கிடைக்கமாட்டான்; ஆதலால், விரைவாக இவனுடைய கட்டுகளை யறு," என்று கூறிற்று.

இவ்வாறு ஆமை கூறி முடிவதற்குள்ளே வேடன் எமனைப்போலக் கொஞ்ச தூரத்திற்கப்பால் வந்துவிட் டான். அவன் அப்படித்தூரத்தில்வருவதை இலகுபதனன் பார்த்து, உடனே எலியை நோக்கி, "சிநேகிதா, இதோ வேடன் வந்துவிட்டான்; இப்போது பெரிய சங்கடம் நேர்ந்துவிட்டது!" என்று சொல்லிற்று. அதைக் கேட் கவே, எலி, வெகு சீக்கிரமாகவே சித்திராங்கனுடைய

கட்டை யறுத்தது. அதுவும் அறுத்து முடிய, வேடனும் அங்கே வந்து சேர்ந்தான். அவன், மான் வலையி லகப் பட்டிருக்கின்றது என்னும் சந்தோஷத்தால் கிட்ட நெருங்கவே, அவைகளில் ஆமை தவிர மற்றவை ஓட்டம் பிடித்தன. அப்போது வேடன் மிக்க விசனத்தை யடைந்து, நான்குபக்கங்களிலும் சுற்றிப் பார்த்தான். அப்போது ஆமை மாத்திரம் தன் குல இயற்கைப்படி மெல்லென நடந்து சென்றது. வேடன் அதைக்கண்டவுடனே, 'மான் தவறி யோடிவிட்டாலும், இந்த ஆமை அகப்பட்டுக்கொண்டது! இதையாவது கொண்டு போய்த் தின்னலாம்,' என்று சிறிது சந்தோஷத்துடனே அதைப் பிடித்துத் தன் வில்லிற் சேர்த்துக் கட்டிக் கொண்டு சென்றான்.

அதைப் பார்த்தவுடனே சந்தோஷத்துடன் ஓடிய மானும், எலியும், காகமும் மிக்க விசனத்தை யடைந்து, ஆமையை விட்டுச் செல்ல மனமிசையாமல், வேடனுக்குப் பின்னே செல்லத் தொடங்கின. அப்போது எலி, மற்றவைகளை நோக்கி, "நண்பனே, ஒரு சங்கடம் நிவிர்த்தி யாய்விட்டதென்று மகிழ்ச்சி யடைந்தோம்; அதற்குள் மற்றொரு சங்கடம் நேர்ந்து விட்டது; உயிர்களுக்குத் தேகத்துடனேயே அநேகம் துன்பங்கள் பொருந்தி யிருக்கின்றன. இந்தத் துன்பம் சிநேகிதன் பொருட்டு நமக்கு வந்திருக்கின்றது; நல்ல விவேகியாயிருப்பவன் சிநேகிதனிடத்தில் விசுவாசம் வைப்பது போலத் தாய் தந்தை சகோதரன் புத்திரன் முதலியவர்களிடத்தும் வைக்கமாட்டான்; அதுபோல, நமக்கு மந்தரன் முக்கிய சிநேகிதனாகையால், அவனிடத்தில் நமக்கு விசுவாசம் அதிகமா யிருக்கின்றது;

அதனால், நமக்கு அவனுடைய ஆபத்தைப் பார்த்துச் சகிக்கமுடிய வில்லை; ஆதலால், வேடன் அதிக தூரம் செல்வதற்குள் மந்தரனை விடுவிக்கத் தக்க உபாயம் பண்ண வேண்டும்; இச்சமயம் தவறினால், பிறகு எந்த வுபாயமுஞ் செய்ய முடியாது,'' என்று சொல்ல அவைகள், அந்த எலியை நோக்கி, "இதற்கென்ன உபாயஞ் செய்யலாம்?'' என்று வினவின. அப்போது இரணியகன் சிறிது யோசித்து, "சரி; நான் ஓராலோசனை செய்திருக்கிறேன்; அப்படிச் செய்தால், மந்தரனை விடுவிக்கலாம்: சித்திராங்கன் முன்னே வேடன் கண்ணிற் படாமல் விரைந்து சென்று, அவன் வரும் வழியில் ஓர் ஏரி கரையோரத்தில் செத்தவனைப்போலக் கீழே விழுந்து கிடக்க வேண்டும்: அவன்மேல் இலகுபதனன் உட்கார்ந்து கொண்டு, செத்தமானின் தசையைப் பிடுங்கித் தின்பவன் போலப் பொய்யாக மூக்கினால் குத்திக்கொண்டிருக்க வேண்டும்; அப்படியிருந்தால், வேடன், மான் செத்ததென்று நினைத்து, மந்தரனைக் கீழே வைத்துவிட்டு, சித்திராங்கனைப் பார்த்தற்கு அவன் சமீபத்திற் செல்வான்; அவன் சித்திராங்கனிடம் செல்வதற்குள் நான் விரைந்து மந்தரன் கட்டைச் சேதித்துவிடுவேன்; உடனே அவன் தண்ணீரிற் புகுந்துகொள்வான்; சித்திராங்கனும் வேடன் சமீபத்தில் வந்தவுடனே எழுந்து ஓட்டம் பிடிப்பான்; இலகுபதனனும் பறந்துபோய்விடலாம்; நானும் விரைந்து ஓடி எங்கேனும் மறைந்துகொள்வேன்; நம்மெண்ணம் சுகமாக நிறைவேறும்,'' என்று கூறிற்று.

இதைக் கேட்டவுடனே மானும் காகமும் அவ்வாறே செய்தன; வேடன் மானைக் கண்டு, சந்தோஷத்துடனே செத்ததென்றெண்ணி, ஆமையைக் கீழேவைத்து விட்டு,

அதனிடம் விரைந்து சென்றான். அவன் மானிடம் செல்வதற்குள்! எலி ஆமையின் கட்டை அறுத்துவிட்டது; ஆமை உடனே பக்கத்திலிருந்த ஏரி நீரிற் புகுந்துகொண்டது; பிறகு எல்லாம் வேடனை ஏமாற்றிவிட்டு ஓட்டம் பிடித்தன. இவற்றின் செய்கைகளைக் கண்ட வேடன், மிக்க அவமான முற்று, வாய்த் தவிடும்போய் அடுப்பு நெருப்பு மிழந்தவள் போல வருந்தி, "ஐயோ! பெரிய லாபம் பெறலா மென்று நினைத்துக் கையிற் கிடைத்த சிறிய லாபத்தையும் இழந்து விட்டேனே! அதிக ஆசை அதிக நஷ்டம் என்பதை நான் சிறிதும் கவனிக்காமற் போனேன்! கிடைத்ததைப் பெரிதாக நினைத்து, அதுவே போதுமேன்று எவன் திருப்தி யடைவானோ, அவனே எப்போழுதும் கவலையற்றுச் சுகமடைவான்; இவற்றை யெல்லாம் நான் அறிந்திருந்தும், இத்தருணத்தில் எனக்குப் புத்தியில்லாமற் போயிற்று," என்று மனக்கவலையுடனே தன்வீடுபோய்ச் சேர்ந்தான். பின்பு, உண்மைச் சிநேக முற்ற எலியும், காகமும், மானும், ஆமையும் ஒன்றிற் கொன்று இவ்வாறே உதவியாயிருந்து, சந்தோஷமாக நெடுங்காலம் வாழ்ந்து வந்தன.

2. பேராசைப்படுதல் பெருந்தீங்கு பயக்கும்.

பேராசை யாற்றமக்குப் பின்வருவ தாயாமல்
நேராத காரியத்தை நேர்ந்துசெய்வோர்—யாரேனும்
அன்றொருபோற் காப்பாசை யால்மடிந்த வேதியன்போல்
நின்றழிந்து சாவர் நலிந்து.

(இ - ள்) தமக்கேற்பட்ட பேராசையினாலே, பின் வரும் தீங்கை உணராமல் பொருந்தாத காரியத்தை மனம் பொருந்திச் செய்பவர்கள், எவர்களானாலும், அந்த நாளில் பொற்காப்

பின் விருப்பத்தாலே புலியினிடம் அகப்பட்டிறந்த பேராசைப் பார்ப்பானைப்போல, நன்மை யாவற்றையு மிழந்து, வகை மோசத்தால் மனம் வருந்திச் சாவார்கள்

பொற் காப்பாசையாலிறந்த வேதியன் கதை.

ஒரு காட்டிற் சஞ்சரித்த கிழப்புலியொன்று, தான் விருத்தாப்பிய தசையை யடைந்துவிட்டதால், இரை தேடுவதற்குச் சக்தியற்றதாய், "இனி நாம் உபாயத்தி ஞலேயே இருந்தவிடத்திலிருந்துகொண்டு இரை தேடித் தின்ன வேண்டும்," என்று தீர்மானித்து, ஒரு நாள் மிகவும் சேறு நிறைந்த ஓர் ஏரி கரையின் ஓரத்திற் போயுட் கார்ந்துகொண்டு, "இரை தேடுவதற்கு என்ன உபாயஞ் செய்யலாம்?" என்று யோசிக்கத் தொடங்கி, தான் முன்னே அடித்துத் தின்ற ஒரு மனிதன் அணிந்திருந்த பொற்காப்பொன்றை அஃது எடுத்து வைத்துக்கொண்டிருந்தபடியால், அந்தக் காப்பின் மூலமாக ஒருபாயஞ் செய்யலாமென்று அதற்கெண்ண முண்டாயிற்று. அதனுல், அது, "நம்மிடத்தில் ஒரு பொற்காப்பு இருக்கின்றது; பக்கத்திலோ, ஆளிறங்கினுல் காலைப் பிடுங்கிக் கொண்டு வர முடியாத சேறுள்ள ஏரி இருக்கின்றது; நாம் இங்கே மகா சாதுபோல நடித்துக்கொண்டு இங்கே வரும் மனிதனிடம் பொற் காப்பைத் தருவதாகவும், இந்த ஏரியில் ஸ்நானஞ் செய்துவிட்டு வரும்படிக்கும் சொன்னுல், அவன் ஸ்நானஞ் செய்யும் பொருட்டு ஏரியில் இறங்கிச் சேற்றில் கால் புதைந்து பிடுங்கிக்கொண்டு வர முடியாமல் விழிப்பான். அப்போது நாம் அவனைப்பிடித்து அடித்துத் தின்றுவிடலாம்; இதுபோலவே நமது காலமும் கழியும் இதுதான் சரியான உபாயம்," என்று தீர்மானித்து, அவ்விடத்தில் உட்கார்ந்திருந்தது.

இப்படி இருக்கையில், பேராசைக்காரனுகிய ஒரு பிராமணன் அங்கு வந்தான். அவனைக் கண்ட உடனே புலி, தான் கருதிய தந்திரப்படி செய்யக் கருதி, அவனை நோக்கி, "அந்தண குல சிகாமணியே, இங்கே வா; உனக்கிந்தப் பொற்காப்பைத் தருகிறேன்," என்று சொல்லிக் கூப்பிட்டு, அந்தக் காப்பை அவனுக்குக் காட்டிற்று. அதைப் பார்த்தவுடனே பிராமணன், "இந்தக் காப்பு நமக்கு வலிய வருவதுபோலத் தோற்றுகிறது; ஆயினும், இது புலியின் கையிலிருக்கிறது: புலியோ, நம்மைக் கொல்லக் கூடியது; இதனிடம் எப்படி நெருங்குவது? சந்தேகப்பட்டு நாம் நெருங்காவிடில், காப்பு நமக்குக் கிடைக்க மாட்டாது; எப்பொழுது மனித தேகமெடுத்தோமோ, அப்பொழுதே மரணமும் கூடவே இருக்கிறது: மரணம் வரவேண்டியிருந்தால், எந்த வழியினுலும் வந்தே தீரும்; சாவுக்குச் சந்தேகப்பட்டுப் பெருமுயற்சிகளைக் கைவிடலாகாது: நாம் எவ்வளவு பிரயாசைப்பட்டுச் சம்பாதித்தாலும், இத்தகைய பொற் காப்புக் கிடைப்ப தரிதாகும்; ஆகலால், இதைப்பற்றிப் பிரயத்தனஞ் செய்து பார்க்க வேண்டும்;" என்று தன் பேராசைக்குத் தக்கபடி பல விதமாக ஆலோசித்து, புலியை நோக்கி, "புலியே, உன்னிடத்தில் பொற்காப் பிருப்பதும், நீ எனக்கு அதைக் கொடுப்பதும் சரிதான்: உன்னிடம் நான் எவ்வாறு நம்பிக்கை வைப்பது?" என, புலி, "பிராமணனே, நான் நல்ல சாஸ்திரங்களைக் கற்று உணர்ந்து, காலையிலெழுந்து ஸ்நானம் செய்து, நித்திய தானஞ் செய்யும் வழக்கத்தைக் கொண்டிருக்கிறேன்; இன்னும், வேட்டல், ஓதல், கொடுத்தல், தவம், சத்தியம், உறுதி, பொறுமை, நிராசை ஆகிய இந்த எண்வகை அறங்களையும் நன்றுயறிந்திருக்

கின்றேன்; அதனாலேயே இந்த அருமையான பொற் காப்பை எவர்க்கேனும் கொடுத்துவிடக் கருதி, இப் போது நீ எதிர்ப்பட்டதால், இதனை வாங்கிக்கொள்ளும் படி நான் உன்னை அழைக்கின்றேன்; மேலும், நான், கொலை செய்வே னென்று எவரும் சந்தேகங் கொள்ளாத படி நகமும் பல்லும் போன கிழவனா யிருக்கின்றேன். இவற்றை யெல்லாம் நீ ஆலோசித்துப் பார்த்தால், நான் கொலை செய்ய மாட்டேனென்பதும், என்னிடம் நற் குணம் பொருந்தியிருக்கின்றதென்பதும் உனக்குச் சந் தேகமற விளங்க வில்லையா?'' என்று வினவிற்று.

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் பிராமணன், ''நீ சொல்வதெல்லாம் சரிதான்; ஆனாலும், 'புலி மனி தரை அடித்துத் தின்னும் சுபாவ முடையது,' என்று உலகமெல்லாம் ஒரு பிரஸ்தாபம் பரவி இருக்கின்றதே! இதற்காகத்தான் எனக்கு அடிக்கடி சந்தேக முண்டா கிறது,'' என்று சொல்ல, உடனே புலி, ''வேதியனே, நான் மற்ற சாஸ்திரங்களை உணர்ந்திருப்பதோடு முக் கியமாகத் தரும சாஸ்திரத்தையும் உணர்ந்திருக்கிறேன்; தரும சாஸ்திர முணர்ந்தவர், தம் பிராணனைப்போல மற்ற வர்களுடைய பிராணனையும் நினைத்து, என்றும் ஜீவதயை யோடு இருப்பர்; தம்முடைய சுக துக்கங்களைப் போலவே பிறருடைய சுக துக்கங்களையும் நினைப்பர். என் ஜாதி கெட்டதானாலும், நான் தீய செயல் செய்யேன். கெட்ட குலத்தில் எத்தனையோ சாதுக்கள் பிறக்கவில்லையா! பிறப் பின் தன்மையை உத்தேசித்து ஒருவரைக் கெட்டவரென்று கருதிவிட லாகாது; இன்னும் நான் தருமஞ் செய்யும் விதங்களையும் நன்கு யுணர்ந்திருக்கின்றேன்; ஏழைக்கே எதையுங் கொடுக்க வேண்டும்; எத்தகையனாயினும், எக்

குலத்தனுயினும் செல்வ முடையவனுக்குக் கொடுப்பதால் ஒரு பயனுமில்லை; நோயுள்ளவனுக்கு மருந்து கொடுத்தால், பிரயோசன முண்டு; நோயில்லாதவனுக்குக் கொடுப்பதால் யாது பயன்? இதுபோல, நீ மிகவும் தரித்திரனு யிருப்பதால், உனக்குக் கொடுத்தாற் பயனுண்டு; மற்ற செல்வந்தர்களுக்குக் கொடுப்பதால் பயனில்லை; ஆதலால், உனக்கே இதனைக் கொடுக்கத் துணிந்தேன்; நீ எள்ளளவும் சந்தேகங் கொள்ளாமல், சீக்கிரமாக இந்த ஏரியி லிறங்கி ஸ்நானஞ் செய்து விட்டு வந்து, இந்தக் காப்பை வாங்கிக்கொண்டு போ; தானம் பெறுபவர்கள் பரிசுத்தமாகப் பெற வேண்டும்; அதனுற்றுன் ஸ்நானஞ் செய்து வரும்படி உனக்குச் சொல்லுகின்றேன்,'' என்று கபடமான வார்த்தைகளை வெகு தந்திரமாகக் கூறிற்று.

இவ்வாறு கூறி முடித்தவுடனே பிராமணன் இந்தப் பசப்பு வார்த்தைகளால் மயங்கிப் போய்விட்டான்; அந்தோ! அந்தணன் தன் பேராசையால் புலியின் கபடமான வார்த்தைகளை மெய்யென்றே நம்பித் தீர்த்தமாடும் பொருட்டு எதிரிலிருந்த ஏரியிலிறங்கினுன். இறங்கினவுடனே அவன் கால்க ளிரண்டும் சேற்றிற் புதைந்து கொண்டன. அதனுல், அவன் கால்களைப் பிடுங்க முடியாமல், அப்படியும் இப்படியும் உடம்பை அசைத்துச் சங்கடப்பட்டான். அத்தருணத்தில் புலி, 'சரி! நம்முடைய தந்திரம் பலித்தது!' என்று மனத்திற்குட் சந்தோஷித்து, பார்ப்பானை நோக்கி, "பிராமணு, அஞ்சாதே. நான் உன்னைச் சேற்றினின்றும் எடுத்துவிடுகின்றேன்,'' என்று சொல்லிக்கொண்டே போய், அவனைப் பிடித்துக் கொல்லத் தலைப்பட்டது. அப்பொழுதுதான் புலியின் தந்திரம் பிராமணனுக்குப் புலப்பட்டது. அவ்வாறு புலி

யின் நோக்கம் தெரிந்தவுடனே, அவன், "ஐயோ! வகை தெரியாமல் பேராசைகொண்டு புலியினிடம் அகப்பட்டுக் கொண்டேனே! துஷ்டர்களா யிருப்பவர்கள் வேத அத்தியயனம் பண்ணியிருப்பதாகக் கூறினாலும், தரும சாஸ்திரங்களெல்லாவற்றையும் அறிந்திருப்பதாகக் கூறினாலும், அவர்களுடைய வார்த்தையில் எப்பொழுதும் நம்பிக்கை வைக்கலாகாது. ஒருவனுடைய குலவியற்கை எப்பொழுதும் அவனை விட்டு நீங்காது. இவற்றை யெல்லாம் நன்றாக யோசியாமல், நான் இதன் மோசத்திற் சிக்கிக்கொண்டேன்; இனி நான் பிழைப்பதேது!" என்று எண்ணாதும் எண்ணிக் கண்ணீர் விட்டான். சிறிது நேரத்திற்குள் புலி அவனைக் கொன்று தின்று விட்டது.

3. வஞ்சகரோடு உறவு கொண்டால், தீங்கு வரும்.

நயவஞ் சகம்பேசி நட்பாடு கின்ற
கயவரோடு சேர்வார் கருதில்—நயமில்லா
வஞ்சநரி சொல்லால் வலைபட்ட மான்போலச்
சஞ்சலத்து ளாவர் தளர்ந்து.

(இ-ள்.) மனத்திற்குள்ளே வஞ்சகம் வைத்து வெளிக்கு நயமான வார்த்தைகளைப் பேசிக் கள்ளமாக உறவாடுகின்ற கீழ் மக்களுடனே சேர்ந்து சிநேகங் கொள்வார், மனத்திலே சிறிதும் நன்மையில்லாத வஞ்சகத்தையுடைய நரியினுடைய கபடமான வார்த்தையினாலே அதனோடு சிநேகமாகி வலையிற் சிக்கி வருந்திய ஒரு மானைப்போல, மனங் கலங்கித் துன்பத்திற்குள்ளாகி வருந்துவார்.

நரியோடு சேர்ந்து வலையிற் சிக்கிய மானின் கதை.

மகத தேசத்திலுள்ள ஒரு சண்பக வனத்தில், ஒரு மானும் காகமும் மிகுந்த சிநேகமாயிருந்தன. அப்படி இருக்கும்போது அந்த மான், தன்னிஷ்டம்போலப் புல்

முதலியவற்றை மேய்ந்து, கொழுத்துப் பருத்திருந்தது. அஃதவ்வாறு கொழுத்திருப்பதைச் சம்புக னென்னும் ஒரு நரி பார்த்து, "இம்மானே, நன்றாகக் கொழுத்திருக்கின்றது; இதனிறைச்சி மிகவும் சுவையாயிருக்கும்; இதனைக் கொன்று புசிக்க நம்மால் சாத்தியப் படாது; இது நம்மினும் அதிகரித்த வலிமை பெற்றதா யிருக்கின்றது; ஆதலால். இதனோடு வஞ்சனையாகச் சிநேகஞ் செய்து, இதனை ஏதேனு மோராபத்தில் சிக்க வைத்து, இஃதிறந்த பின் இதன் மாமிசத்தை நாம் தின்ன வேண்டும்," என்று ஆலோசித்து, ஒருநாள் அந்த மானின் சமீபத்திற் சென்று அதனை அன்போடு பார்ப்பது போலப் பார்த்து, "நண்பனே, சுகமாயிருக்கின்றாயா?" என்று வினவிற்று. அப்போது மான் அதைப் பார்த்து, "நீ யார்? எதை யுத்தேசித்து என்னிடம் வந்தாய்? என்று கேட்க, அந்நரி, மித்திரா, நான், க்ஷுத்திரபுத்தி என்னும் பெயரினையுடையவன்; எனக்கொருவருந் துணையில்லை; நான் எவருந் துணையற்ற பாவியாய் இக்காட்டில் தனிப்பட்டுத் திரிந்துகொண்டு இருக்கிறேன்; உலகத்தில் ஒருத்தமரை யேனும் சிநேகமாகப் பெற்றுக் கோளாதவருடைய வாழ்வு, நாயின் வாழ்வைக்காட்டினும் தாழ்ந்ததாம்; ஆதலால், எவருடைய சிநேகத்தையேனும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் எனக்குச் சிலகாலமாக உண்டா யிருக்கின்றது; நானும் ஒரு நல்ல சிநேகிதனைச் சில நாளாகத் தேடிவந்தேன்; என் மனத்திற் கிசைந்தவனாக ஒருவனு மகப்படவில்லை; இன்றைக்குன்னைப் பார்த்தேன்; பார்த்த மாத்திரத்தில், நீ மகா உத்தம னென்பதும் எனக்குப் புலப்பட்டன; அதனால், உன்னோடு சிநேகங்கொள்ளும் பொருட்டு இங்கேவந்தேன்; நீ என்னை மித்திரனாக உன்

னிடத்திற் சேர்த்துக்கொள்ள வேண்டும்; நான் நீ இட்ட கட்டளைகளைச் செய்துகொண்டு உன்னிடத்தில் இருந்து வருகிறேன்," என்று கூறிற்று. மான் கபடமற்ற தாகையால், அந்த வஞ்சக நரியினுடைய வார்த்தைகளை மெய்யென்று நம்பி அதற்கிசைந்து, "நல்லது; இன்று முதல் நீ என்னோடு சிநேகமாயிரு," என்று சொல்லி, அதனைத் தான் இருக்கும் சண்பக வனத்திற்குத் தன்னுடன் அழைத்துக் கொண்டு சென்றது.

அப்போது, மானுடன் நட்புள்ள சுபுத்தியென்னும் காகம் நூதனமாக வந்த நரியைக்கண்டு சந்தேகங்கொண்டு, மானை நோக்கி, "மித்திரா உன் சமீபத்தில் இருப்பவன் யாவன்? இவனை நீ எனிங்கு அழைத்து வந்தாய்?" என்று வினவிற்று. அதற்கு மான், "இந்தச் சம்புகன் என்னோடு சிநேகங் கொள்ள விரும்பி வந்தான்; இவன் மிகவும் நல்லவனாகத் தோன்றுகின்றான்; ஆகையால், இவனை நாம் நம்மோடு சேர்த்துக்கொண்டால், இவன் நமக்கு உதவியா யிருப்பான்; ஆகையால், இவனை இவ்விடத்திற்கு அழைத்துக்கொண்டு வந்தேன்," என்று சொல்ல, காகம், "நண்பனே, பழக்கமில்லாத ஒருவன் நூதனமாக வந்து இனிமையாகப் பேசினாலும், அவனைச் சடுதியில் நம்பிவிட லாகாது; ஒருவனுடைய குலத்தையும் நடத்தையையும் தெரியாமல் அவனுக்கு இடங்கொடுத்தால், பூனைக்கிடங் கொடுத்த சரற்கவ னேன்னுங் கழுகு இறந்தது போல உயிர் விடுதற்கேது வுண்டாகும்; ஆதலால் ஒருவனுக்குத் திடீமென இடங்கொடுக்க லாகாது," என்று கூறிற்று. அதைக்கேட்டவுடன், நரி மகாசாதுவைப்போல் காகத்தை நோக்கி, ஒருவன் சுபாவம் சிநேகம் பண்ணுவதற்கு முன் எப்படித்தெரியும்? ஒருவனோடு பழகினல்

தானே நாம் அவனுடைய நடக்கையைத் தெரிந்துகொள்ளலாம்? அப்படியிருந்தாலும், அறிவுடையோர்கள் ஒருவனைப் பார்த்தமாத்திரத்தில் அவன் நடக்கை கெட்டதென்பதையும் நல்லதென்பதையும் தெரிந்துகொள்வார்கள்; அங்ஙனம் தெரிந்து உத்தமரோடு சீக்கிரம் சிநேகங் கொள்வார்கள்; அதுபோலவே, இந்த நண்பனும் என்னைப் பார்த்த மாத்திரத்தில் என்னோடு சிநேகமானான்; இனி, உனக் கொருவாறு சந்தேகமா யிருந்தால், சில நாள் என்னோடு பழகித் தெரிந்துகொள்; சில தினங்களில் என்னுடைய குணம் வெளிப் பட்டு விடமாட்டாதா?" என்றுரைத்தது. அப்போது மான் காகத்தைப் பார்த்து, "மித்திரா, நீ எண்ணுகிறபடி இவன் சந்தேகங் கொள்ளத் தக்கவனல்ல; மிகவும் நல்லவனாகத் தெரிகின்றான்; இவனும் நம்முடனே சேர்ந்திருக்கட்டும்; இவன் விஷயத்தில் தடை சொல்லாதே," என்று கூற, காகம் சிறிது சம்மதித்தும் சம்மதிக்காமலும், 'எப்படியிருந்தாலும் நரியினுடைய உறவு கூடாது,' என்று மனத்திற்குள் நினைத்துக்கொண்டு, பேசாமல் இருந்து விட்டது. அதன்மேல் அம்மூன்றும் கூடித்தினந்தோறும் தங்கள் தங்கள் இஷ்டப்படியே தங்களுக்குரிய இயற்கைப்படி இரையகப்படுமிடங்கட்குப் பிரிந்து சென்று, இரை தேடித் தின்று, வயிற்றை நிரப்பிக்கொண்டு, திரும்பி வந்து, இராக்காலத்தில் அந்தச் சண்பக வனத்தில் தங்கி யிருந்தன.

இப்படியிருக்குங் காலத்தில், ஒரு நாள், நரி இரை தேடச் சென்றிருக்கும்போது மானைக் கொல்வதற்கு ஆலோசிக்கத் தொடங்கி, அங்கே ஒரு கொல்லையில் பயிர் நன்றாகச் செழித்து வளர்ந்திருக்கக்கண்டு, "இந்தப்பயிரோ, செழிப்புற்று இருக்கின்றது; இதில் கொல்லைக்கா

ரன் மிகப் பிரியமாகவும் கவனமாகவு மிருப்பான்; இதை மானுக்குக் காட்டி, அதை இதில் வந்து தினந்தோறும் மேயும்படி நாம் செய்து விடுவோமானால், கொல்லைக்கா ரன் பயிர்ச்சேதத்தைப் பார்த்து, வயிற்றெரிச்சல் கொண்டு, கோபத்துடனே மானைக் கொல்ல வலை கட்டு வான்; மான் தெரியாமல் வந்து அதிலே அகப்பட்டி றக்கும்; அப்போது நாம் பக்கத்திலேயே அதன் உயிர் போகும் வரை காத்திருந்து, அது இறந்தவுடன் கொல் லைக்காரன் வருவதற்குள் அதனிறைச்சியைத் தின்னலாம்; என்று தீர்மானித்துக்கொண்டு, திரும்பி வந்து, மறுநாள் மான் தனித்திருக்குஞ் சமயத்தில் அதை நோக்கி, " நண் பனே, இக்காட்டில் ஓரிடத்தி லுள்ள கொல்லையில் மிக வும் செழித்து நேர்த்தியாக வளர்ந்த பயிரிருக்கின்றது; அதனை உனக்குக் காண்பிக்கிறேன்; நீ தினந்தோறும் சென்று அதனைத் தின்று வரலாம்," என்று சொல்ல, மான் அதற்கு இசைந்தது. பின்பு நரி அதனை அழைத் துக்கொண்டு போய்ப் பயிரிருக்குமிடத்தை அதற்குக் காட்ட, மான் அன்று முதல் தினந்தோறும் போய் அப்பயிரை மேய்ந்துகொண்டு இருந்தது.

அவ்வாறு மான் பயிரை மேய்ந்து சேதப்படுத் திக் கொண்டிருக்கவே, கொல்லைக்காரன் அதனை உணர்ந்து, தன் பயிர்ச் சேதத்தைப் பற்றி, வருந்தி "ஒரு மான் வந்து இவ்வாறு செய்கின்றது; நல்ல திருக்கட் டும். அதனைக் கொல்கின்றேன்," என்று மிகக் கோபங் கொண்டு, அப்பயிர் செழித்திருக்கும் ஓரிடத்தில் மறை வாக ஒரு வலை கட்டிவைத்தான்.

மான் வழக்கம் போலப் போய் மேய்ந்து வரு கையில், ஒரு நாள் அந்த வலையிற் சிக்கிக்கொண்டது.

அவ்வாறு சிக்கிக்கொண்டவுடனே, அது, "எப்படியும் நம்முடைய சிநேகிதனாகிய குத்திரபுத்தி வந்து வலையை அறுத்து, நம்மை விடுவித்துவிடுவான்," என்று நினைத்துச் சிறிது தைரியத்தோடிருந்தது, அச்சமயத்தில் பக்கத்தில் உலாவிக்கொண்டு மான் வலையிற் சிக்கும் சமயத்தை எதிர் பார்த்திருந்த நரி, உடனே அங்கு வந்து, "இன்றைக்கு என்னுடைய விருப்பம் நிறைவேறிற்று. இனி நான் இதனுடைய கொழுப்பையும் மாமிசத்தையும் வயிறு நிறையத் தின்னுவேன்!" என்று வாயூற மனத்திற் சிந்தித்துக் கொண்டு, மானை விடுவிக்க ஒரு முயற்சி செய்யாமல், சும்மா விருந்தது. அதைக் கண்டவுடனே மான், "நண்பனே, நீ ஏன் பேசாம லிருக்கிறாய்? உன்னை நம்பியல்லவா நான் தைரியங் கொண்டு இருக்கின்றேன்? சீக்கிரம் இந்த வலைப் பிணிப்பை அறுத்து என்னை விடுவி. ஆபத்துக்காலத்தில், உடையிழந்தவன் கைபோல உதவுவ தன்றோ சிநேகர்க்கு அழகு?" என்றது. அதைக் கேட்டவுடன் நரி, "நீ சொல்வதெல்லாம் சரி தான்; நான் சிநேகிதருக்கு உரிமையாகப் பாடு படக் கூடியவன்தான்; ஆயினும், இன்றைக்கு எனக்கு விரத தினம்; ஆகையால் இந்தத் தோல் வலையைத் தீண்டுதல் கூடாது. இன்று போய், நாளைக்கென்ன சொன்னாலுங் கேட்பேன்; எது சொன்னாலும், செய்வேன்; என்னை வேறு விதமாக நீ நினையாதே; நான் சிநேகிதருக்காக உயிரையும் கொடுக்கத் தக்கவன்; இந்த இழவு விரதம் வந்து இப்போது உனக்கு உதவாம லிருக்கும்படி என்னைச் செய்து விட்டது!" என்று சொல்லிக்கொண்டே, அதன் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துகொண்டு, மான் இறந்துபோகும் சமயத்தை எதிர் பார்த்திருந்தது.

இதனைக் கேட்ட மான் நரியினுடைய தந்திரத்தைத் தெரிந்துகொண்டு கவலையுடன் கண்கலங்கி இருந்தது.

இப்படி இருக்கும்போது அன்றிரவு மான், சண்பக வனத்திற்குச் செல்லாதபடியால், காகம் கவலை கொண்டு, பல விடங்கட்குப் பறந்து சென்று, மானைத் தேடி, அது வலையிற் சிக்கிக்கொண்டு இருப்பதைப் பார்த்து, உடனே அதனை நோக்கி, "நண்பனே, உனக் கெவ்வாறு இந்த அவஸ்தை நேர்ந்தது? என்று வினவ, மான் "உன்னுடைய வார்த்தையைக் கேளாததனுல் இந்தத் துன்பம் சம்பவித்தது; குத்திர புத்தி வஞ்சனையாக என்னை இவ்வலையிற் சிக்க வைத்துவிட்டான்," என்று சொல்லி வருந்தியது. அதன்மேல் காகம், "உன்னுடைய சிநேகிதனுகிய அந்தச் சம்புகனென்னும் வஞ்சகன் எங்கே?" என்று வினவ, அது, அந்தச் சண்டாளன் இவ்வாறு என்னை வலையிற் சிக்க வைத்துவிட்டபடியால், இனி நான் இறந்த பிறகு என் இறச்சியைத் தின்னலா மென்று கருதி, இங்கே ஓரிடத்தில் ஒளித்துக்கொண்டு இருப்பான்," என்று நரியின் தந்திர வார்த்தைகளையுங் கூறிற்று. அதைக்கேட்டுக் காகம், 'தனக்கு நன்மைசெய்கிற சிநேகிதனுடைய வார்த்தையைக் கேளாதவனுக்குச் சீக்கிரம் துன்பம் வரும்; அதனுல் சத்துருவுக்குச் சந்தோஷமுண்டாகும்,'' என்று சொல்லிக் கவலைப் பட்டுக்கொண்டு இருந்தது.

அத்தருணத்தில் கொல்லைக்காரன், கையிலொரு பெருந்தடியை எடுத்துக்கொண்டு, வலையில் மான் சிக்கியிருக்கிறதா இல்லையாவென்று பார்க்கும் பொருட்டு வலையை நோக்கிவந்தான். அவன் அப்படிவரவே, காகம், மானை விடுவித்தற்கு ஒருபாயத்தைச் சீக்சிரமாக ஆலோசித்துத்

தெரிந்துகொண்டு, அதை அப்படியே செய்யக் கருதி, மானை நோக்கி, "மித்திரா, உன்னை விடுவித்தற்கு நான் ஒரு தந்திரம் கண்டு பிடித்திருக்கிறேன்; அப்படிச் செய்தால், நீ சீக்கிரம் இந்த ஆபத்தினின்றும் நீங்குவாய்; கொல்லைக் காரனே, சமீபத்தில் வருகின்றான்; நீ இப்போது சுவாசத்தை அடக்கிக்கொண்டு செத்தவனைப்போலே கிட; அவன் வந்து உன்னைப் பார்த்து, நீ இறந்துவிட்டாயென்று நினைத்து, உன்மீது சிறிதும் சந்தேகங் கொள்ளாமல், உன்னை வலையினின்றும் நீக்கி விட்டு, வலையைப் பிடுங்கிச் சுருட்டிப் பக்கத்தில்வைக்கச் செல்வான்; நான் அத்தருணத்தில் உரக்கக் கத்துவேன்; என்னுடைய சப்தம் வெளிப்பட்டவுடனே நீ எழுந்து விரைவாக ஓட்டம்பிடித்துவிடு," என்று சொல்ல, மான் அவ்வாறே செய்தது. கொல்லைக்காரன் வந்து, மான் செத்ததென் றெண்ணிச் சந்தோஷமாக வலையைப் பிடுங்கிச் சுருட்டி வேறோரிடத்தில் வைக்கப்போனான். உடனே காகம் கத்தியது. மான் எழுந்து ஓட்டம் பிடித்தது. அதைப் பார்த்தவுடனே கொல்லைக்காரன் வயிற்றெரிச்சல்கொண்டு, 'ஆ! ஆ!! இந்த மானுக்கு எவ்வளவு தந்திரம் இருக்கிறது!' என்று மிக்க கோபத்துடனே தன் கையிலிருந்த தடியை வீசி மானை நோக்கி யெறிந்தான். மான் எட்டாமற் போய்விட்டபடியால், அத்தடியானது, பக்கத்தில் மறைந்திருந்த நரியின் தலையிற்பட, அது மூளைசிதறி இறந்தது. நரி வஞ்சனை செய்தபடியால், அஃது இறந்தொழிய, வஞ்சனையற்ற காகமும் மானும் நெடுங்காலம் சுகத்துடன் வாழ்ந்தன.

4. புதியவனாக வந்தவனுடைய தன்மையை உணராமல், அவனோடு சிநேகங் கொள்ளலாகாது.

சடுதியில்வந் தவனிடத்தில் குலங்குணங்கள்
உணராமல் சார்ந்து நேயத்
தொடுபழக லாகாதங் ஙனம்பழகின்
உகலத்திற் சூதே கொண்டு
கெடுதிபுரி பூனைதனக் கிடங்கொடுத்த
கிழக்கழுகு கிலேச முற்றுப்
படுமரண மடைந்தபடி கேடுவரும்;
வாழ்வுகுன்றும்; பலமும் போமே.

(இ - ள்.) *திடீரென்று நூதனமாக வந்து சேர்ந்த ஒருவனிடத்திலே, அவனுடைய குலத்தினியற்கை, குணத்தினியற்கை முதலியவற்றை அறிந்துகொள்ளாமல், நேயத்துடனே பொருந்திப் பழக லாகாது; அங்ஙனம் பழகினால், இந்தப் பூமண்டலத்திலே, மனத்தில் வஞ்சனையையே கொண்டு தீங்கு செய்கின்ற ஒரு பூனைக்கு இடங் கொடுத்த கிழத் தன்மை பொருந்திய கழுகு கவலை யடைந்து மரணத்தை யடைந்த விதம்போல, கெடுதி வந்து சம்பவிக்கும்; வாழ்வு குறைந்துவிடும்; முன் ஏற்பட்டிருந்த வலிமையும் போய்விடும்.*

பூனைக்கு இடங்கொடுத்துக் கெட்ட கழுகின் கதை.

பாகிரதி தீரத்திலுள்ள திரிகூடம் என்னும் மலையின் சார்பி லிருந்த ஒரு புதிய அத்திமரப் பொந்தில், நகமுங் கண்ணுமில்லாத சரற்கவன் என்னும் ஒரு கிழக் கழுகு குடியிருந்தது. அது கிழத் தன்மையினால் இரைதேட முடியாம லிருப்பதை யுத்தேசித்து, அங்குள்ள மற்றப் பறவைகளெல்லாம் அதன்மீ திரக்கம் வைத்துத் தங்களுடைய ஆகாரத்திற் கொஞ்சம் கொஞ்சம் மீதிப் படுத்தி அதற்குக் கொடுத்துக்கொண்டு வந்தன. அதனால், அது அம்மரத்திலேயே அமர்ந்துகொண்டு சுகமாக ஜீவித்திருந்தது.

இப்படி இருக்குங் காலத்தில், ஒரு நாள், நெடுஞ் செவியன் என்னும் ஒரு பூனை அங்குள்ள பறவைகளின் குஞ்சுகளைத் தந்திரமாகத் தின்னக் கருதி, அந்த மரத்தினடியிற் சென்றது. அதைக் கண்டவுடனே அங்கு இருந்த பறவைக் குஞ்சுகளெல்லாம் பயந்து, பெருங் கூச்ச லிட்டன. அப்போது அங்கிருந்த கிழக் கழுகு, அவ்விரைச் சலைக் கேட்டு, அக்குஞ்சுகளை நோக்கி, "நீங்களேன் பயப் பட்டுக் கூச்சலிடுகின்றீர்கள்? இங்கே எவன் வந்தவன்?" என்று சப்தமிட, பூனை அக்குரலைக் கேட்டு, 'அப்பா! நான் செத்தேன்!' என்று திடுக்கிட்டுப் பயந்து, தான் அங்கு இருந்து தப்பி யோடுவதற்கு முடியாமையால், 'இந்தக் கழுகோ, நமக்குக் கொடிய விரோதி; இப்பொழுது இவனிடம் வந்து அகப்பட்டுக் கொண்டோம்; நமக்கோ, தப்பியோடுவதற்கு மார்க்கமில்லை; ஆதலால், இவனிடம் நெருங்கித் தந்திரமாக இவனுடைய சிநேகத்தைப் பெற்றுக்கொண்டு, பிறகு நாம் எண்ணிய காரியத்தை முடிக்க வேண்டும்; நாம் பயந்தோடி விட்டால், கஷ்ட முண்டாவதோடு, ஒரு பயனு மில்லாமற் போம்," என்று சிறிது தைரியங்கொண்டு, அந்தக் கழுகின் சமீபத்திற் சென்று, " ... டையவனே, உனக்கு மிக்க வந்தனம் ... என்று நமஸ்கரிக்க, கழுகு, 'நீ யார்?' ... வினவிற்று. அதற்குப் பூனை, "நான் நெடுஞ்செவியனென்னும் பூனை; உன்னுடைய சிநேகத்தைப் பெற்று உன்னிட மிருக்கலாம் என்றெண்ணி வந்தேன்," என்று சொல்ல, உடனே கழுகு மிக்க கோபங் கொண்டு, நீ மிகவும் துஷ்டன்; இவ்விடத்திலிருந்தால் தகாது, சீக்கிரமாக இவ்விடத்தை விட்டுப் போய்விடு. இல்லாவிடில், இறந்து ஒழிவாய்," என்றது. அதைக் கேட்டுப் பூனை, "கழு

கரசனே, நான் என்னுடைய விருத்தாந்தத்தைச் சிறிது கூறுகிறேன்; அதைக் கேட்டுக் கொண்டு பின்பு என்னைக் கொல்வதானுற் கொல்லு; விட இஷ்ட மிருந்தால் விடு; சாதி இயல்பை உத்தேசித்து ஒருவனைக் கோல்வதாவது புசிப்பதாவது கூடாது; ஒருவனுடைய நடக்கையை மாத்திரம் கவனித்து அதற்குத் தக்கது செய்ய வேண்டும்; என்னோடு பழகினல்,என் நடத்தை உனக்குத் தெரியும்; அதன் மேல் எனக்கு நீ நன்மையாவது கெடுதியாவது செய்யலாம்,'' என்றது. பின்பு கழுகு சிறிது சாந்த மடைந்து, பூனையை நோக்கி, "நீ எதற்காக இங்கே வந்தாய்?" என, அந்தப் பூனை, "ஐயா, நான் கங்கையில் நித்திய ஸ்நானம் பண்ணிச் சாந்திராயண முதலிய விரதங்களை அனுஷ்டித்துக்கொண்டிருக்கின்றேன்; நீ தரும சீலனும், சாஸ்திர விற்பத்தி யுடையவனும், வயதில் முதியவனு மிருக்கின்ருயென்று பல பக்ஷிகளும் சொல்லக் கேட்டு, உன்னிடம் தரும சாஸ்திரங் கேட்டுக்கொள்ளலாமென வந்தேன்; நீயோ, அதற்கு மாருகத் தருமத்தைக் கைவிட்டு, என்னைக் கொல்லத் துணிவு கொண்டாய்; இல்லறத்தார்க்கு இது தகுதியான ஆசாரமன்று. சத்துருக்கள் தங்கள் வீட்டிற்கு வந்தாலும், சாதுக்களா யிருப்பவர்கள் [illegible] வர்க[illegible] சாரம் புரிவார்கள்; மரம் தன்னை வெட்[illegible] விரோதம் பாராட்டாமல் நிழலைக் கொடுக்கிறது; இ[illegible] சாதுக்கள், தங்கள் வீட்டிற்கு யார் வந்தாலும் அவர்களுக்கு இதம் பண்ணுவார்கள்; விடுதேடிவந்த அதிதியை முகம் வாடிப்போகச் செய்தால், அவ்வாறு செய்தவனுக்கு அந்த அதிதியினுடைய பாவமெல்லாம் வந்து சேரும். அவனுடைய புண்ணிய மெல்லாம் அதிதிக்குப் போய்ச் சேரும்; இதை உத்தேசித்துத்தான் சாதுக்கள் தங்கள் வீட்டிற்கு எவர்

வந்தாலும், அவர்களை உபசரிக்கும் வழக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள்; இன்னும், சந்திரன் சண்டாளர் வீட்டிலும் தன்னுடைய பிரகாசத்தைப் பரப்புகிறான்; இதுபோல் சாதுக்கள் தங்களுக்கு விரோத மானவரிடத்திலும் நன்மை செய்வார்கள்; ஆதலால், இவற்றை யெல்லாம் நீ நன்றாக ஆராய்ந்து, என்னை உன்னிடத்திற் சேர்த்துக்கொண்டு, எனக்கு நன்மை செய்ய வேண்டும்,'' என்று பல தந்திர நீதி வாக்கியங்களை எடுத்துரைத்தது.

இவற்றையெல்லாங் கேட்டவுடன் கழுகு, "நீ சொல்வதெல்லாம் சரிதான்; ஆயினும், உயிர்களைக் கொல்வதும், இறைச்சியைத் தின்பதும் உன்னுடைய சாதித் தொழிலாயிருக்கின்றதே! அதை உத்தேசித்துத்தான் உன்னை இங்கே சேர்த்தால் கெடுதி வருமென்று நான் இவ்வாறு கூறினேன்,'' என்று சொல்ல, நெடுஞ்செவியன் மகா சாதுபோல, பூமியைத்தொட்டு, 'சிவ சிவ!' என்று சொல்லிச் செவிகளின்மேற் கையை வைத்துக்கொண்டு, "கழுகரசனே, நான் அற நூல்களை நன்கு உணர்ந்து, கொலை செய்தல் முதலிய துர்க்குணங்களை யெல்லா மொழித்து, மிகுந்த வைராக்கிய சித்தத்தை அடைந்திருக்கின்றேன்; கொலை செய்வது மகா பாதகமென்று அநேக சாஸ்திரங்கள் கூறுகின்றன; மற்றோருயிரைக் கொன்று, அதன் தசையைத்தின்று, தங்கள் உடலை வளர்ப்பவர்கள், நிச்சயமாக நரகத்தை அடைவார்கள்; நான் இவ்விஷயங்களை யெல்லா முணர்ந்து, கொலை செய்வது பாதக மென்று தெரிந்து, அதனை நீக்கி, வனத்தில் சஞ்சாரம் பண்ணிக் காய் கனி கிழங்குகளைத் தின்று ஜீவித்து வருகின்றேன்; இத்தகைய நான் எவ்வாறு கொலை செய்வேன்? என் ஜாதி சுபாவம் கெட்டதானு

லும், நான் அப்படி இரேன்; கெட்ட குலத்திலும் எத்தனையோ உத்தமர்கள் உதிக்கின்றார்களே! இவ்விஷயம் உனக்குத் தெரியாதா?" என்று தன்மேல் நம்பிக்கை வரும்படி பல வார்த்தைகளைக் கூறிற்று. பிறகு கழுகு, அதன் வார்த்தைகளால் ஏமாந்து, தன் வீட்டிலிருக்கும்படி பூனைக்கு இடங்கொடுத்தது. பூனையும் அங்கேயே தங்கித் தந்திரமாக வசித்துக்கொண்டு வந்தது.

இப்படி வசித்து வருங் காலத்தில், அந்த உருத்திராக்ஷப் பூனை, தன்னுடைய உத்தேசப்படி பறவைக் குஞ்சுகளை இரகசியமாகப் பிடித்துத் தின்னத் தலைப்பட்டு, ஒவ்வொரு நாளைக்கும் ஒவ்வொரு குஞ்சாகக் கொண்டு வந்து, கழுகின் பொந்திலிருந்து தின்று, அவற்றின் எலும்புகளையும் உரோமங்களையும் அவ்விடத்திலேயே போட்டுக்கொண்டு வந்தது. இப்படி நெடுஞ்செவியன் பறவைக் குஞ்சுகளை இரகசியமாகத் தின்றுகொண்டு வரவே, ஒவ்வொரு நாளும் குஞ்சுகள் காணமற் போவதைப் பற்றிப் பறவைகளெல்லாம் கூடித் துக்கித்து, இந்தக் களவை அறியவேண்டுமென்று பலவிடங்களிலும் சோதிக்கத் தொடங்கின. அதைக் கண்டவுடனே பூனை, "இனி இங்கே இருந்தால், நம்முடைய இரகசியம் வெளிப்பட்டுவிடும்; நம்முடைய திருட்டை யறிந்தால், பறவைகளெல்லாங் கூடி நம்மைக் கொல்லும்; ஆதலால், இரகசியமாக இவ்விடத்தை விட்டு ஓடிப்போவதே நலம்," என்று கருதிக் கழுகினிடம் சொல்லாமலே அவ்விடத்தை விட்டு மறைந்து ஓடிப்போயிற்று. அஃது ஓடிப்போனவுடன் மேற்கூறியபடி சோதிக்கத் தொடங்கின பறவைகளெல்லாம் பல விடங்களையும் பார்த்துக்கொண்டு வந்து, முடிவில் கழுகு இருக்கும் பொந்தில் பார்த்தன. அங்கே

பூனையாற் போடப்பட்ட குஞ்சுகளின் எலும்புகளும் உரோமங்களும் மிகுதியாகக் கிடந்தன. அவற்றைப் பார்த்தவுடனே பறவைகளெல்லாம் தங்கள் குஞ்சுகளை அந்தக் கழுகே கொன்று தின்றுகொண்டு வந்திருக்கின்றது என்று எண்ணி, மிகுந்த கோபங்கொண்டு, "இந்தப் பாவிக்கு நாம் தினந்தோறும் ஆகாரங்கொடுத்துவளர்த்து வந்தும், அந்த நன்றியைச் சிறிதும் நினைக்காமல், நம்முடைய குஞ்சுகளை யெல்லாம் இரகசியமாகத் தின்று வந்திருக்கின்றான். இனி இந்தச் சண்டாளனை இவ்விடத்தில் வைத்திருக்க லாகாது; கொல்லுங்கள்! கொல்லுங்கள்!!" என்று சொல்லி அதன்மேற் பாய்ந்து, மாறி மாறி மூக்கினால் அதன் சிரசிற் குத்திப் பலவாறு துன்பப்படுத்தின; கழுகு தான் அக்காரியம் செய்யவில்லை யென்று எவ்வளவோ கூறியும், பறவைகள் கேட்கவில்லை; மேலும் மேலும் பலமாக அதன்மேற் பாய்ந்து போர் புரிந்தன. அந்தோ! அக்கழுகு தன்னால் ஒன்றும் செய்ய வியலாமல், சிறிது நேரத்திற்குள் உயிர் விட்டது.

5. செல்வத்தின் பெருமை.

செல்வம் பெரிது! செல்வம் பெரிது!!
தொல்லுல கதனில் சுகந்தரும் நிதியம்;
அருநிதி பெற்றோர் அற்பர் ஆயினும்,
பெருமிதச் செயல்கள் பிறங்கிடப் புரிவர்;
மதியும் வலியும் வாய்ந்துள ரேனும்,
நிதியிலார் தங்கள் நெஞ்சகம் நினைக்கும்
அற்ப வினையும் ஆற்றுதற் கியலார்;
முற்புரி வல்லமை முழுவதும் இழப்பர்
இச்செயல் தனையோர் எலிக்கதை யாலுணர்ந்
திச்சையாம் பொருள்மிக எய்துமின் உலகீர்!

(இ - ள்) உலகத்திலுள்ள மனிதர்களே, பழமையான இந்த உலகத்திலே செல்வமே மிகவும் பெரிது; பொருளே சுகத்தைத் தரும். கிடைத்தற்கரிய திரவியத்தைப் பெற்றவர்கள் வலிமையற்ற அற்பர்களா யிருந்தாலும், களிப்பு மிகுந்த பெரிய செய்கைகளை யெல்லாம் விளங்கும்படி செய்வார்கள்; கையிற் பொருளில்லாதவர்கள், விவேகமும் வலிமையும் பொருந்தின வர்களா யிருப்பினும், தங்களுடைய மனத்திலே நினைக்கும் சிறு காரியத்தையும் செய்வதற்கு வல்லமை யுடையவராகமாட்டார்கள்; முற்காலத்திலே தாங்கள் செல்வ வந்தர்களா யிருக்கும் போது செய்த வல்லமையான காரியங்க ளெல்லாவற்றையும் செய்ய முடியாது கைவிடுவார்கள்; ஆதலின், இந்தத் திரவியத்தின் உயர்ந்த செய்கையை ஓர் எலியின் கதையினலே தெரிந்து கொண்டு, விருப்பமான பொருளை மிகுதியாகத் தேடுவீராக.

எலியின் கதை.

இரணியகன் என்னும் ஓர் எலியானது சம்பகாவதி என்னும் பட்டணத்திலிருந்து சூடாகர்ணன் என்னும் சன்னியாசியின் மடத்தில் வாசஞ் செய்துகொண்டிருந்தது. அஃது அங்ஙனம் வாசஞ் செய்வதற்கு வளை தோண்டுங் காலத்தில் அளவற்ற செல்வத்தைத் தேடி அதற்குள் தனக்கு மூல தனமாக வைத்துக்கொண்டு இருந்தபடியால், அது செருக்குற்றுத் தன் குல வியற்கைக்கு மேற்பட்ட வல்லமை யுடையதாய்ச் செருக்குடன் உலாவி, அந்தப் பரதேசி உண்டு மிகுந்த சோற்றை எவ்விடத்தில் வைத்தாலும் தாவித் தின்று, அவனுக்குத் தினந்தோறும் உபத்திரவத்தை உண்டாக்கிக்கொண்டிருந்தது. அதனல், அவன் மிகுந்த சோற்றை ஒரு பாத்திரத்திற் போட்டு, உயரமாக ஓர் உறி கட்டி, அதன்மேல் வைத்து வந்தான். அப்படி வைத்தும், அது நில்லாமல், அந்த உறியின் மேலும் தாவித் தின்றுகொண்டு வந்தது.

அவன் எவ்வளவு ஜாக்கிரதையாக உறியைக் காப்பாற்றிக் கொண்டு இருந்தாலும், எலி திடீரெனத் தாவிச் சோற்றை வாரிக்கொண்டுபோய்விடும்; அதனால் அவன் ஒருகோலைக் கையில் வைத்து, படுக்கும் போதும் இருக்கும் போதும் உறியின் பக்கமாக எலி பயப்படும் பொருட்டுத் தட்டிக் கொண்டே இருக்கத் தலைப்பட்டான். அவ்வாறு தட்டிக் கொண்டு இருக்குங் காலத்திலும், அஃது இடையிடையிற் பாய்ந்து, சோற்றைக் கௌவிச் சென்றுகொண்டேயிருந்தது. இந்த வழக்கம் நெடுங்காலமாக நடந்து வந்தது.

இப்படி நடந்துவருங்காலத்தில், ஒருநாள், அந்தச் சூடா கர்ண னென்னும் பரதேசியினிடத்தில் வீணா கர்ணன் என்னும் ஒரு சன்னியாசி வந்து, சத்கதாபிரசங்கம் பண்ணிக்கொண்டிருந்தான். அப்போது சூடா கர்ணன், தன்னுடைய வழக்கப்படியே உறியின் பக்கமாகத் தடியினால் பூமியைத் தட்டிக்கொண்டே அக்கதையைக் கேட்டான். அவனுடைய செய்கையைப்பார்த்த வீணாகர்ணன், அவனை நோக்கி, "நீ, நான் சொல்லும் கதையைக் கவனியாமல் வேறெதையோ கவனித்துப் பூமியைத் தட்டிக் கொண்டு இருக்கின்றாயே! இதற்குக் காரண மென்ன?" என்று வினவ, அவன், "ஐயோ! சாமி, இங்கே ஒரெலியின் தொந்தரவு அதிகமா யிருக்கின்றது; இவ்வளவு உயரத்திலுள்ள உறியில் நான் சோற்றை வைத்திருந்தும் அது வந்து ஒரே பாய்ச்சலில் சோற்றை வாரிக்கொண்டு போய்விடுகிறது; அதன் பொருட்டே இந்தக் கோலைக் கையில் வைத்து, இரவும் பகலும் படுக்கையிலும் இருக்கையிலும் தட்டிக்கொண்டே இருக்கின்றேன்; இதனால், இரவில் நித்திரை கூடச் செய்வதில்லை," என்று சொன்னான். இவ்வாறு சொல்லிக்கொண்டு இருக்கும்போதே எலி ஒரு

முறை பாய்ந்து சோற்றைக் கொண்டு போய்விட்டது. அந்த எலியினுடைய செருக்கையும் துடுக்கையும் பார்த்த அந்த வீணா கர்ணன், "அற்பப் பலமுள்ள இந்த எலிக்கு இவ்வளவு உயரம் தாவும்படியான தன்மை எப்படி வந்தது? இதற் கேதேனுமொரு காரணமிருக்கவேண்டும்; செல்வத்தினாற்றான் இவ்விதச் செருக்குண்டாகும்; இதன் வளையில் செல்வ மிருக்கக் கூடும்; உலகத்தில் திரவிய முள்ளவர்களே திற முள்ளவர்களாக விளங்குவார்கள்; பிறர் செய்ய முடியாத காரியங்களையும் செய்து முடிப்பார்கள். எல்லா அதிகாரத்துக்கும் திரவியமே காரணமா யிருக்கின்றது; இஃதில்லாவிடில் இப்படி நடக்காது. இங்கே வெட்டிச் சோதிக்க வேண்டும்," என்று சூடா கர்ணனுக்குச் சொல்ல, அவன் உடனே மண் வெட்டி கொண்டு வந்து, எலியின் வளையை வெட்டிப் பார்த்தான்; அங்கே ஓரிடத்தில் அளவற்ற செல்வம் இருந்தது; அதைக் கண்டவுடன் வீணா கர்ணன் சொன்னது மெய்தானென்று சந்தோஷித்து, அதை யெல்லாம் எடுத்துத் தன் வசப்படுத்திக் கொண்டு சிறிது வீணாகர்ணனுக்கும் கொடுத்தான்.

மேற்கண்டபடி வெட்டும்போது எலி மற்றொரு பக்கத்திற் போய் ஒளித்திருந்தது; சன்னியாசி திரவியத்தை எடுத்துக்கொண்டு போனவுடன், 'ஐயோ! திரவியம்போய் விட்டதோ, என்னவோ!' என்று மனங்கலங்கித் திரும்பி வந்து பார்த்தது; அங்கே திரவியமில்லாமற் போனதோடு தன்னுடைய வளையும் பலவாறு சிதைந்து போயிருப்பதைக் கண்டு, பெருமூச்சு விட்டது; அந்தப் பெருமூச்சுடனே அதன் வலிமையும் செருக்கும் தொலைந்து போய் விட்டன. அதன்மேல் அது சிறிய வளையொன்று செய்து குடியிருந்துகொண்டு, மறுநாள் உறியிலுள்ள சோற்றை

யெடுக்கும் பொருட்டு அங்குப்போய்த் தாவிப்பார்த்தது. ஒரு முழ உயரங் கூடத் தாவ முடியவில்லை; அதனால், அது மிக்க விசன முற்று, 'நமக்குக் கெட்டகாலம் வந்து விட்டது,' என்று நினைத்து, அங்கே மந்த நடையுடன் உலாவிச் சிந்திக்கிடந்த தானியம் முதலியவற்றைப் பொறுக்கித் தின்று கொண்டு திரிந்தது. இதனை வீணா கர்ணன் பார்த்து, உடனே சூடா கர்ணனுக்கு அதனைக் காட்டி, "இந்த எலிக்கிருந்த மதமெல்லாம் போய் விட்டது; இப்பொழுது தன் குலவியற்கையை அடைந்திருக்கின்றது பார்; பண மில்லாவிட்டால், எவருக்கும் ஒரு விதச் சிறப்பும் இல்லாமற் போகும்," என்று பரிகாசமாகக் கூறினான். இதைக் கேட்டவுடனே எலி மிக்க அவமானத்தையடைந்து, "இனிநாம் இவ்விடத்திலிருப்பது சரியன்று; இதை வேறொருவரிடத்திலும் சொல்லலாகாது. பொருட் சேதத்தையும், கிருக சித்திரத்தையும், மானத்தையும், அவமானத்தையும், ஆயுளையும், திரவிய அளவையும் எவரிடத்திலாகிலும் சொன்னால், தீங்குண்டாகும்; புத்திமான்கள் இவைகளை வெளியிடவே மாட்டார்கள். நமக்கோ, பொருளில்லாதபடியால், முன்னிருந்த பலமெல்லாம் போய்விட்டது; பண மில்லாதவனுக்கு வன வாசமே சிறந்தது; ஒருவன் பணக்காரனா யிருந்த விடத்தில் ஏழையாயிருப்பது கேவலத்துக் கிடமாகும்; நாம் மீண்டும் பணத்தைச் சம்பாதிக்கவேண்டும். இல்லாவிடில் வனவாசத்துக்குச் செல்லவேண்டும்; இப்பொழுது நாம் இழந்த திரவியத்தை மீண்டும் கைப்பற்ற முயற்சி செய்வோம்; அது முடியாவிட்டால், அதன்மேல் காட்டிற்குச் செல்வோம்," என்று பலவாறு யோசித்து, இழந்த செல்வத்தை மீண்டும் எடுத்துக் கொள்ள முயற்சி செய்தது. அதைச்

சூடா கர்ணன் கண்டு, ஒரு நாள் அந்த எலிக்கு மிக்க வேதனையுண்டாகும்படி தடியா லடித்துவிட்டான். அந்த அடி விழுந்தவுடனே எலி, 'இனி இங்கே நிமிஷ நேர மும் இருக்க லாகாது,' என்று அப்பொழுதே காட்டிற் குப் புறப்பட்டுப் போய்ச் சித்திரக் கிரீவன், இலகு, பது னன், மந்திரன், சித்திராங்கன் முதலியவைகளோடு சிநேகங் கொண்டு வாழ்ந்தது.

6. பேதமை யுடையார், பெருநஷ்ட மடைவர்.

பேதமை யுடையார் பெரும்புவி தன்னில்
மன்னவன் புதல்வன் மானுரை கேட்டிஃ
தென்னவோ வெனமனம் ஏங்கிப் பதறிப்
பிணிவாய்ப் பட்டுப் பெருந்துயர் அடைந்தே
அணிபெறும் மானையும் அகற்றிய கதைபோல்
அரிதிற் பெற்ற பொருளையும்
வெருவிப் போக்கி விதனமேய் துவரே.

(இ-ள்.) *அறியாமையை யுடையவர், பெரிய பூமியில் இராஜ புத்திரன் மானினுடைய த்ந்திர வார்த்தையைக்கேட்டு, 'இஃது ஏதோ ஒரு விசித்திரப் பிராணி,' என்று மதித்து, மனம் பதறியழுது, அப்பயத்தினாலே நோயிற் சிக்கிப் பெரிய துன்பத்தை யடைந்து, அழகு பெற்ற அந்த மானையும் தன்னை விட்டு நீக்கித் துரத்தியதைப்போல, அரிதாகத் தாம் பெற்ற பொருளையும் பயந்து கைவிட்டு, விசனத்தை யடைவர்.*

இராஜ குமாரன் மான் பேசக் கேட்டுப் பயந்து, அதனைத் துரத்திவிட்ட கதை.

சித்திராங்கன் என்னும் மானானது, குட்டியாய்த் தன் இனத்துடனே சேர்ந்து திரியுங் காலத்தில், ஒரு தினம், வேடர்கள் வலை கட்டி வளைக்கப் பெரிய மான்க ளெல்லாம் வலையைத் தாவி ஓடிப் போயின; சித்திராங்க

னென்னும் குட்டி மாத்திரம் அவ்வலையில் அகப்பட்டுக் கொண்டது. அது மிகவும் அழகா யிருந்தபடியால், வேடர்கள் அதனை அரசனிடம் சேர்த்தார்கள். அரசன் விளையாடுவதற்கு அதைத் தன் குமாரனிடம் கொடுத்தான். அவன் அதை ஓரிடத்தில் அடைத்து வைத்துப் பிரியமாக வளர்த்து வந்தான். அப்படி அதை வளர்த்து வருங்காலத்தில், அஃது, ஒரு நாள் இராஜகுமாரன் தன்னருகி லிருக்குஞ் சமயத்தில், "இடிமுழக்கம் கேட்டுக் கலங்கிக் காற்றாலும் மழையாலும் துன்பத்தையடைந்து, என் இனமாகிய மான்கள் ஓடும்போது நானும் அவற்றின் பின்னே ஓடுவேனே!" என்று மனித பாஷையில் பேசிற்று.

இதைக் கேட்டவுடனே இராஜ குமாரன், " இது மனுஷனைப் போலப் பேசுகின்றது; ஆகையால், இஃது ஒரு விசித்திரப் பிராணியா யிருக்கலாம்," என்று நினைத்துப் பயந்து வீட்டிற்குப் போய், அவ்வச்சத்தினாலே அன்றிரவு சுர நோய் கொண்டு துன்பப்பட்டு, விடிந்தவுடன் சோதிடர்களை அழைத்து, அவர்களிடம் நடந்த விஷயத்தைச் சொல்ல, அவர்கள், "எல்லா மிருகங்களும் மனிதரைப் போலப் பேசும்; ஆயினும், அவை நமக்கு முன் பேசுவதில்லை; இந்த மான் குட்டியும் உன்னைப் பாராமலே பேசியிருக்கின்றது; இதன்பொருட்டு நீ அஞ்ச வேண்டா" என்றார்கள். இராஜகுமாரன், "அஃதெப்படி யிருந்தாலும் இருக்கட்டும்; அதை நாம் வைத்திருக்கலாகாது," என்று யோசித்து, உடனே அதனை வெளியில் துரத்திவிட்டான். அதுவந்து பின்பு இரணியகன் இலகுபதனன் முதலியவைகளோடு சேர்ந்து சுகமாக வாழ்ந்தது.